Registered as a News Paper


பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 44 | 26 - 01 - ஜனவரி - 2004

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 26.12. 2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# புத்தாண்டின் விதி

ஆங்கிலத்தில் ஒரு பொன்மொழி உண்டு. 'முன்பே முன்னெச்சரிக்கையாக இருப்பது முன்பே ஆயுதம் ஏந்திக்கொள்வதற்கு சமனானது' பாதுகாப்புக்குறித்த இந்தப்பொன் வாசகம் இந்த ஆண்டு முடிவுறும் தறுவாயில் தமிழ்மக்கள் நினைவு கொள்ளவேண்டி வந்ததுதான் இந்த ஆண்டு அடுத்தஆண்டுக்காக அவர்களுக்கு எழுதிய விதியாயிற்று.

தமிழ் மக்களின் துயர்மிகு வரலாற்றில் எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும் பருவகால மழைபோல நியதியாக நிகழ்ந்து வந்ததினாலேதான் எதனையும் அது வெளிப்படுத்தும் தோற்றத்தை விடவும் உள்ளூட்டமாக இருக்கும் அதன் யதார்த்த ரூபத்தை காணும் பிரம்ம ஞானத்தை ஈழத்தமிழ்மக்களுக்குத் தந்தது.

வெளியிலிருந்து ராஜதந்திரிகள் தரிசிக்கும் தமிழ்மக்களின் மனக்கோலம் எப்பொழுதும் அவர்களுக்கு ஏமாற்றத்தையே தந்ததற்கு தமிழ்மக்களின் இத்தகைய வரலாறே காரணம் என்பதை அவர்களால் என்றும் புரிந்துகொள்ளமுடிவதில்லை. இதனாலேயே அதிகம் விளங்கப்படவியலாத மக்கள் கூட்டமாக - புரிந்து கொள்ளப் படவியலாத புதிரான மனவியல்பு கொண்டவர்களாக ஈழத்தமிழர்கள் அவர்களுக்கு தென்பட்டார்கள்.

தமிழ் மக்களைப்பொறுத்தவரையும் நடந்துமுடிந்த இந்த ஆண்டு சமாதான உலகத்தால் எவ்வாறு தோற்றப்படுத்தப்பட்டதெனின்: அவர்களை அறியாமலே நரகத்துள் உழல்ந்த அவர்களின் வாழ்வை சொர்க்கத்தை நோக்கி அழைத்துச் செல்லும் ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட அவர்களுக்கான ஆண்டாக இது அமையப்போகிறது என்பதாகவே இருந்தது. இந்த ஆண்டை எதிர்கொள்வதற்கான சென்ற ஆண்டின் முகவரி அதனால் இவ்வாறே எழுதப்பட்டிருந்தது.

ஆனால், இந்த ஆண்டுநடந்த தமிழ்மக்களை நரகத்தில் இருந்து மீட்டெடுக்கும் சுவர்க்க பயணத்தில், சூட்சுமமான பல மர்ம பாத்திரங்களின் திருமுகங்களை அதன் வெளித்தோற்றங்களைப் புறந்தள்ளி யதார்த்தக்கோலத்தை தரிசிக்க வாய்ப்பளித்தது.

ரணில் விக்கிரமசிங்க சந்திரிகாவின் ஆட்சியில் யுத்தச்சமனிலை மாறிப் போனதை தான் சீர்செய்துவிட்ட 'புத்திமான் பலவான்' தோரணையில் புலிகளுக்கு எதிரான சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் பற்றி இந்த ஆண்டே சிங்கள மக்களுக்கு முரசறைந்தார்.

தமிழ் மக்களின் மீள்குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம் என்ற வியாக் கியானத்தோடு இந்திய ஜெனரல் நம்பியாரின் ஆலோசனைக்கு உட்படுத்தப்பட்டது. உபகுழுக்கள் செயலிழந்து கலைத்துவிடப்பட்டன.

புலிகளின் கப்பல்கள் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து மூழ்கடிக்கப்பட்டது. அது யுத்த நிறுத்த வரைமுறைக்கு எதிரானதாக இருந்தும்கூட நியாயமாக அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய அழுத்தமோ கண்டனமோ அல்லது, புலிகளுக்கு கிடைத்திருக்கவேண்டிய அங்கீகாரமோ அனுதாபமோ கிடைக்கவில்லை.

குரங்குப்பாஞ்சான் புலிகள் முகாம் விவகாரம் பூதாகரமாக்கப்பட்டது. தென்னி லங்கையில் அதைச்சுற்றி ஒரு அரசியல் வியூகமே சமாதானத்திற்கு எதிராக வகுக்கப்பட்டது.

சந்திரிகாவும் கதிர்காமரும் இந்தச்சமாதானத்தில் புலிகளின் நிலை இந்தியாவின் பாதுகாப்பிற்கும் தேசிய நலனுக்கும் அதிக பாதகமானதென பாடத்தொடங்கினார்கள்.

வாஷிங்ரன் மாநாட்டிற்கு புலிகள் அழைக்கப்படாது புறந்தள்ளி வைக்கப் பட்டதனூடாக பேச்சின் இருதரப்பு சமவலுத்தன்மை சிதைக்கப்பட்டது. ஒரு வகையில் இது ஒஸ்லோ தீர்மானத்திற்கு முரணான செயல்.

ரோக்கியோ நிதி மாநாட்டிற்கு புலிகள் வரவேண்டுமென சமாதான உலகம் முடிந்தளவு இராஜதந்திர அழுத்தங்களைப்பிரயோகித்தது. சமாதானத்திற்கான 'வழிகாட்டி வரைபடம்' ஒன்று ரோக்கியோ மாநாட்டில் இரகசியமாகத் தயாரிக்கப்பட்டு அதில் புலிகளிடம் கையெழுத்துப் பெறுவதற்காக சமாதான உலகம் காத்திருந்தது.

விடுதலைப்புலிகள் அர்த்தமுள்ள சமாதானத்திற்காக இடைக்கால நிர்வாகத்தை கோரினர். வரைபுகள் திருப்தி அளிக்காத போது மாற்றீடாக தமது ஆலோசனை வரைபை முன்வைத்ததன் மூலம் ராஜதந்திர உள்நோக்கமற்ற சமாதான முயற்சியில் தமக்குள்ள விசுவாசத்தையும் நேர்மையையும் வெளிப்படுத்தினர். அதன் அடிப் படையில் பேச்சுக்களைத்தொடங்க அழைப்பு விடுத்தனர்.

தென்னிலங்கை தனது அரசியல் சுயரூபத்தை புலிகளின் வரைபிற்கு பின்னால் வெளிக்காட்டியது. அதிகாரம் இரண்டுபட்டுப்போனது. இரண்டிற்கும் பின்னால் உள்ள சக்திகளின் பலத்தில் அவை ஒன்றுசேர முடியாமல், சமரசம் காணமுடியாமல் தத்தளிக்கின்றன.

ஆண்டின் தொடக்கத்தில் பேரொளியொன்று தமிழ் மக்களை சுவர்க்கத்திற்கு அழைத்துப்போக வந்துவிட்டதாக தோற்றப்படுத்தியபோது தமிழ் மக்கள் வியப்பில் எப்படி ஆழ்ந்து போகவில்லையோ அவ்வாறே இந்த ஆண்டின் மேற்சொன்ன இத்தனைக்கும் பின் தமிழ் மக்கள் சலனமற்று இருக்கின்றார்கள். "முன்னெச் சரிக்கையோடு இருப்பது முன்னாயுதம் ஏந்துவதற்கு சமனானது". அவர்கள் தமது ஆயுதத்தை கைவிடாமலேயே அடுத்த ஆண்டிற்கு கை நீட்டுகிறார்கள்.

## தூரனின் பார்வையில்

# ஒன்றுமே இல்லாத ஒரு பிரதமரும்...
# ஒன்றையும் விடாத ஒரு சனாதிபதியும்...



சிறிலங்காவின் நாடாளுமன்றம் கிட்டத்தட்ட முற்றாகவே செயலிழந்து விட்டதென்றால் மிகையில்லை.

இன்னும் தெளிவாகச் சொல்வதானால் சனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்லதைப் பயன்படுத்தி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட, அதுவும் தனது தலைமையிலான பொ.ஐ.முன்னணியை நேருக்குநேர் மோதலில் தோற்கடித்து தெரிவுசெய்யப்பட்டார் - அரசாங்கத்துக்கு அதற்குரிய - அரசொன்று சுயாதீனமாக இயங்குவதற்கு அவசியமான - அதிகாரங்களை உரியமுறையில் வழங்காது கொடுத்த - அதுவும் மனமின்றிக்கொடுத்த அதிகாரங்களையே - மீளவும் பறிதுக்கொண்டு அதனைச்செயலிழக்கப் பண்ணிவிட்டார் என்றே கூற வேண்டும்.

இப்போது ரணில் தலைமையிலான அரசிடம் இருக்கும் ஒரே வலுவான அமைச்சு நிதியமைச்சு மட்டும் .

இந்த அமைச்சின்பொறுப்பும் முன்னைய ஆட்சிக்காலத்தின்போது சந்திரிகாவின் வசமேயிருந்தது.

இப்போதும் அந்த அமைச்சையும் - தன்வசமாக்கிக்கொள்ளும் அதிகாரபலம் சந்திரிகாவுக்கு இருக்கவே செய்கிறது. ஆனாலும் அவர் இப்போது அதை எடுத்துக்கொள்ள மாட்டார். அதற்கும் காரணம் இருக்கவே செய்கிறது.

கடந்த சில வாரங்களின் முன்னர் பிரதமர் ரணில் நாட்டில் இல்லாத சமயம் ஒரு அதிரடி நடவடிக்கையை சட்டபூர்வமான ஒரு அரசியல் சதியாகவே மேற்கொண்டு ஐ.தே.முன்னணி அரசின் மூன்று முக்கிய அமைச்சுக்களின் பொறுப்பை ஒருநீண்டகால திட்டத்தின் பின்னர் அபகரித்துக் கொண்டவுடனேயே ரணில் தலைமையிலான அரசு 'ஊனமுற்ற' அதாவது வலுவற்றஒரு அரசாக மாறி விட்டது.


சந்திரிகாவுக்கு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவும் கூடாது, மேற்கொள்ளாமல் இருக்கவும் முடியாது என்ற நிலையிலேயே வேறுவழியின்றி அந்தச் சதியை கோழைத்தனமான முறையில், சன நாயகத்தை ஊதாசீனம் செய்துவிட்டு மேற்கொண்டபோதே, அவரின் மேலாதிக்க பதவி வெறிச்சுபாவம் பகிரங்கமாகி விட்டது.

> உள்சக்திகளின் ; நோக்கம் ரணிலின் ஆட்சிக்கு நெருக்கடிகளைக் கொடுத்து அதனை பதவியிலிருந்து அகற்றுவது தான் என்றால் வெளிசக்தியின் நோக்கம் மேற்கு - மற்றும் ஐரோப்பிய சமூகத்தின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதேயாகும்.
>
> ஆகவே ஒரே நடவடிக்கையின் மூலம், இரு சக்திகளையும் அவரவரின் ஆலோசனை மற்றும் விருப்பத்திற்கேற்ப திருப்தி செய்து சமாளிக்க முயன்ற சந்திரிகாவின் யுக்திகள் அவரை பொறியொன்றிற்குள் தள்ளும் வியூகமாகவே மாறிவருகின்றன.

அவர் இத்தகையதோர் நடவடிக்கையை தொலைநோக்குச் சிந்தனையுடன் மேற்கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். அந்த நடவடிக்கை சரியா பிழையா என்ற கேள்விகளை விடவும் அது சரியான நேரத்தில் சரியான கணிப்பீட்டுடன் மேற்கொள்ளப்பட்டதா? என்ற கேள்வியே முக்கியமானதாகும். இந்தக்கேள்விக்கு விடை இல்லை என்பதேயாகும்.

ரணில் அமெரிக்கா செல்லும் முன்னர் - விடுதலைப்புலிகள் தமது இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்டவரைபினைக் கையளிக்கமுன்னர் சந்திரிகா இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தால், அதற்கு அவர்கூறிய காரணங்கள் ஒரு சில சதவீதமேனும் பொருத்தமாக இருந்திருக்கக்கூடும். ஆனால் அந்தளவுக்கு சுயஅரசியல் விவேகம் அவருக்கு இருக்கவில்லை.

எனவேதான் அவரின் இந்த



நடவடிக்கையானது அவரை ஓர் அரசியல் சபை குழப்பியாகவும், சமாதானம் கொல்லியாகவும், பதவி வெறிகொண்ட சர்வாதிகாரியாக வும் மட்டுமல்ல, அரசியல் ஞானமோ, தொலைநோக்கு சிந்தனை அற்ற ஒருவராகவும் அடையா யாளப்படுத்தி விட்டது.

(23ம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தை தவிர வேறு தெரிவுகள் உண்டா?

**சனாதிபதி** சந்திரிகா பாதுகாப்பு அமைச்சைப் பொறுப் பெடுத்தபின் நாட்டில் நடப்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு விசயம் மிகத்தெளிவாகத் தெரியவரும். அதாவது அவர் மெய்யான அர்த்தத் தில் இப்பொழுது சமாதானத்தின் நண்பியா? அல்லது எதிரியா? என்பது.

முதலாவதாக, கிறிஸ் பற்றனின் வன்னிவருகை. பாதுகாப்பு மந்திரி என்றவகையில் சனாதிபதி நினைத்திருந்தால் பற்றனின் வன்னி வருகையைத் தடுத்திருக்கமுடியும். ஆனால் அவர் அப்படிச் செய்ய வில்லை. இதையே ரணில் செய்திருந் தால் அது ஒரு பெரிய விவகாரம் ஆகியிருந்திருக்கும் அநேகமாக சந்திரிகா கிறிஸ்பற்றனைச் சந்தித் திருக்கமாட்டார். ஆனால் அவர் பாதுகாப்பு மந்திரியாக இருக்கும்போது கிறிஸ் பற்றனின் வன்னி வரு கையை அவர் தடுக்கவில்லை. அல்லது தடுக்கமுடியவில்லை.

இரண்டாவது, குரங்குப் பாஞ்சான் விவகாரம். முன்பு பாது காப்பு அமைச்சு ரணில் அரசாங்கத் திடம் இருந்தபோது இது ஒரு மிகப்பெரிய சர்ச்சையாக எழுந்தது. ஆனால் இப்பொழுது சந்திரிகா அதைப்பற்றி அலட்டிக்கொள் வதேயில்லை. முன்பு குரங்குப் பாஞ்சான் முகாம் நாட்டின் பாது காப்புக்கு அச்சு றுத்தல் என்று கூச்சலிட்டவர்கள் இப்பொழுது ஏன் அமைதியாக இருக் கிறார்கள்? அதுவும் பாதுகாப்பு அமைச்சு சந்திரிகாவிடம் இருக்கும் போது?



மூன்றாவது, முன்னாள் யாழ்மாவட்டத்தளபதி சரத் பொன் சேகாவின் இடமாற்றம்.

உயர் பாதுகாப்பு வலயங் கள் விசயத்தில் கதாநாயக அந் தஸ்துக்கு உயர்த்தப்பட்டவர் சரத் பொன்சேகா, இப்பொழுது அதிகம் பரபரப்பின்றி வேறு பொறுப்புக்கு இடம்மாற்றப்பட்டிருக்கிறார். அவரு டைய இடத்துக்கு முன்பு வவுனியா வில் தளபதியாக இருந்த சுசில் சந்திரபால வந்திருக்கிறார். முன்பு, உயர்பாதுகாப்பு வலயங்கள் விசயத் தில் விட்டுக்கொடுப்பின்றிக் காணப் பட்ட சரத் பொன்சேகாவின் மீது ரணில் அரசாங்கம் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாமலிருந்ததாகக் கூறப்பட்டது. சரத் பொன்சேகாவை எதிர்க்கட்சிகளும் சனாதிபதியும் ஆதரித்து பலப்படுத்தியதாகவும் கூறப் பட்டது. ஆனால் இப்பொழுது பாது காப்பு அமைச்சு சனாதிபதியிடம் வந்துவிட்டபிறகு சரத் பொன்சேகா திடீரென்று இடமாற்றம் செய்யப்பட்டி ருக்கிறார். அவரது இடத்துக்கு வந்திருப்பவர் மக்களுடன் ஓரளவு நல்லுறவைப் பேணும் ஒரு தளபதி என்றும் கூறப்படுகிறது. அதோடு புலிகளுடனும் சுமுக உறவைப் பேணிய வர் என்றும் கூறப்படு கிறது.



முன்பு பேச்சு வார்த்தைகள் நகரத் தடையாயிருந்த ஒரு கடும்போக்குத் தளப தியை இடம்மாற்றி அவருடைய இடத் துக்குப் புலிகளுடன் ஒப்பீட்டளவில் சுமுக உறவைப் பேணும் ஒருவரை நியமித்த தன் மூலம் சந்திரிகா காட்ட விரும்பும் சமிக்ஞை என்ன?

நாலாவது, அண்மையில் அம்பாறையில் நடந்த ஒரு சந்திப்புப் பற்றி யது. இச்சந்திப்பில் புலிகளும் அதிரடிப் படையினரும் சில உடன்பாடுகளுக்கு வந்திருப்பதாக ஒரு தகவல் கிடைத்திருக் கின்றது. இதன்படி, சர்ச்சைக்குரியதும் சனங்களைப் பலியிட் டதுமாகிய காஞ்சிரங் குடா முகாம் தொடர் பாகவும் சில சமரசங் கள் எட்டப்பட்டிருப்ப தாகக் கூறப்படுகிறது. இது ரணிலின் காலத் தில் நடந்திருக்க முடி யாத ஒன்று. அதோடு பொதுவாகக் கிழக்கில் இப்பொழுது புலிகளுக் கும் படைத்தரப்புக்கும் இடையிலான உறவு ஒப்பீட்டளவில் சுமுக மானதாகக் காணப் படுவதாகவும் கூறப்படு கிறது.

ஐந்தாவது, புலிகளின் வெளிநாட்டுப் பயணங்கள் வழமை போல நடந்துவருவது. முன்பு ரணில் எப்படி ஒழுங்குகளைச் செய்து கொடுத் தாரோ அப்படியே இப்பொழுதும் ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படு வதாகத் தகவலளித்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சில சமயங்களில் ரணிலின் காலத்தை விடவும் இப் பொழுது அதிகரித்த பாதுகாப்பு

**நிலாந்தன்**

ஏற்பாடுகள் செய்து தரப்படுவதாகவும் கூறப்படுகிறது. இது கொழும்புப் பத் திரிகைகளால் கடுமையாக விமர்சிக் கப்படுகிறது.

ஆறாவது, தற்சமயம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்குத் தலைவர் கிடையாது என்பது. ஒரு பதில் தலைவரே அதற்குண்டு, தவிர நோர்வேயும் சமாதான முயற்சிகளில் இருந்து தற்காலிகமாக விலகி நிற் கிறது. இந்நிலையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒப்பீட்டளவில் பலவீனமாகக் காணப்படுவது என்பது தற்சமயம்தான்.

ஆனால் இது எதுவும் யுத்த நிறுத்தத்தைப் பாதித்துவிடாத படி பார்த்துக்கொள்வதில் சந்திரிகா அதிகம் விழிப்போடிருப்பதையே நாட்டு நடப்புக்கள் நிருபிக்கின்றன.

உலகிலேயே, ஒரு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஒப் பீட்டளவில் அதிகம் பலவீனப் பட்டி ருக்கும் ஒரு காலகட்டத்தில் யுத்த நிறுத்தம் இறுக்கமாகக் கடைப்பிடிக் கப்பட்ட மிக அரிதான, மிக நூதன மான ஒரு உதாரணம் இதுவாகத்தான் இருக்கமுடியும்.

இப்படி, இந்த ஆறு விசயங் களையும் இதுபோன்ற ஏனைய விசயங்களையும் தொகுத்துப் பார்க் கும் எவருக்கும் ஒன்று தெரியவரும். இப்பொழுது சந்திரிகா மெய்யாகவே யார் என்பது? அவர் சமாதானத்தின் எதிரியா அல்லது நண்பியா? என்பது.

முன்பு ரணில் அரசாங்கத்தி டம் பாதுகாப்பு அமைச்சு இருந்தவரை சந்திரிகா சமாதானத்தின் எதிரி போலவே தோன்றினார். அவருடைய



பேச்சும் செயலும் சமாதானத்தைக் குழப்பும் விதத்திலேயே அமைந்திருந் தன. ஆனால் பாதுகாப்பு அமைச்சை அவர் பொறுப்பெடுத்ததிலிருந்து நிலைமை தலைகீழாகிவிட்டிருக்கிறது. ஒப்பீட்டளவில் முன்பை விடவும் யுத்த நிறுத்தம் இறுக்கமாகக் கடைப்பிடிக் கப்படுவதுபோல ஒரு தோற்றம் வெளி வந்திருக்கிறது.

இதற்குக் காரணம் என்ன?

இப்பத்தியில் முன்பு பல தட வைகள் கூறப்பட்டது போல மேற்கு நாடுகள்தான்.

இம்முறை சமாதானம் மேற்கு நாடுகளின் தெரிவாயிருக் கிறது. அதை மீறிச் சிந்திப்பதென் றால் யாரும் மேற்குநாடுகளுக்கு எதிராகச் சிந்தித்தால்தான் முடியும்.

இலங்கைத்தீவின் சம்பந்தப் பட்ட இரண்டு பெரிய சிங்கள அரசி யல் கட்சிகளும் மேற்கு நாடுகளை மீறிப்போக முடியாத ஒரு களயதார்த் தமே இப்பொழுது காணப்படுகிறது.

இதற்கு முக்கிய காரணம் கொழும்பில் உள்ள இரண்டு பெரிய கட்சிகளுமே திறந்த சந்தைப் பொரு ளாதாரத்தைத்தான் தமது பொருளா தாரக் கொள்கையாகக் கொண்டிருக் கின்றன.

ரணிலும்சரி, சந்திரிகாவும் சரி இதில் ஒரேயாட்கள்தான் எனவே திறந்த சந்தைப் பொருளாதாரம் என்று வந்துவிட்ட பிறகு மேற்கு நாடுகளைப் பகைத்துக்கொண்டு எதையும் செய்ய முடியாது. இம்முறை சமாதானம் மேற்கு நாடுகளின் விருப்பத் தெரி வாயிருப்பதால் அது முழுக்க முழுக்க திறந்த சந்தை விதிகளுக்குட்பட்ட ஒரு விவகாரம்தான்.

எனவே சந்திரிகா சமா தானத்தை உடைப்பது என்பதுரணிலை பல வீனப் படுத்துவது என்றவரைதான். நிச்சயமாக மேற்கு நாடுகளைப் பகைப்பது என்ற எல்லை வரை போக அவர் துணியமாட்டார். இதில் அவர் மிகவும் விழிப்பாயிருப் பது தெரிகிறது. ரணிலைப் பலப் படுத்தாத ஒரு சமாதானத்தை முன் னெடுக்க அவர் தயாராகவேயிருக் கிறார்.

சமாதானத்தை சந்திரிகா நினைத்தபடி உடைத்துவிட முடியாது என்பதே இப்பொழுது ரணிலுக்குள்ள பலமானபிடி. இந்தத் துணிச்சலால் தான் அவர் சந்திரிகாவுடன் விட்டுக் கொடுப்பின்றி நடந்துவருகிறார்.

சமாதானத்தின் மீது தனக் கொரு பிரகாசமான எதிர்காலம் கட்டி யெழுப்பப்படும் வாய்ப்புகளைத் தவறவிட ரணில் தயாரில்லை.

அதேசமயம் சமாதானத்தை முறித்துக்கொண்டு கொழும்பில் அரசி யல் நடத்த முடியாது என்பது சந்திரி காவுக்கும் நன்கு தெரிந்திருக்கிறது. சமாதானத்துக்கு நோகாமல் ரணிலை வீழ்த்த முடியுமா? என்பது பற்றியே அவர் சிந்தித்து வரு கிறார்.

புலிகளும் இப்போதைக்குச் சமாதானத்தை முறிக்கும் அறிகுறி கள் எதுவும் வெளிப் படையாகத் தெரிய வில்லை. புலிகள் சமா தானத்தை முறிந்துவிடாத படிக்கு அவர்களை சமாதானத்தின் பக்கம் ஊக்குவிக்கும் விதத்திலும், சந்திரிகாவின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் விதத்தி லும் அமெரிக்கா புலிகளின் மீதான தடையை நீக்கக்கூடும் என்பதான ஊகங்கள் ராஜதந்திர வட்டாரங்களில் கசியத்தொடங்கி விட்டன.

எனவே, இலங்கைத்தீவின் சமாதானம் இழுபட்டு இழுபட்டு இன்னும் சில காலம் நீடித்திருக்கும் வாய்புக்களே அதிகமுண்டு. ●

## ஓகோ! அப்படியா!



(சனாதிபதியின் அமைச் சுக்களுக்கான வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத் திற்கு பதிலளித்த போது...) லொக்கு பண்டார

**யானைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று, கதிரைச் சின்னத்தில் போட்டி யிட்டு வெற்றி பெற்ற ஒருவரின் பொறுப்புக்களுக்கு பதிலளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது எனது விதி.**

### ஓகோ !அப்படியா!



கண்டியில் நடந்த கூட்டத்தில் ரத்வத்தை.

**நாட்டின் ஐக்கியத் திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டி ருக்கும் வேளையில் எம்மால் கைகட்டி நிற்கமுடியாது.**

### ஓகோ !அப்படியா!



செய்தியாளரிடம் கதிர்காமர்.

**இசை விழா பார்க் கவே குடும்பத்துடன் சென் னைக்கு சென்றேன்.**

### ஓகோ !அப்படியா!



பொதுக்கூட்டத்தில் சந்திரிகா.

**அமைச்சுப் பதவி களை குத்தகைக்கு எடுத் துக் கொண்டு ஏகபோக வசதி களை அனுபவிக்க முடியாது.**


### ஓகோ !அப்படியா!



மத்துகமகூட்டத்தில் அனுரா.

**ஐ.தே.க, சி.சு.க. இணைவது என்பது இரு ஆண்க ள் மணம் முடித்து குழந்தை பெறச்செய்வது போன்றது.**

### ஓகோ !அப்படியா!



செய்தியாளர் மாநாட்டில் G.L.பீரிஸ்.

**சமாதானப்பேச்சு நடத்துவதற்கு யார் பொறு ப்பு என்று விடுதலைப்புலிகள் கேட்கிறார்கள். நாம் பதில் சொல்ல வழியில்லை.**

# நறுக்கென...

## இந்தியாவை பொறிக்குள் வீழ்த்தும் கதிர்காமர்



இப்போது கதிர்காமரின் கவனமெல்லாம் புதுடில்லியை எவ்வாறு தங்களது அதாவது சந்திரிகா சக கூட்டணியினரது ராஜதந்திரப் பொறிக்குள் சிக்கவைத்து இனப்பிரச்சினை விவகாரத்துள் மீண்டும் ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவித்து, சமாதான முயற்சிகளுக்கான மேற்குலக மற்றும் ஐரோப்பிய சமூகத்தின் ஆதரவைச் சிதைக்கவும், சனாதிபதி மீதான சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களை அகற்றவும் வைக்கலாம் என்பது பற்றியதாகவே உள்ளது.

அதனால்தான் இப்போது புதுடில்லிக்கு அடிக்கடி காவடி எடுக்கத் தொடங்கியுள்ளார்.

அதாவது புதுடில்லிக்கான, இலங்கை விவகாரங்கள், குறிப்பாக சமாதானப் பேச்சுக்கள், விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்கள் போன்றவற்றிற்கான சனாதிபதியின் தூதுவராக.... சீச்சீ..... விசேட தூதுவராகவே அவர் மாறிவிட்டார்.

சமாதான முயற்சிகள் புலிகளை மேலும் பலமடையச்செய்துவிட்டதென்றும் புலிகள், திருகோணமலையை சுற்றிவளைத்து முகாமமைத்து இருக்கிறார்கள் எனவும், இது திருகோணமலையில் உள்ள இந்திய எண்ணைக் களஞ்சியங்களுக்கு ஆபத்தானதென்றும், கடற்புலிகள் பலம்பெற்று இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்தும் வல்லமை பெற்றுள்ளார்கள் எனவும், அப்பிராந்தியத்தில் அவர்கள் மூன்றாவது கடற்படையாக உருவாகி இந்திய இலங்கை கடற்படைகளுக்கு அச்சுறுத்தலாகி வளர்கிறார்கள் என்றும் டில்லிக் காவடியின் போதெல்லாம் வார்த்தை தவறாது 'ஓதி' இந்தியத் தலைமைகளுக்கு உருவேற்ற முயன்று வருகிறார் என்பது வெளிச்சம்.

சொந்த மண்ணுக்கும், தன்னின மக்களுக்கும் எதிராக, ஒரு பதவிப்பதராக மாறி அந்நிய தேசமொன்றிற்கு பொய்மைகளைப் போதித்து சினமேற்றி, அழிவுகளை ஏற்படுத்த தூண்டும் அயோக்கியத்தனத்தை எஜமானி விசுவாசத்துடன் இவ்வளவு கச்சிதமாக இந்த தள்ளாத வயதிலும் பறந்து பறந்து செய்யும் நபுஞ்சகத்தனம் கதிர்காமரைத் தவிர வேறு எவருக்குமே கிடையாது.

எல்லாவற்றிற்கும் மேலாக, எமது மக்களுக்கு உரிமையான கடற்பிராந்தியத்தினுள் அத்துமீறி நுழைந்து எமது மக்களுக்குரிமையான கடல் வளங்களை கொள்ளையடித்து, கடற் கலங்களை, வலைகளை சிதைத்து அட்டூழியம் செய்யும் இந்திய மீனவர்களின் கொடுமை தாங்காது அவர்களைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கும் பொது மக்களின் செயற்பாட்டை, அதன் நியாயத்தன்மையை மறைத்து விடுதலைப்புலிகள்தான் அவர்களை கைது செய்கிறார்கள் எனக் 'கோள்மூட்டும்' பணியையும் கதிர்காமர் செய்திருப்பதுதான் வெட்கக்கேடான அசிங்கமாகும்.

எது எப்படியோ, இந்தியா கதிர்காமரின் கூற்றுக்களை, 'கோள்மூட்டலை' 'சகுனித்' தனத்தை நம்புகின்றதா என்பதே இப்போதைய கேள்வியாகும். கடந்த காலங்களில் தவறான போர்வழிகளின் தவறான கருத்துக்களைக் கேட்டு தவறுபுரிந்த இந்தியா தொடர்ந்தும் தவறுகளையே செய்யப்போகிறதா? 'ஆம்' எனின் இந்தியா கதிர்காமரின் பொறி வலைக்குள் சிக்கிவிட்டதென்றே அர்த்தமாகும்.

## தென்பகுதி நோக்கி சில கேள்விகள்



சமாதான முயற்சிகள் தற்போது ஒருவகையில் மேலும் உடனடியாக நகரமுடியாத தேக்க நிலையொன்றை அடைந்துள்ள நிலையில், ஆளும் ரணில் தலைமையிலான அரசு சனாதிபதியின் செயற்பாடுகளையும், அதிகார சனாதிபதி ரணில் தலைமையிலான அரசையும் மாறிமாறி குற்றம் சுமத்தி அதிகாரப் போட்டியுடனான அரசியல் யுத்தமொன்றை மேற்கொண்டு ஏற்கனவே குழம்பிய குட்டையை மேலும் மேலும் குழப்பிவருகின்றனர்.

சமாதான முயற்சிகளை தன்னால் தொடரமுடியாதெனவும், அதற்கான அதிகாரங்கள் எதுவும் தன்னிடம் இல்லையென்றும், சனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகள் மூலம் தான் அதிகாரபலமற்ற பிரதமராகிவிட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாகவே ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்துவிட்ட பின்னர் அவருடன் சமாதானம் குறித்து எதுவும் பேசுவதில் இனி அர்த்தமெதுவும் இல்லைத்தான்.

இதேசமயம் சனாதிபதி தன்னிடம் ரணில் சுமத்தியுள்ள சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பொறுப்புகளை, அதனை தொடர்வதற்கான அதிகார வலு மட்டுமல்ல, அது தொடர்பான முடிவுகளை, தீர்மானங்களை சுயாதீனமாக எடுக்கக்கூடிய வல்லமை இருந்தும், நிராகரிப்பதும், அதனை மீண்டும் ரணிலிடமே கையளிக்க முயல்வதும், சனாதிபதி சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் விருப்பமற்றவர் என்பதை வெளிப்படுத்துகிறது.

இந்தசமயத்தில் இருதரப்புமே சமாதான நகர்வுகளைக் கைவிட்ட பின்னர் சமாதானம் குறித்து தமிழர் தரப்பிடம் எவரும் விளக்கம் கேட்பது தேவையற்றதொன்றாகும்.

சிங்கள மக்களிடமோ, ஏனைய இனத்தவரிடமோ சமாதானப் பாடலைப்பாடியே இருதரப்பும் ஆட்சிக்கு வந்துள்ளபோதும், அதனை உளப்பூர்வமாக, தேசிய நலம் கருதிய நோக்குடன், சாத்தியமாக்கும் உணர்வு இருதரப்பினரிடையேயும் கிடையாது என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கட்டத்தில் விடுதலைப்புலிகளின் சமாதானம் குறித்த நிலைப்பாடானது மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும், எல்லாக்காலத்தையும் போன்றும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் ஆணையைப் பெறும் எந்த அரசுடனும் பேசத்தயார். அது சந்திரிகாவின் அரசாக இருந்தாலும் சரி என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் கூறியிருப்பதை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்வது அவசியம்.

யார் சமாதானத்தின் விரோதிகள், யார் சமாதான முயற்சியை முன்னெடுக்க தயங்குகின்றனர்..... யாருக்கு யுத்தத்தின் மீது வெறியுள்ளது..... என்பதை தமிழ்ச்செல்வன் அவர்களின் இந்த கருத்து தெளிவாக்கியுள்ளது.

இதற்கு சந்திரிகாவோ, ரணிலோ அல்லது தென்னிலங்கைப் பேரினவாதிகளோ, மக்களோ என்ன சொல்லப்போகிறார்கள்.

## சமாதானத்தை தொலைக்க முயலும் சந்திரிகா



சனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்ற பின்னர் படைதரப்பை பலப்படுத்தும் முயற்சிகளில் தீவிரம் காட்டுவது வெளிப்படையாகவே தெரிகிறது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றினை அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டுவதற்கான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்று அமைதியை நிலைநாட்ட ஆர்வம்காட்டவேண்டிய சனாதிபதி, முப்படைகளையும் வலுப்படுத்தவும் ஆயுத ரீதியில் அவற்றை நவீன மயப்படுத்தி பலப்படுத்தவும் வேகத்துடன் செயற்படுவது அவரின் போர்வெறி இன்னமும் தணியவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

ரணில் அரசும் பதவியேற்றபோது, போர் நிறுத்தப்பட்டு, சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுமென்றும், பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்பட்டு, மீதப்படுத்தப்படும் நிதி அபிவிருத்திப் பணிகளுக்கு பயன் படுத்தப்படும் என்றும் கூறப்பட்டதென்னவோ உண்மைதான்.

ஆனால் பதவியேற்று, சமாதான நகர்வுகள் ஆரம்பித்த பின்னர் திறைசேரிச் செயலர் முப்படைத் தளபதிகளையும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளையும் அழைத்து ஒரே தடவையில் என்றுமில்லாதவாறு, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான பாதுகாப்புத் தேவைக்கான நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து பேசியபோதே சமாதானம் தூரத்துப் பச்சைதான் என்ற சந்தேகம் ஏற்படவே செய்தது.

எனினும் பொருளாதார ரீதியிலான சில அத்தியாவசிய - தவிர்க்கவேமுடியாத தேவைகள், சில புற அழுத்தங்கள், இராணுவத்தின் மனோபல வீழ்ச்சி, போரில் ஏற்பட்ட பாரிய தோல்விகளும் இழப்புகளும், படையிலிருந்து ஆயிரக்கணக்கிலானோர் தப்பியோடியமை போன்ற பன்முகக் காரணிகளால் சமாதானப் பேச்சுக்களை தொடரவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது.

படைதரப்பில் 40,000 க்கும் அதிகமானோர் தப்பியோடிய நிலையிலும் - யுத்தநிறுத்தம் அமுலிலுள்ள போதிலும், இந்த ஆண்டிற்கான பாதுகாப்பு செலவினம் 5400 கோடிக்கும் அதிகமான தொகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டமையானது சமாதானத்தை வலுப்படுத்துவதை விடவும் போருக்காக படைகளைப் பலப்படுத்துவதில் அரசுக்குள்ள அக்கறையை வெளிப்படுத்தவே செய்தது.

இந்த நிதி ஒதுக்கீட்டை செய்தது ரணிலின் அரசேயாகும். ஆனால் இப்போது அதனைப் பயன்படுத்தப்போவது புதிய பாதுகாப்பு அமைச்சரான சனாதிபதியே. அவர் சமாதானத்தை நிராகரிப்பவர்.

யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர். அதனால் தான் இப்போது பாதுகாப்பு படைகளுக்கான ஆயுதத்தேவைகள் தொடர்பாக முப்படைத் தளபதிகளையும் அழைத்து அவர் பேச்சு நடத்தியிருக்கிறார்.

ஏற்கனவே இராணுவ - மற்றும் கடற்படை ஆயுத மற்றும் போர்க்கலக் கொள்வனவுக்காக சீனாவுக்கு அதிகாரிகள் சென்றுள்ள நிலையில் இந்த பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன.

சமாதானம் மீண்டும் சந்திரிகாவின் செயற்பாடுகளால் நிரந்தரமாகவே தொலைந்து போகும் ஒன்றாக மாறிவருகிறது.

## சங்கரியார் கதை விடுகிறார்



விடுதலைப்புலிகளால் தனது உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்து நேரலாம் என்றும்.... எந்தச் சமயத்திலும் தான் கொல்லப்படலாமென்றும் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவு தனக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாம் என்றும் கூட்டணியினால் அகற்றப்பட்டும் அகலமாட்டேன் என அடம்பிடிக்கும் அதன் தலைவர் ஆனந்தசங்கரியார் உளறத் தொடங்கி இரண்டு நாட்கள் கூட கழியவில்லை....

அவரைக் கொல்லவென்றே ஆறுமாத காலமாக கூட்டணியின் தலைமையகத்தில் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றிக்கொண்டே காத்திருந்த நபர் பாதுகாப்புப் பிரிவின் எச்சரிக்கையை தொடர்ந்து வந்த பணியை கைவிட்டு திரும்பிச் சென்றுவிட்டாராம்....

எப்படி இருக்கு கதை!

கூட்டணியை உருவாக்கியவர் என்று தன்னைத்தானே பிரகடனம் செய்து அறிக்கை விட்டுக்கொண்டிருப்பவரும், தமிழ் மக்களின் பெருமளவிலான ஆதரவைப் பெற்றவர் தான் என்று சூளுரைத்துக்கொண்டிருப்பவரும், தமிழினத்தின் தொண்டன் எனவும், புலிகளுக்கு எதிரான ஒருவன் தானல்லவென்றும் அன்றாடம் அலறிக்கொண்டிருப்பவருமான ஆனந்த சங்கரியார் சிங்கள அரசின் அமைச்சுப் பாதுகாப்பு பிரிவைச்சேர்ந்தவர்கள் சொன்னதை நம்பி அறிக்கை விடலாமா?

சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதியென்ன?

கேடுவரும்போது மதிகெட்டு வருமென்றும் கூறுவார்கள்....

ஆளுக்கு அறளை பெயர்ந்து விட்டது போலை...

புலிகளால் கொல்லப்பட்டு விடுவேனோ என்ற அச்சம் ஆருக்கு ஏற்படும்.... சொந்த இனத்திற்கு துரோகம் செய்பவனுக்கும், காட்டிக்கொடுக்கும் கைக்கூலிக்குந்தானே...? சங்கரியார் அறிக்கைவிடுவது போல் தமிழர்களின் உரிமைகளுக்காகக் காலம்காலமாகப் போராடி வரும் தொண்டர் தான் என்றால் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏனாம்?

ஆறு மாதமா கூட்டணிக் காரியாலயத்திலை காத்திருந்து சந்தேகப்படவே முடியாத ஒரு கொலையாளி அரை நிமிடத்தில் முடியக்கூடிய வேலையை முடிக்காமல் திரும்பிவிட்டார் என்றால்.....? இது என்ன கதையா? படமா?

சங்கரியார் தமிழ் மக்களுக்கு தென்னிந்தியத் தமிழ்ப்படம் ஒன்றைக்காட்டி 'ரீல்' விடப்பார்க்கிறார்.


செல்லாக்காசாகிவரும் அவரது செல்வாக்கை அனுதாப அலைமூலம் மீண்டும் உயர்த்த ஆரோ எழுதிக்கொடுத்த கதை வசனத்தை ஒப்புவித்துள்ளார் அவ்வளவுதான்.

சொந்தப் புத்தியில் இயங்காமல் யார் யாரோ சொல்லிக்கொடுத்தவகையில் அறிக்கைகளை விட்டு அநாமதேயமாகிவரும் சங்கரியார் சரியான ரோசமுள்ள தன்மானமுள்ள ஒருவரென்றால் கூட்டணியை விட்டுவெளியேறி தன்னை அகற்றியவர்களுக்கு எதிராக தேர்தலில் நின்று தனக்காக மக்கள் ஆதரவை நிருபித்து நிமிர்ந்து நிற்கட்டும்...... பாராட்டலாம்.

இப்படி 'ஐயோ என்னைக் கொல்லப்போறாங்கள்' என்று அவலக்குரலெழுப்பி அனுதாபம் தேட முயல்வது கடைகெட்ட கையாலாகாத் தனமேயாகும்.

**செங்குட்டுவன்**

# விரிய முனையும் கரங்கள்...



வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப்பணிகளை துரித கதியில் ஏதாவது ஒருவகையில் மேற்கொள்ள வேண்டுமென இலங்கையின் சமாதான முயற்சிகளில் அக்கறை கொள்ளும் நாடுகள் விரும்புவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை அதாவது, யுத்தம் தணிந்து சமாதான பேச்சுக்கள் நடைபெற்ற சமயங்களிலும் சந்திரிகா - ரணில் முரண்பாடு வலுத்து நிரப்பப்படாத ஒரு வெற்றிடம் தொடரும் இந்த தருணத்திலும் தமிழ்மக்களுக்கென குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு பாரிய அபிவிருத்தி திட்டங்கள் எவையும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் சந்திரிகாவும் ரணிலும் சமாதான வண்டிக்கு முன்னாள் போட்டிருக்கும் வீதித்தடையினை அகற்ற முயலாத நிலையில் வடக்கு கிழக்கிற்கென அபிவிருத்தி பணிகளை முன்னகர்த்த சர்வதேச நாடுகள் விரும்புகின்றன.

இந்த சர்வதேச நாடுகள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு முயற்சிகளை வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரசின் மூலம் நடைமுறைப்படுத்துவது இப்போது சாத்தியமற்ற ஒன்றென புரிந்து கொண்டுள்ளன.

இதன் பிரதிபலிப்புதான் இப்போது வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஏற்கனவே செயற்பட்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாக அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகின்றன.

இதன் தொடராகவே கடந்த வாரம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட ஜப்பானுக்கான புதிய தூதுவர் அக்கியோசூடா புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் போதும் அபிவிருத்திப்பணிகள் குறித்து பேசியிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பின்பின்னர் ஜப்பானியத்தூதுவர் ஊடகவியலாளர் மத்தியில் பேசும் போது இந்த பிரதேசத்தில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி பணிகள் குறித்து பேசினோம் என தெரிவித்தார்.

அக்கியோசூடாவின் சந்திப்பிற்கு முன்னரே? இந்த நாடுகளின் கவனம் . வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திப்பணிகளின் பக்கம் திரும்பியுள்ளதாக பல்வேறு இராஜதந்திர வட்டாரங்களுக்கு ஊடாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் இந்த சர்வதேச நாடுகளின் கவனம் இப்போது மீண்டும் தமிழர் தாயகம் நோக்கி திரும்பியிருக்கக் காரணம் இல்லாமல் இல்லை.

பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட அண்மையில் கூறியிருப்பதுபோல் சனாதிபதியும் பிரதமரும் தங்களுக்கிடையிலான சச்சரவுகளை தீர்த்துக்கொள்ளும்வரை விடுதலைப்புலிகள், ஆழ்நிலைத்தியானத்தில் தொடர்ந்திருப்பர் என்பதும் சாத்தியமானதல்ல.

உதவி வழங்கும் நாடுகளும் காத்துக்கொண்டிருப்பதும் சாத்தியமில்லை என தெரிவித்திருந்தார். இதனை மெய்ப்பிக்கும் வகையில் இந்த நாடுகளின் தற்போதைய நகர்வுகளும் கருத்துக்களும் வெளிப்படுகின்றன.

பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட கூறியதுபோல ஒன்று சர்வதேச நாடுகள் புலிகள் மேற்கொள்ளும் ஆழ்நிலைத் தியானம் இன்னும் நீடிக்கவேண்டும் என விரும்புகின்றன.

இரண்டு இலங்கையின் இரண்டு தலைவர்களுக்கிடையிலான முரண்பாடுகள் தணியும் வரை காத்திருக்கத் தயார் இல்லை.

இந்த இரண்டு காரணங்களின் அடிப்படைகளையும் விட இந்த நாடுகளுக்கு இன்னும் பல உபரிகாரணங்க்ளும் இல்லாமல் இல்லை.

இந்த நிலையில் இந்த நாடுகள் இலங்கையின் இரண்டு தலைவர்களையும் விழிப்புக்கு கொண்டுவரும் ஒரு நகர்வாகவும் இதை மேற்கொள்ள முயலுகின்றன போல தெரிகின்றன.

பொதுவாகவே இந்த சர்வதேசநாடுகள் இலங்கையில் தொடரும் சமாதானத்தினை நகர்த்த தாம் விரும்பும் சமாதானத்திற்கான வீதி ஒன்றிற்கூடாகவே கொண்டு செல்ல விரும்புகின்றன.

ஆனால் இந்த சமாதான வீதி யதார்த்தத்திற்கு ஒவ்வாது என்பதையும் சமாதானத்திற்கான வீதியினூடாக விரையமுதல் செய்யப்படவேண்டிய இதர பணிகள் குறித்தும் ஆரம்பத்திலிருந்தே புலிகள் வலியுறுத்தி வந்ததுடன்

**சி.றி. இந்திரகுமார்**

சமாதானத்தின் வீதியில் சரியான வகையில் விரையவேண்டுமானால் முரண்பட்ட இரு தரப்புகளும் விரும்புகின்ற முறையில் செல்ல வேண்டுமேயொழிய தனித்து அரசு விரும்புகின்றவகையிலோ அல்லது அரசும் சர்வதேச சமூகமும் விரும்புகின்ற வகையிலோ செல்வது உசிதம் அல்ல என்பதை பலமுறை சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆனால் இவை செவிசாய்க்கப்படாததன்விளைவு இப்போது சமாதானம் முடங்கிக் கிடக்கின்றது.

இந்த நிலையில் ஆரம்பத்தில் புலிகள் எதனை சுட்டிக்காட்டினார்களோ, வட,கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுக்கென அமைக்கப்பட்ட சிரான் அமைப்பு ஏன் செயழிழந்து போனதோ புலிகள் எதன் அடிப்படையில் எதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபினை சமர்ப்பித்தார்களோ அதனை இப்போது சர்வதேச நாடுகள் உணரத்தலைப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் புலிகள் எந்தச் சமாதானப் பாதையில் எத்தகைய தடைகளை நீக்கி பயணத்தை விரைவுப்படுத்த வேண்டுமென விரும்பினார்களோ அந்த பாதையின் வடிவத்துக்கே இப்போது சர்வதேச நாடுகள் விரைய முயற்சிக்கின்றன என துணிந்து கூறலாம்.

ஏனெனில், புலிகள் இது தொடர்பாகவோ சமாதானப்பேச்சுக்கான முன்னகர்வுக்கோ ஆரம்பத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இயல்வு வாழ்வை இழந்து நிற்கும் மக்களின் துயர் நீக்கப்பட வேண்டுமென விரும்பினார்கள்.

இதனை அவர்கள் ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்திவந்தார்கள். ஆனால் இலங்கை அரசின் கருத்துகளுக்கு ஈர்க்கப்பட்ட சர்வதேச நாடுகள் பிரச்சினைக்கான இறுதி தீர்வாக எதையாவது விரைவாக பெற்றுவிடமுயன்றன்.

பல தசாப்தங்களாக தொடரும் முரண்பாட்டிற்கு சில மாதங்களுக்குள் முடிவு கண்டுவிட துடித்ததன் விளைவு இப்போது எல்லாமே முடங்கிக்கிடக்கின்றன.

இப்போது புலிகள் எதை வலியுறுத்தினார்களோ அதன் நியாயப்பாட்டை இந்த நாடுகள் உணர்ந்துள்ளபோதிலும் அதனைக் கொண்டு செல்ல சரியான அரசியல் தளத்தை கொழும்பில் தவறவிட்ட நிலையில் இந்தநாடுகள் திணறுகின்றன.

ஆகவே இப்போது புலிகள் விரும்பும் பாதைக்கு சமாதானம் மெல்ல திரும்புகின்றது என்பதே காலத்தின் பதிலாக இருக்கிறது.

இதுதான் சர்வதேச நாடுகள் விரும்பும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கூடான அபிவிருத்தி பணிகள் எனும் துரிதமாகும்.

ஆனால் இவற்றை புலிகளின் கருத்துக்களோடு ஒத்திருந்து அவர்களின் பங்களிப்பினூடாக எவ்வாறு கொண்டுசெல்லப்படுகின்றன என்பதிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது.

அத்தோடு, நிதிவழங்கும் நாடுகளின் கரங்கள் தமிழர் தாயகத்தின் பக்கம் விரியமுயல்வதுபோலத் தெரிகிறது.

இந்த நிதி மூலங்கள் மூலம் மட்டும் புலிகளின்



ஆழ்நிலை தியானங்கள் பாதுகாக்கப்பட்டுவிடலாம் என இந்த நாடுகள் கருதிவிடக் கூடாது.

புலிகள் பேச்சு மூலம், மென்முறை சார்ந்த ஒரு அணுகுமுறை ஒன்றினூடாக ஒரு தீர்வை உலகம் விடும் அமைதி வழிக்கு புலிகள் தங்களது உயர்ந்தபட்ச உழைப்பை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நாடுகள் புரிந்து, புலிகளின் சமாதானம் மீதான நம்பிக்கையை புரிந்து கொள்ளவேண்டும்.

ஏனென்றால் புலிகள் தமிழ் மக்களிற்கான தீர்வுக்காக உலகின் அபிலாசைகளோடு ஒத்து ஒரு நியாயபூர்வமாக தங்கள் தரப்பு நியாயங்களுக்காக யாகம் செய்யும் நாட்கள் இவை.

---

## மதவடி மயிலர்



**செய்தி:-** *விடுதலைப் புலிகளால் தனது உயிருக்கு ஆபத்து என்கிறார் சங்கரி.*

**மயிலர்:-** சொந்தமா சொன்ன கருத்து மாதிரித் தெரியேல்லை யார் யாரோ சொல்லிக் கொடுத்துச் சொன்ன மாதிரியெல்லே கிடக்குது. பாவம் பெயரெடுக்க வேணும். அனுதாபத்தை பெறவேண்டுமென்றால் இப்படியே புலிகளைச் சாட்டி அறிக்கை விடுறது உளறுவாயன் அலறுவாயன் ஆனானாம் எண்ட கதை போலையல்லோ கிடக்குது பாருங்கோ.

**செய்தி:-** *பொடோ சட்டத்தின் கீழ் கைதாகி தடுப்புக்காவலில் இருந்த பழ.நெடுமாறன் உட்பட நான்கு பேரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி*

**மயிலர்:-** முந்தி தடா என்றார்கள். இப்ப எதற்கெடுத்தாலும் பொடா என்கிறார்கள். தமிழ்நாடு தமிழுக்காகவும் தமிழரிற்காகவும் பேசுவோரை தடுப்புக்காவலில் வைக்கும் நாடாகிவிட்டது தான் வேதனை பாருங்கோ. இங்கையொரு அம்மையார் அங்கையொரு அம்மணி. விடுதலைப்புலிகள் என்ற சொல்லை வைத்தே அரசியல் பிழைப்பு நடத்துகினம் பாருங்கோ. நெடுமாறன் விடுதலை நெடுங்காலத்துக்குப் பிறகுதான் நடந்திருக்குது பாருங்கோ. தமிழனிற்கு தமிழ் நாட்டிலை என்ன கதி என்று பாருங்கோ.

**செய்தி:-** *ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்தும் நாட்டில் பொதுத் தேர்தல் நடக்கும் என்கிறார் அனுரா பண்டாரநாயக்க.*

**மயிலர்:-** கூடாத கூட்டத்தோடு கூடி ஆடாத ஆட்டம் ஆட அனுரா நினைக்கிறார் போலை. அக்காவின்ரை கணவனை கொன்றவர்களோடை மச்சான் முறை கொண்டாட நினைக்கிறார் மாப்பிளை.அப்பன் உண்டாக்கின சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மகன் புதைகுழி வெட்டத் தொடங்கீட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

**செய்தி:-** *சமாதான முயற்சிகளை அமெரிக்கா ஆதரிக்கும் என்கிறார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்*

**மயிலர்:-**யுத்த முயற்சிகளுக்கும் அதே போல உதவி செய்யும் என்றுமெல்லே சொல்லியிருக்க வேணும். பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதில் அமெரிக்காவுக்கு நிகர் அமெரிக்கா தான் பாருங்கோ சமாதானப் பாட்டு பாடிக்கொண்டே சண்டை தாளம் போடுகிறதில் விண்ணர் அமெரிக்காதான்.

**செய்தி:-** *சமாதான நடவடிக்கையின் பாதிப்பால் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும் என்கிறார் அமைச்சர் மாரப்பன.*

**மயிலர்:-** அப்ப பொருளாதார நெருக்கடி ஏற்படாவிட்டால் சமாதான நடவடிக்கை பாதித்தாலும் பிரச்சினை இல்லை என்கிறாரோ அமைச்சர். சர்வதேசம் வழங்கும் நிதியுதவிக்காகத்தான் சமாதானம் பேச வந்திருக்கினம் என்றது சரியாகத்தான் இருக்கு பாருங்கோ.

**செய்தி:-** *மது போதையில் வாகனம் செலுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மயிலர்:-** நடவடிக்கை எடுப்போரும் மது போதையில் இருந்தால் என்ன செய்வது என்பதுதான் சனங்களின்ர கேள்வி. மதுவால் மதிமயங்கியோர் மீது அதே நிலையில் உள்ளவர்களால் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்.

---

☞ கெட்ட மக்களுக்கு, நல்ல சட்டங்கள் இயற்றிப் பயனில்லை. - ஹாவீஸ்

நேர்நோக்கு

# கதிர்காமரின் "பெருமை"

அரசாங்க ஊழியர் ஒருவர் தனதுமேலதிகாரிக்கு பொய்யான காரணங்களைக் கூறி அடிக்கடி விடுப்பெடுப்பது வழமை. அவர் கூறும் காரணம் அநேகமாக சுகவீனம் என்பதாகவே இருக்கும்.

அவ்வாறு அவர் விடுப்பெடுத்திருந்தவேளை வீதியால் வாகனத்தில் சென்றுகொண்டிருந்த மேலதிகாரி அவரைக்கண்டுவிட்டு மறுதினம் அவர் அலுவலகத்திற்கு வந்தபோது "உம்மை நான் நேற்று வீதியில் கண்டேன். நீர் சுகவீனம் என்று பொய் சொல்லுகிறீரே"என்று கேட்டார்.

அதற்கு ஊழியர் "அது நானில்லை சேர். அது எனது தம்பியாயிருக்கும். நாங்கள் இரட்டையர்கள்" என்றார். அது மட்டுமல்லாது தனது கெட்டித்தனம் குறித்து பெருமையடித்துக் கொண்டும் இருந்தார்.

மீண்டும் அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இம்முறை மேலதிகாரி குறிப்பிட்ட ஊழியரை வீதியில் கண்டதும் வாகனத்தை அவரருகே நிறுத்தி "எனக்கு முன்னால் நிற்பது நீரா? அல்லது உமது தம்பியா?" என்று கேட்டாராம்.

* * * *

சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமர் அண்மையில் தான் சென்னைக்கு சென்றதற்குக் காரணம் "இசைவிழா பார்க்க" என்று கூறியிருக்கிறார். அவருக்கும் இசைக்கும் என்ன தொடர்போ தெரியாது. ஆனால் அவர் கூறிய காரணம் நிச்சயமாகப் பொய் என்பது கேள்வி கேட்ட ஊடகவியலாளருக்கு தெரியாதிருப்பினும் தமிழ் மக்களால் ஊகிக்கமுடியாத ஒன்றல்ல. ஏனெனில் தமிழக முதலமைச்சருக்கும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையேயான ஒற்றுமை தமிழ் மக்கள் அறியாததல்ல. அவர் டில்லிக்குச் சென்றுவிட்டு இரகசியமாக சென்னை சென்றபோது ஊடகவியலாளரிடம் இவ்வாறு அகப்பட்டுக்கொண்ட போது கதிர்காமர் இப்படியொரு காரணத்தைக் கூறியிருக்கிறார். ஆனால் கதிர்காமரின் இரகசிய விஜயம் இதுதான் முதலும் கடைசியுமாக இராது இது போன்று ஊடகவியலாளரிடம் சிக்காது போகப்போவதில்லை.



கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருந்த வேளையில் செய்த ஒரே ஒரு காரியம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சர்வதேச பொய்ப் பிரச்சாரமாகும்.அது அவருக்கு சில வேளைகளில் உடனடியாக வெற்றியளித்ததும் உண்டு. ஆனால் அந்த வெற்றி இப்பொழுது படிப்படியாகக் கரைந்து காற்றிலே போய்க்கொண்டிருக்கிறது. இப்பொழுது சர்வதேச நாடுகள் இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் கொண்டிருக்கின்ற நிலைப்பாடு அதனையே வெளிக்காட்டுகின்றது. முன்னைய அவரது பிரச்சாரத்தின் தீவிரம், வெற்றி என்பன சிறிலங்காவின் இனவாதிகள் மத்தியில் அவர் குறித்து "தேசப்பற்றாளர்" என்ற பேரையும் பெற்றுக்கொடுத்திருந்தது. இது அவரை எவரது எதிர்ப்புமற்ற பொம்மைப் பிரதமராக்குவதற்கு சந்திரிகா ஆலோசிக்கு மளவுக்கு வளர்த்திருந்தது.

இப்பொழுது சனாதிபதி சந்திரிகாவால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு சர்வதேசத்திலிருந்து இந்தியாவுக்கானதாக மாற்றப்பட்டிருக்கிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன் இந்தியாவுக்குச்சென்ற இவர் விடுதலைப்புலிகள் குறித்து பல எச்சரிக்கைகளை விடுத்திருந்தார். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட பின் விடுதலைப் புலிகள் பலம் பெற்றுள்ளதாகவும், அவர்கள் திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி அமைத்துள்ள முகாம்களால் இந்தியா குத்தகைக்கு எடுத்திருக்கும் எண்ணெய் குதங்களுக்கு ஆபத்து என்றும், கடற்புலிகளின் வளர்ச்சி குறித்தும் அவரது எச்சரிக்கைகள் அமைந்திருந்தாக அவரே கூறியிருந்தார்.

ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் புலிகளால் எண்ணெய் குதங்களுக்கு ஆபத்தில்லை என அறிவித்திருந்தார்.

இந்நிலையில் முதல் தடவையாக புலிகளின் கடற்படை குறித்துத் தான் குறிப்பிட்டதாகவும் அது அங்கு அதிர்ச்சி அலைகளைஏற்படுத்தியதாகவும் அவர் கூறியிருக்கிறார். கதிர்காமரின் இக் கூற்று ஒரு வகையில் இந்தியாவை அவமதிப்பது போன்றது என்றே கூற வேண்டும். ஏனெனில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சக்தி மிக்க நாடு இந்தியா. அதற்கு அண்டை நாட்டில் நடைபெறும் முக்கிய விவகாரம் குறித்து கதிர்காமர் கூறித்தான் அதற்குத் தெரியுமென்றால் அது அந்த நாட்டை அவமானப்படுத்துவது போலத்தான்.

ஆனால் இவ்வாறெல்லாம் பெருமையடித்துக்கொள்ளும் கதிர்காமர் அண்மையில் பொதுநலவாயச் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டு மண்கவ்விய விவகாரத்தில் பிரிட்டன் ஏமாற்றியதாக சிறிலங்கா ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுவது "வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு" என்பதை நிரூபித்திருக்கிறது.

இவ்விடயத்தில் தமிழ் மகன் ஒருவர் எதிலாவது பெரும் பதவியிலிருந்தால் அது குறித்து பெருமை கொள்ளும் தமிழினம் கதிர்காமரின் தோல்வி குறித்து மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறது. இப்பொழுது சிங்கள இனவாதிகள் கதிர்காமரின் தோல்வியால் கவலை கொள்ளலாம். ஆனால் அவர்களின் முயற்சிகளெல்லாம் தோல்வி கண்டு "உன்னாலே நான் கெட்டேன். என்னாலே நீ கெட்டாய்" என்று முடிவுக்கு வரும்போது கதிர்காமரைப்பற்றி எண்ணிப் பார்க்கவே எவரும் இருக்கமாட்டார்கள்.

வேலவன்

# வவுனியாவில் நீதித்துறை தூங்குகிறதா...?

படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருக்கும் பகுதிகளில் மக்களின் வாழ்வுக்கு ஏற்ற வகையில் சிவில் நிர்வாகம் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்படுவதாக அரசு பிரச்சாரம் செய்வது வெறும் வார்த்தை ஜாலங்கள் மட்டுமே.

ஏனென்றால் சிவில் நிர்வாகத்தில் சட்டம் ஒழுங்கை பேணுவதாக கூறப்படும் சிறிலங்காப்பொலிசார் மற்றும் நீதித்துறையைவிட மற்றுமொரு தரப்பும் இயங்கிவருகிறது.

அதாவது சிறிலங்கா பொலிசார் பாதுகாப்பு வழங்க அலுவலகங்களை அமைத்து படையினருக்கு அடிவருடிகளாக செயற்படும் பல்வேறு அமைப்புகளும் சட்டத்தையும் ஒழுங்கையும் கைகளில் எடுத்துக்கொண்டு தான்தோற்றித்தனமாக செயற்பட்டுவருகின்றன.

இந்த அமைப்புக்களின் உறுப்பினர்கள் தமக்கு எதிரிகளாக தென்படுபவர்களையும் தமது தனிப்பட்ட கோபதாபங்களை நிறைவு செய்துகொள்ளவும் மக்களின் உரிமைகளோடு சம்பந்தப்பட்ட விடயங்களிலும் எதேச்சதிகாரமாக தலையிட்டு மக்களை அச்சுறுத்தி வருகின்றன.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் அரசு புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுக்களின் அடிப்படையிலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரமும் இந்த அமைப்புக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறதேயொழிய, ஆனால் இவ் அமைப்புக்களைச் சேர்ந்தோர் சட்டவிரோதமாக ஆயுதங்களுடன் நடமாடுவதைக் காணக் கூடியதாக உள்ளதுடன் இந்த ஆயுதங்களைக்கொண்டே மக்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

இத்தகைய செயற்பாடு வவுனியாவில் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டத்தின் பிரகாரமும் சிவில நிர்வாகம் பேணப்படுவதாகக் கூறப்படும் ஒரு பிரதேசத்தில் பொலிசாரும், நீதிமன்றங்களும் கையாளவேண்டிய விடயங்களை இந்த அமைப்பைச்சேர்ந்த உறுப்பினர்கள் கைகளில் எடுத்துக் கொண்டு செயற்படுவதாகவும் இதற்கு பொலிசாரும் நீதித்துறையினரும் அனுமதித்து நிற்கின்றனரா? என்ற சந்தேகம் எழுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியும், தமது தனிப்பட்ட குரோதங்களுக்கும் மக்களின் சொத்துக்களை பறிப்பதற்கும் முற்படும் அமைப்புகளை அரசும் அதன் துறைகளும் எவ்வாறு அனுமதித்து நிற்கமுடியும்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு அனுமதிப்பது என்பது ஒரு வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலுமாகும்.

அதேவேளை புலிகளின் அசாதாரண பொறுமை மூலம் கட்டிக்காக்கப்படும் யுத்தநிறுத்தத்திற்கும், சமாதான முயற்சிக்கும் அதிக பங்கத்தை ஏற்படுத்தும் ஒரு செயலாகவும் அமைந்துவிடும்.

அத்தோடு, அரசியல் நீரோட்டத்திலும், ஜனநாயக விழுமியங்களையும் மதித்து நடப்பதாகவும் இணைந்து செயற்படுவதாகவும் ஊடகங்களிற்கு செவ்விகளை வழங்கும் இந்த அமைப்புகளின் தலைமைகள் இத்தகைய அராஜக போக்குகளை கண்டும் காணாததும் போல செயற்படுவதுடன் அதனை ஊக்குவித்தும் வருவது கண்கூடு.

இந்த நிலையில் மக்களின் இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தலாக செயற்படும் இவ்வமைப்புகளை கண்டித்தும் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளாது தடுக்க வேண்டியதும் வவுனியா மாவட்ட நீதித்துறையினரதும் பொலிசாரினதும் கடமையாகும்.

இத்தகைய அமைப்புகளின் செயற்பாடுகளினால் அச்சமுறும் மக்கள் இதற்கான நீதி நியாயங்களை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்ற வழி தெரியாது நிற்கின்றனர்.

இந்த வகையில் வவுனியா மக்கள் எதிர்கொள்ளும் இந்த பிரச்சினைகளுக்கு பரிகாரமாக ஆயுத அச்சுறுத்தல்கள் நீங்கிய ஒரு நல்ல சூழ்நிலையை பொருத்தமானவர்கள் உடனடியாகவே மேற்கொள்வார்களா? என காத்திருக்கின்றனர்.

அத்தோடு, இந்த அராஜக போக்குக்கொண்ட அமைப்புகளை மக்கள் தங்கள் மத்தியிலிருந்து முற்றுமுழுதாக விரட்டியடிக்க வேண்டிய தேவையுள்ளது.

ஏனென்றால் இது ஒரு பெரும் அச்சுறுத்தலாகும்.

நக்கீரர்

# நவீன விமானத்துக்கு நூறு வயது



ரைட் சகோதரர்கள்

டிசெம்பர் 17,1903 நவீன விமான வரலாற்றில் மிகவும் முக்கியமான நாள். றைற் சகோதரர்கள் என்று அழைக்கப்படும் ஓர்வில் றைற் (ORVILLE WRIGHT 1871-1948), வில்பர் றைற் (WILBUR WRIGHT 1867 - 1912) என்போர் கூட்டாகக் காற்றிலும் எடை கூடிய நவீன விமானத்தின் முன்னோடியை உருவாக்கி அதில் பறந்து காட்டினர். அண்ணன் வில்பர், தம்பி ஓர்வில் இருவரும் மிதிவண்டி திருத்துவதோடு புதியனவற்றையும் உருவாக்கும் ஒரு நிலையத்தை நடத்தி வந்தனர். இருவரும் சுயதேடல் மூலம் சிறந்த கல்வியறிவைப் பெற்றிருந்தனர். இதனால் விமானப் பறப்பு சம்பந்தமான தொழில் நுட்பத்தை அவர்களால் எளிதில் கிரகிக்க முடிந்தது. விமானத்தில், எடை குறைந்த எந்திரம் பொருத்தப்பட வேண்டும். அத்தோடு விமானத்தை காற்றில் தூக்கி வைத்திருக்கும் திறனுள்ள இறக்கைகளும் உருவாக்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு இருவரும் வந்தனர். இந்த முடிவில் இருந்து அவர்கள் ஆராய்ச்சி ஆரம்பமாகியது.

பறவைகளைப் போல் காற்றில் பறக்கவேண்டும் என்பது மனித குலத்தின் நீண்ட நாள் வேணவா. கிரேக்கர்களின் புராதன காலக் கதைகளில் டெய்டாலுஸ் (DAEDALUS), ஈக்காருஸ் (ICARUS) என்போரைச் சந்திக்கிறோம். டெய்டாலுஸ் என்பவர் சிறந்த பொறியியலாளர், ஈக்காருஸ் அவருடைய மகன். விண்ணில் பறக்கவேண்டும் என்ற மகனின் ஆசையை அவனுடைய கைகளில் மெழுகு மூலம் இறக்கைகளை ஒட்டி அவனைப் பறக்க வைக்கிறார். ஒரு நாள் சூரியனுக்கு அருகாமையில் பறந்துசென்றபோது மெழுகு உருகிவிட்டது. தரையில் விழ்ந்த ஈக்காருஸ் மரணமடைந்தான். இராவணனின் புட்பக விமானம் பற்றியும் நாம் அறிவோம். அவருடைய வீழ்ச்சிக்கு அந்த விமானம் ஒரு காரணம் என்பதை மறுக்க இயலாது.

நவீன தொழில் நுட்ப வரலாற்றில் "பறப்பின் தந்தை" (FATHER OF AVIATION) என்று இங்கிலாந்தின் சேர் ஜோர்ஜ் கெய்லி (SIR GEORGE CAYLEY) சிறப்பிக்கப்படுகிறார். இவர் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த விஞ்ஞானி. பறவைகளின் பறக்கும் திறனை விஞ்ஞான பூர்வமாக இவர் ஆய்வு செய்து ஆவணப்படுத்தினார். பறப்புக்கு உதவும் விதத்தில் விமானங்களின் இறக்கைகள் அமைக்கப்படவேண்டும் என்ற முடிந்த முடிவு அவருடையதாகும். ஏற்ற இறக்கத்திற்கான கட்டுப்பாட்டு சாதனங்கள் விமானத்தில் பொருத்தப்பட வேண்டும் என்பதும் கெய்லியின் கண்டுபிடிப்பு. இவருடைய முடிவுகள் விமானத் தொழில் நுட்பத்தின் அடிப்படைகளாக அமைகின்றன.

றைற் சகோதரர்களுக்கு முன்பே 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளில் விமானத்தை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பித்துவிட்டன. இவர்கள் தமது தயாரிப்புக்களில் நீராவியில் இயங்கும் எந்திரங்களைப் பொருத்தினர். அவை சிறிது தூரம் பறந்தாலும் மனிதனைச் சுமக்கும் வலுவைப் பெறவில்லை. மனிதனைச் சுமக்கும் வலுவுள்ள நீராவியில் இயங்கும் விமானத்தில் பிரமாண்டமான எந்திரம் பொருத்தப்படவேண்டும். இது சாத்தியப்படாது.

எந்திரம் பொருத்தப்படாத "கிளைடர்"(GLIDER) என்ற இன்னுமோர் வகை விமானத்தையும் உருவாக்கினார்கள். உயரமான குன்றிலிருந்து அதை நன்றாக வீசும் காற்றில் ஏற்றிவிட்டால், காற்றலையில் அது நெடுநேரம் மிதக்கும். இது நவீன விமானத்தின் முன்னோடியாகவும் பறப்புத் தொழிலுக்கு உதவு கருவியாகவும் கணிப்பிடப்படுகிறது. இன்றும் மேற்கு நாடுகளில் கிளைடர்கள் மட்டுப்படுத்தப்பட்ட தூரங்களுக்கு பறப்பதை அவதானிக்கலாம். கிளைடர்களின் பறப்புக்கு பலமான காற்றும், விண்ணில் ஏற உதவும் குன்றும் தேவை என்பதால் அவை பிரபலமாகவில்லை.

வாஷிங்ரன் நகரில் செயற்படும் சிமித்சோனியன் (SMITHSONIAN) அரும்பொருள் காட்சியகம் மற்றும் விஞ்ஞான ஆலோசனை மையத்தில் றைற் சகோதரர்கள் இந்த மையத்திற்கு எழுதிய கடிதம் இருக்கிறது. "தயவு செய்து பறப்பு சம்பந்தமான உங்களிடமுள்ள ஆவணங்களின் பிரதிகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்" என்று அக்கடிதம் கோரியது. அதன் பின் றைற் சகோதரர்கள் பறப்பு சம்பந்தமான சகலதுறை ஆய்வுகளையும் மேற்கொண்டனர். செப்ரம்பர் 1900ல் அவர்கள் கிளைடர் விமானமொன்றைத் தமது மிதிவண்டித் தொழிற்சாலையில் தயாரித்தனர்.

அமெரிக்காவின் ஒகையோ மாநிலத்தைத் (OHIO) தமது வாழ்விடமாக அவர்கள் கொண்டிருந்தனர். இந்த மாநிலத்திற்குக் கடல் எல்லை கிடையாது. தமது கிளைடர் விமானத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக அவர்கள் அதை அத்திலாந்திக் மாகடலோரமாகவுள்ள வடகரோலினா மாநிலத்திற்கு எடுத்துச்சென்றனர். நீண்ட கரையோரத்தில் அவர்கள் கிற்றிஹோக் (KITTY HAWK) என்ற மணல் வெளியைத் தெரிவு செய்தனர். உயரமான மணல் குன்றுகளும் பலமான கடற்காற்றுமுள்ள இந்த இடம் விமானப் பறப்புடன் நெருங்கிய தொடர்பு கொள்ளத் தொடங்கியது. 1901 - 1903 காலப் பகுதியில் பல கிளைடர்களைத் தயாரித்து கிற்றி ஹோக் மணல் வெளியில் அவர்கள் பறக்க விட்டனர்.

இதன் மூலம் பெற்ற தொழில் நுட்ப அனுபவ அடிப்படையில் அவர்கள் தமது மாற்றியமைக்கப்பட்ட கிளைடரில் ஒரு எடை குறைந்த பெற்றோலில் இயங்கும் எந்திரத்தைப் பொருத்தினார்கள். இந்த விமானத்தின் முன் பகுதியில் இரு விசிறிகளை இணைத்தனர். விசிறிகளையும் எந்திரத்தையும் இரு மிதிவண்டிச் செயின்களால் தொடுத்து விசிறிகள் சுற்றும் ஒழுங்கைச் செய்தனர். றைற் சகோதரர்கள் தயாரித்த மிதிவண்டியின் பெயர் பிளையர் (FLYER), இதே பெயரைத் தமது விமானத்திற்கும் அவர்கள் சூட்டினர்.

றைற் சகோதரர்கள் தயாரித்த விமானத்திற்கு மேலும் கீழுமாக ஒருசோடி இறக்கைகள். நெடுங்காலமாக இரட்டை இறக்கைகள் விமானங்களுக்குப் பொருத்தப்பட்டன. காலப்போக்கில் ஒற்றை இறக்கையாக மாற்றப்பட்டது. இன்றும் அப்படியே இருக்கிறது. இவர்களுடைய விமானத்தில் விமானமோட்டியின் இருக்கை பொருத்தப்படவில்லை. அவர் விமானத்தில் குப்புறப் படுத்திருந்தவாறு விமானத்தின் கருவிகளை கையாலும் காலாலும் இயக்கியபடி விமானத்தை ஓட்டுவார்.

டிசெம்பர் 17, 1903ம் நாள் பகல் பதினொரு மணியளவில் தம்பி ஓர்வில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரு பறப்புக்களை மேற்கொண்டார். முதலாவது பறப்பு 12 நொடி நேரம் நீடித்தது. இரண்டாவது பறப்பு சிறிது நேரத்தின் பின் நடைபெற்று 59 நொடிப் பொழுதில் 852 அடி தூரத்தைக் கடந்தது. எந்திர சாதனம் பொருத்தப்பட்ட காற்றிலும் எடை கூடிய, மனிதனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் முதலாவது விமானத்தின் பறப்பு கிற்றிஹோக் மணல் வெளியில் இவ்வாறு நிகழ்ந்தது.

1908ல் அண்ணன் வில்பர் தமது விமானத்தை கப்பல் மூலம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் கொண்டு

**அன்பரசு**

வந்து பறந்து காட்டினார்.இது மேற்கு ஐரோப்பாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அடுத்த வருடம் 1909ல் லூயிபிளெறியோ(LOVIS BLERIOT) என்ற பிரெஞ்சுக்காரர் தானே உருவாக்கிய ஒரு விமானத்தில் பாரிஸ் நகரில் இருந்து இங்கிலாந்து பறந்து சென்றார். பிளெறியோ தனது விமானத்தில் ஓட்டி இருக்கையைப் பொருத்தி அதில் அமர்ந்து விமானத்தைச் செலுத்தினார்.

1914 - 1918 காலப்பகுதியில் முதலாம் உலகப்போர் நடைபெற்றபோது அமெரிக்க அரசுக்கு விமானம் வழங்கும் உரிமையை ஓர்வில் றைற் பெற்றார். (அண்ணன் வில்பர் 1912ல் இறந்துவிட்டார்.) அவருடைய விமானங்கள் அரசுக்காகப் பறந்தன. இதுவரை காலமும் விமானங்கள் பற்றி அக்கறை காட்டாத மேற்கு நாட்டரசுகள் போர் தொடங்கியவுடன் ஆர்வம் காட்டின. போர் தொடங்கிய காலத்தில் வேவுப் பணி, எறிகணைகளுக்கு வழிகாட்டும் பணி என்பனவற்றை விமானங்கள் செய்தன. போரின் பிற்பகுதியில் அதே விமானங்கள் எதிரி நிலைகள் மீது குண்டுவீச்சு நடத்தத்தொடங்கின. அத்தோடு எதிரியின் விமானங்களைச் சுட்டு வீழ்த்த ஆரம்பித்தன.

இதுவரை காலமும் சில தெரிவுசெய்யப்பட்ட மரங்களின் துண்டுகளாலும் தடித்த பலமான சீலைகளாலும் உருவாக்கப்பட்ட விமானங்கள் 1918 - 1930 காலப் பகுதியில் பாரிய மாற்றம் அடையத் தொடங்கின. விமானத்தின் உடலமைப்பிற்கு அலுமீனியத் தகடுகளும், உருக்கு இரும்புப் பாகங்களும் பயன்படத் தொடங்கின. காற்று உதைப்பைக் குறைக்கும் விதத்தில் கட்டுமானம் செய்யப்பட்டது. அத்தோடு பல முற்போக்கான சாதனங்களும் பொருத்தப்பட்டன. விமானத்தின் அடிப்பகுதியில் தொங்கிக்கொண்டிருந்த சக்கரங்களை உள்ளுக்கு இழுத்து வைத்திருக்கும் தொழில்நுட்பம் புகுத்தப்பட்டது.


விமானங்களின் பறப்பு வேகமும் அதிகரித்தது. 1920 ல் மணிக்கு 188மைல் வேகத்தில் பறந்தவை 1930ல் மணிக்கு 357 மைல் வேகத்தில் பறந்தன. 1940ல் வேகம் மணிக்கு 469 மைலாக உயர்ந்தது. அத்தோடு தூரப் பறக்கும் திறனும் அதிகரித்தது.1927ல் சார்ள்ஸ் லிண்ட்பேர்க் (CHARLES LINDBERGH) என்ற அமெரிக்கர் நியூயோர்க் நகரில் இருந்து பாரிஸ் நகர்வரை தன்னந்தனியாகப் பறந்தார். இவர் எடுத்த நேரம் 33மணித்தியாலம். இன்று இதே பயணத்தை ஆறுமணி நேரத்தில் முடிக்கலாம்.

1930களில் பயணிகள் விமானங்கள் பாவனைக்கு வந்தன. அமெரிக்காவில் டகிளாஸ் (DOUGLAS) நிறுவனம் கட்டிய டிசி3 என்ற விமானம் மிகவும் பிரபலமானது. 30 பயணிகளை ஏற்றிக் கொண்டு மணிக்கு 180 மைல் வேகத்தில் இடை இடையே நின்று 2000 மைல் தூரம் பறக்க இதனால் இயலும். இந்த விமானம் இராணுவப் பயன்பாட்டிலும் ஈடுபடுத்தப்பட்டது. இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற 1939 - 1945 காலப்பகுதியில் விமானத் தொழிநுட்பம் முன்னோக்கிய பாய்ச்சலை நடத்தியது. இதில் குண்டு வீச்சு விமானங்கள் கூடுதல் வளர்ச்சி பெற்றன.

மனிதனையும் அவனுடைய சொத்துக்களையும் ஒட்டு மொத்தமாக அழிக்கும் கருவியாக விமானம் மாறியது. பல குண்டுவீச்சு விமானங்கள், ஒரேநேரத்தில், ஒரு குறிப்பிட்ட இலக்கு மீது நடத்தும் தாக்குதலை 'கம்பள விரிப்புக் குண்டு வீச்சு' (CARPET BOMBING) என்று அழைப்பார்கள். இத்தொழில் நுட்பத்தை ஜேர்மன் விமானத் தளபதி றிச்ற் ஹோபன் (RICHTHOVEN) ஸ்பெயின் நாட்டு உள்நாட்டுப் போரின் போது கண்டுபிடித்தார். 1937ல் இவர் இவ்வகைக்குண்டுவீச்சு மூலம் கோர்னிக்கா (GUERNICA) நகரை முற்றாக அழித்தார். ஏப்பிரல் 1941ல் இவருடைய விமானங்கள் பெல்கிறேட் நகரில் 17,000 மக்களைக் கொன்றன.

விமானங்களுக்கான ஜெற் எந்திரத்தின் கண்டுபிடிப்பு விமான வரலாற்றில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இதை 1941ல் இங்கிலாந்தின் விமானப்படைப் பொறியிலாளர் சேர் பிறாங்க் விற்றின் (SIR FRANK WHITTLE) கண்டுபிடித்தார். ஆனால் இதுபயன்பாட்டிற்கு வர சிறிது காலம் பிடித்தது. இரண்டாம் உலகப்போரின் வழமையான பிஸ்ரன் - சிலின்டர் எந்திரங்கள் பொருத்தப்பட்ட விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன. இன்றைய மோட்டார் கார், லொறி போன்றவற்றின் எந்திரத்தை ஒத்தவை ஜெற் எந்திரத்தின் வருகைக்கு முன் விமானங்களில் பொருத்தப்பட்டிருந்தன.


கொரிய தீபகற்பப் போரின்போது (1950 - 1953) ஜெற் குண்டு வீச்சு விமானங்கள் பாவனைக்கு வந்தன. அத்தோடு பிஸ்ரன் - சிலின்டர் எந்திரத்தின் சகாப்தம் முடிவுக்கு வந்தது. பிஸ்ரன் எந்திரப் பின்னடைவுகள் பல. அவை



வேகம் குறைந்தவை. கூடுதலான எரிபொருளை உண்பவை. உதிரிப்பாக தேய்மானம் மிக அதிகம். ஒரே மூச்சில் நெடுந்தூரம் வேகமாகச் செல்ல இயலாது. எந்திரத்தின் வெப்பத்தைத் தணிப்பதற்காக இடையில் நின்று செல்ல வேண்டும். வெப்பத்தைத் தணிப்பதற்கு விசிறிகள் பொருத்த வேண்டும். நவீன விமானங்கள், எவ்வகையாக இருப்பினும் அவை ஜெற் எந்திரங்கள் பொருத்தப்பட்டவையாக இருக்கின்றன. விமானத் தொழில்நுட்ப வளர்ச்சி இன்றைய நிலை அடைவதற்கு ஜெற் எந்திரமே காரணம்.

இதே காலப்பகுதியில் விமானத்தின் பிள்ளை என்று வர்ணிக்கப்படும் உலங்கு வானூர்தி உருவாக்கப்பட்டது. பல ரகங்கள் தோன்றினாலும் அமெரிக்க பொறியியலாளர் இகோர் சிக்கோர்ஸ்கி (IGOR SIKORSKY) 1939ல் உருவாக்கிய உலங்கு வானூர்திதான் இன்றைய உலங்கு வானூர்திகளின் அடிப்படையாகக் கருதப்படுகின்றன. போர் விமானங்களுக்கு உதவும் நோக்கில் முதலாவது விமானம் தாங்கியை பிரிட்டிஷ் அரசு 1918ல் கட்டி முடித்தது. விமானத் தொழில்நுட்பம் அபரித வளர்ச்சி கண்டுவிட்டாலும் இன்னும் பல சாதனைகள் காத்திருக்கின்றன.

விமானத் தொழில்நுட்பத்தில் இருந்து விண்வெளிப் பயணமும் செய்மதியும் தோன்றின. நவீன அரசியலும் உயர்மட்ட இராசதந்திரமும் விமானம்,உலங்கு வானூர்தி என்பனவின் பின்னணி ஆதரவுடன் நடைபெறுகின்றன. உலகச்சுருக்கம், நெடுந்தூரப்பயணம் என்பன விமானத்தின் பெறுபேறுகள். விமானம் ஆக்கம், அழிவு ஆகிய இரண்டிற்கும் பொதுவானது. விமான ஓடு பாதைகளும்,விமான நிலையங்களும் மனிதனின் வாழ்வாதாரமான மண்ணை ஆக்கிரமிக்கின்றன. றைற் சகோதரர்கள் பற்றிச் சிந்திக்கும் இந்த நாளில் ( 17 டிசெம்பர் 2003) எதிரி விமானங்கள் எமக்களித்த துன்பத்தை மறக்க முடியவில்லை.



எந்த அரசியல் தலைவரின் பொது வாழ்விலும் தோல்வியே இல்லாமல் இராது. - நிக்கலாய் லெனின்

# தமிழ் பதிப்புலகில் நூற்றாண்டு காலம் நிலைத்தவர்கள்

மறவன்புலவு
க.சச்சிதானந்தன்

## அறிமுகம்.

மூன்றாண்டுகளுக்கு முன், 2001ஆம் ஆண்டு தையில் நடந்த 24ஆவது சென்னை புத்தகக்கண் காட்சியில், நூற்றாண்டு கண்ட முதலாவது தமிழ்ப் பதிப்பகம் எனப் பாராட்டும் விருதை, மயிலாப்பூர் அல்லயன்ஸ் நிறுவனம் பெற்றுக் கொண்டது. 1896இல் எழுதுபொருள் கடையாகத் தொடங்கி,1901இல் பதிப்பகமாக மிளிர்ந்த அல்லயன்ஸ் நிறுவனத்தைத் தொடங்கிய திரு.குப்புசாமியின் மகன் திரு.கே.வி.எஸ்.மணி விருதைப் பெற்றுக் கொண்டார்.




தமிழ் நூல் பதிப்புத் தொழிலில் ஒரு நூற்றாண்டுக் காலம் தொடர்ச்சியாகப் பணிபுரிவதென்பது மிக எளிதான ஒன்றல்ல. ஒரு புத்தகத்தை வெளியிடுவதே குழந்தையைப்பெறுவது போன்ற கடினமான உழைப்புத் துன்பமும், ஆன்ம உணர்வு இன்பமும் தரும் பணியாக அமைகையில், நூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து பற்பல தமிழ் நூல்களை வெளியிடும் பணி, அதுவும் தந்தை, மகன், பேரன் என மூன்று தலைமுறையினரின் பணி பாராட்டுக்குரியதே.

அக்கண்காட்சியை நடத்திய காலத்தில் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்கத்தின் (தெபுவிபச)செயலராக இருந்தவர் திரு.சிறீனிவாசன். அவரே அல்லயன்ஸ் பதிப்பகத்தின் ஆட்சியராகவும் இருந்தார். முதன் முறையாக இச்சங்கம் இத்தகைய விருது ஒன்றை அந்த ஆண்டுதான் வழங்கியது. நூற்றாண்டு கண்ட ஒரே தமிழ்ப் பதிப்பகம் என்பதே விருதின் பெயராகும்.

தமிழ்ப் பதிப்பகங்கள், நூறாண்டு காலத்திற்கு மேல் தொடர்ந்து நீடித்துவருகின்றன என்ற செய்தியை உலகுக்கு எடுத்துக்கூறி உற்சாகத்தை ஊட்டியதுடன், இடையறாது, சலிப்பின்றி உழைத்தால் இத்தகைய சாதனைகளை ஏனைய தமிழ் பதிப்பாளரும் செய்யமுடியும் என்ற தன்னம்பிக்கையையும் இந்நிகழ்வு வளர்த்தது. இந்த வகையில் தெபுவிபச சங்கத்தாரைப் பாராட்டவேண்டும்.

ஆனாலும் நூற்றாண்டு கண்ட தமிழ்ப்பதிப்பகம் அல்லயன்ஸ் மட்டும்தானா என்ற வினாவைச் சங்கம் எடுத்து நோக்கியதாகத் தெரியவில்லை. மகன் செயலாளராக இருக்கும் ஒரு அமைப்பு, அவரின் தந்தைக்கு விருதை வழங்குகிறதே! உயர் பொறுப்பில் உள்ளவர் ஒருவர் தன் குருதிவழி உறவினர்களுக்குக் காட்டும் தனிச்சலுகை (nepotism) என்ற கருத்து வந்துவிடுமே! என்ற அச்ச உணர்வுகளும் சங்கத்துக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

விருது வழங்கிய 2001 ஆம் ஆண்டில், நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நூல்களைத் தொடர்ச்சியாகப் பதிப்பித்து வந்த நிறுவனங்கள் நான்குக்கு அதிகமாக இருந்தன. அவற்றை இங்கு குறிப்பிடுவதும், அவை தொடர்பான விபரங்களைத் தருவதும் பயனுள்ளதாகும். தமிழ்ப் பதிப்பு முயற்சி வரலாற்றுக்கு அணி சேர்ப்பதுமாகும்.

### பைபிள் சொசைற்றி

கி.பி.1811ல் கொல்கொத்தாவில் தொடங்கிய பைபிள் சொசைற்றி, பைபிளுக்கான தமிழ் மொழிபெயர்ப்புக்களை வெளியிடத் தொடங்கியது. 1820ல் சென்னையில் இதற்கு அலுவலகம் அமைத்து, இன்றுவரை பைபிளுக்குப் பல தமிழ் மொழிபெயர்ப்புக்களை வெளியிட்டு வருகிறது.

கி.பி. 1841ல் யாழ்ப்பாணத்திலிருந்து பீற்றர் பேர்சிவல் பாதிரியார் சென்னைக்கு ஆறுமுகநாவலருடன் விவிலியத் திருப்புதலைக் கொணர்ந்தார். சென்னையில் இத்தமிழாக்கம் பரிசீலிக்கப்பெற்று, 1842ஆம் ஆண்டளவில் பைபிள் சொசைற்றியால் பதிப்பிக்கப்பெற்றது.

அண்மையில் 1995ஆம் ஆண்டு வெளிவந்த திருவிவிலியம் - பொது மொழிபெயர்ப்பு முயற்சிக்கும் பைபிள் சொசைற்றியே 1968ஆம் ஆண்டு முதலாகக் காரணராக இருந்ததை நோக்கும் பொழுது, தமிழில் நூல்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வருபவர்களுள் இவர்களையும் அடக்கிவிடலாம். கி.பி. 2011ல் இரு நூற்றாண்டுகள் நிறைவு விழாவை, அதுவும் தமிழ் பதிப்புகளை இருநூறு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் விழாவைக் கொண்டாடுவோம் என்கிறார். அதன் சென்னைப் பொறுப்பாளர், வணக்கத்துக்குரிய முனைவர் ஏ.பி. சாமுவேல்.

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பதிப்பு.

கி.பி. 1849ல் சூடாமணி நிகண்டு நூலைப் பத்துத் தொகுதிகளாகச் சென்னையிலே பதிப்பித்துத் தன் பதிப்பு முயற்சிகளைத் தொடங்கியவர் ஆறுமுகநாவலர். கி.பி. 1051ல் யாழ்ப்பாணத்தில் நிறுவிய ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலை, அதன் நீட்டமாக கி.பி. 1870ல் சென்னை தங்க சாலைத்தெருவில் நிறுவிய ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன யந்திர சாலை இன்றும் அதே தெருவில் அதே பெயரில் இருப்பதையும், இன்று வரை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்புகளாகத் தமிழ் நூல்களை இடையீடின்றிப் பதிப்பித்து வருவதும் கண்கூடு.

ஆக மொத்தமாக 68 தமிழ் நூல்கள் இப்பதிப்பகம் மூலமாக இதுவரை வெளிவந்துள்ளன. அவற்றுள் பல நூல்கள் முப்பதற்கும் அதிகமான மறு பதிப்புகளைக் கண்டுள்ளன. முதலாம் சைவவினாவிடை இருநூற்றுக்கும் அதிகமான பதிப்புகளைக் காண யாழ்ப்பாணம், கொழும்பு, சென்னை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள பிறபதிப்பகங்களும் உதவின. 1965ல் முதற்பதிப்பைக் கண்ட இலக்கண வினாவிடை 1995ல் தனது 28வது பதிப்பைக் கண்டது. சைவசமயம், தமிழ் மொழியியல், அகராதி, பூமிசாத்திரம் என அப்பதிப்பகத்தின் பாட வகைப்பரப்பும் விரிந்தது.

154 ஆண்டுகளாகத் தொடர்ந்து நல்ல தமிழ்ப் பதிப்புகளை வெளியிட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்பு நூல்களின் வகைக்கு மட்டுமல்ல, பிழைகளற்ற பதிப்பு, சுத்தத் தமிழ்ப் பதிப்பு என்ற சிறப்புகளுக்கும் உரியதாயும், பின்வந்த பல தமிழ்ப் பதிப்பகங்களுக்கு வழிகாட்டியாயும் இருந்துள்ளது என்கிறார் சிதம்பரம் ஆறுமுகநாவலர். சைவப்பிரகாச வித்தியாசாலையின் முன்னாள் தலைமையாசிரியரும், குன்றக்குடி அடிகளாருக்குப் பின்னர் தமிழ் நாட்டில் ஆறுமுகநாவலர் அறக்கட்டளையின் அறங்காவலராகப் பொறுப்பு வகிப்பவருமான திரு.க.சுவாமிநாதன்.




### கிறிஸ்தவ இலக்கியக் கழகம். (சி.எல்.எஸ்)

கி.பி.1858ல் தொடங்கிய கிறிஸ்தவ இலக்கியக் கழகம் தொடக்கத்தில் துண்டு வெளியீடுகளையே கொணர்ந்ததாயினும் பின்னர் தமிழ்ப் பதிப்பின் அனைத்து பாடவகைகளிலும் நூல்களை வெளியிட்டது. திரு.வி.க. போன்ற சிறந்த பல படைப்பாளிகளின் வாழ்க்கை வரலாறுகளைப் பதிப்பிப்பதுடன், அண்மைக்காலத்தில் தலைசிறந்த படைப்பாளிகளின் நூல்களை வெளியிடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டிவருகிறது என்கிறார் அங்கு தமிழ்ப்பதிப்பாசிரியராகப் பணிபுரியும் திருமதி. சுவீற்லின் பிரபாகரன்.

145ஆண்டுகள் தமிழ்ப் பதிப்புலகில் தொடர்ச்சியாக நூல்களை வெளியிட்டுச் சாதனை புரிந்து வரும் கிறிஸ்தவ இலக்கியக் கழகத்தின் பொறுப்பாளராக அண்மைக் காலம்வரை திரு. தயானந்தன் பிரான்சில் இருந்தார்.

### யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை.

யாழ்ப்பாணத்தில் கி.பி. 1881ல் தொடங்கிய சைவப்பிரகாச யந்திரசாலை இன்றுவரை இடைவிடாது தமிழ்நூல்களை பதிப்பித்து வருகிறது. அண்மையில் புதிய தொழிநுட்பங்களை உள்ளடக்கிய மறுதோன்றி அச்சகத்தையும் கணிப்பொறிசார் பக்கமாக்கலையும் தன்னகத்தாக்கியுள்ளது. இந்து சாதனம் என்ற தமிழிதழையும் இந்து ஓர்கன் என்ற ஆங்கில இதழையும் நடத்திவருகிறது. போர்ச்சூழ்நிலை காலத்தையும் தாங்கி, தளராது தமிழ்ப் பதிப்பு முயற்சியை மேற்கொண்டுவருகிறது. தமிழ்மொழி, சைவசமயம், சங்கநூல்கள், அகராதிகள், புனைகதை, கவிதை, புவியியல், அறிவியல், வரலாறு, வாழ்க்கை வரலாறு, தன்னம்பிக்கை, மருத்துவம் எனப் பன்முகத் தமிழ்ப் படைப்பாளிகளுக்குப் பதிப்புக்களம் அமைத்துக் கொடுக்கிறது சைவப்பிரகாச யந்திரசாலை.

122ஆண்டுகளாகத் தமிழ் நூல் பதிப்பு முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் சைவப்பிரகாச யந்திரசாலை, ஈழத்து வாசகர்களை நோக்கியே அமைந்ததால், தமிழகத்தில் உள்ள ஒரு சிலரைத் தவிரப் பலரின் கண்களில் படாதமை வியப்பல்ல என்றார் அந்த அமைப்பின் ஆட்சியருள் ஒருவரும் யாழ்ப்பாணம் பெரியகுளம் மகாவித்தியாலய அதிபருமான திரு. கனகசிங்கம்.

### முடிவுரை.

தெற்காசியாவிலே முதன் முதல் தமிழ் நூல் ஒன்றுதான் அச்சுவாகனம் ஏறியது. அன்றுதொடக்கம் தமிழில் அச்சிட்டுப்பதிப்பிக்கும் வழக்கம் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கிறது. எனினும் நூற்றாண்டு காணும் அளவுக்குத் தொடர்ச்சியாக மேற்காணும் ஐந்து நிறுவனங்களையுமே இப்பொழுது அடையாளம் காணமுடிகிறது. அந்த வரிசையில் அல்லயன்ஸ் ஐந்தாம் இடத்தையே பெறுகிறது. தெபுவிபசவின் உறுப்பினரிடையே நூற்றாண்டு கண்ட நிறுவனம் என விருதை வழங்கியிருப்பதே முறையாகும். எனினும் முறைப்படுத்தற்காலம் கடந்து விடவில்லை. மற்ற நான்கு நிறுவனங்களுக்கும் இந்தக் கண்காட்சியிலாவது (2004) விருது வழங்கிச் சிறப்பிப்பது தெபுவிபச வின் கடமையாகும்.

# கொடுக்கும் கரங்கள் எம்.ஜி.ஆர்



எம்.ஜி.ஆர் அவர்கள் மறைந்து பதினாறு ஆண்டுகள் நிறைவுறுகின்றன.

தமிழ் நாட்டில் பதினொரு ஆண்டுகள் முதலமைச்சராக இருந்து தமிழ் நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி தமிழீழ மக்களுக்கும் தனது ஆதரவை நல்கியுள்ளார்.

எம்.ஜி.ஆர் அவர்கள் ஆரம்பகாலம் முதல் கொண்டு தமிழீழ மக்கள் மீதான அனுதாபமும், அவர்களின் விடுதலை பற்றிய ஆழ்ந்த அக்கறையும், விருப்பும் கொண்டவராக விளங்கினார்.

இதற்கு சிறந்த உதாரணமாக 1982ம் ஆண்டு இலங்கையில் உருவான சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏனையோருக்கு முன்பதாகவே 10,0000 (பத்துலட்சம்) ரூபா நிதியினை வழங்கியுதவினார்.

அதுமட்டுமின்றி 1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக சிங்கள பௌத்த பேரினவாத அரசு தமிழ்மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்து சிறைகளில் அடைத்தும் பெண்கள், குழந்தைகளை ஈவிரக்கமின்றி வெட்டியும் கொன்றும் இனக்கலவரத்தை தாண்ட வமாடவிட்ட சூழ்நிலையில், தமிழ்மக்களின் துயரறிந்து தமிழ்மக்களின் விடுதலைக்காக உரிமைக்குரல் கொடுத்து முன்னின்று உழைத்தவர்களில் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ஓர் சிறப்பிடம் உண்டு.

தமிழ் மக்கள் சுதந்திரமாக, பாதுகாப்பாக,நிம்மதியாக வாழவேண்டுமாயின் தமிழ்மக்களுக்கென்று நாடு ஒன்று வேண்டும் என எத்தனையோ விடுதலை அமைப்புக்கள் முளைவிட்டபோதிலும் தமிழ் மக்களுடைய விடுதலையை வென்றெடுக்கக் கூடிய கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தலைமை தாங்கக் கூடிய அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகள் தான் என்பதையும், அவ் அமைப்பை வழிநடத்திச் செல்கின்ற தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்கள் மீதும் தளராத பற்றும், பாசமும் கொண்டு செயற்கரிய பல செயல்கள் புரிந்து எம் தேச விடுதலையை வளம்படுத்தியவர் அவர்.

இவ்வாறாக நோக்குகையில் எம்ஜி.ஆர் அவர்களின் தீர்க்கதரிசனமான பார்வைதான் 20 வருடங்களுக்கு முன்பே எமது தேசிய விடுதலைப் போராட்டத்தையும், அதனை வழி நடாத்தும் தேசியத் தலைவரையும் ஆதரிக்க, அரவணைக்கத் தூண்டிவிட்டிருக்கிறது; எம் தேச விடுதலைப் போராட்டம் முழு வீச்சோடும், உத்வேகத்தோடும் வீறுநடை போட வேண்டும் என்பதற்காக பெருந்தொகையான நிதியினை வாரி வழங்க முன்வந்திருக்கின்றார்; தமிழ் மக்களின் கண்ணீரை மட்டுமல்ல, ஈழமக்களின் கண்ணீரையும் எம்.ஜி.ஆர். துடைத்திருக்கின்றார்.

இவ்வாறு தமிழ்நாடு மட்டுமன்றி. தமிழ்மக்களின் மனங்களிலும் எம்.ஜி.ஆர் நற்பெயரைப் பெற்றுள்ளார்.

தனது கொடை வழங்கும் செயல் மூலம் மக்களின் மனதில் நிலையான இடத்தைப் பிடித்த எம்.ஜி.ஆர் தனது கலையுலக வாழ்வை ஆரம்பிக்குமுகமாக மதுரை ஒரிஜினல் பாய்ஸ் நாடக கம்பனியில் 1924 சேர்ந்தார். தனதுமுதல் நாடகமான மகாபாரதம் விளங்கிற்று. அதனைத தொடர்ந்து பல நாடகங்களை நடித்த அவருக்கு 1936ல் திரைவானில் சங்கமிக்கும் நிலமை உருவாகியது. சதி லீலாவதி தொடங்கி மதுரை மீட்ட சுந்தரபாண்டியன் வரை 134 திரைப்படங்களை நடித்துள்ளார்.

பல திரைப்படங்களில் நடித்து முத்திரைப்பதித்து வந்த எம்.ஜி.ஆர். அறிஞர் அண்ணாவின் தி.மு.க.வில் 1953ஆம் அண்டு இணைந்து கொண்டார் 1972ல் அக் கட்சியிலிருந்து வெளியேறி 1972இல் அ.தி.மு.க. கழகத்தினை உருவாக்கினார்.

அ.தி.மு.க கட்சியின் மூலம் 1977 முதல் 1987வரை தேர்தலில் வெற்றி பெற்று பதினொரு ஆண்டுகள் அதாவது மூன்று தடவைகள் தமிழ் நாட்டில் முதலமைச்சராக பதவிவகித்ததுடன் மக்களுக்கும் தொண்டாற்றியுள்ளார்.

பொருளின் வறுமையை எழுதிப் போக்கலாம்; ஆன்மீக வறுமையை போக்குவது அரிது. - மிசேவ் தெமோன்த்தேன்

# தொடர்கதை

## பகுதி — 03

கிளாலிக்கடலில அலைகளைக் கிழித்துக்கொண்டு படகு வேகமாக போய்க்கொண்டிருந்தது. சுற்றிலும் கும்மென்ற இருட்டு பரவியிருந்தது. வானத்தில் தூரத்தூர மின்னும் நட்சத்திரங்கள். பிறை நிலவும் மறைந்துவிட்டது. நேரம் என்னவென்று தெரியவில்லை. எப்படியும் பன்னிரண்டு மணிக்கு மேலே தான் இருக்கக்கூடும். யாரிடமும் இப்போது நேரம் கேட்க முடியாது. பக்கத்தில் இருக்கும் நடராசுவின் முகம் கூட தெளிவாய் தெரியவில்லை. ஊய் என்று குளிர்காற்று முழுவேகத்தில் வந்து காதுகளை அறைந்தது. அந்த வெட்டவெளியில் கடற்காற்று அத்தனை குளிராய் வீசியது.

கிளாலிக் கடற்பரப்பில் சிவம் அன்றுதான் முதல் தடவையாக பயணம் செய்கிறார். அதுவும் நடராசு கூட வருவதால்தான் கொஞ்சமேனும் தைரியம் வந்திருந்தது. உயிரைக் கையில் வைத்துக்கொண்டு மூன்று மணிநேரப் பிரயாணம்.

படகின் ஆட்டமும் அதிர்வும் மனக்கலக்கத்தையே ஏற்படுத்தியது. ஆளுக்காள் தேவாரம் திருவாசகம் கந்தசஷ்டி கவசம் என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தார்கள். அவரையும் அறியாமல் மனம் கந்தசஷ்டி கவசம் சொல்லியது. காக்க காக்க கனகவேல் காக்க நோக்க நோக்க நொடியினில் நோக்க.... என்ற போது பய உணர்வு தெரியவில்லை. ஒரு குழந்தையின் அழுகைக்குரலும் சமாதானப்படுத்தும் தாயின் குரலும் இருட்டுக்குள் கேட்டுக்கொண்டிருந்தது.

நேற்று வீட்டுக்கு வந்திருந்த நடராசுவைப்பார்த்ததும் ஊரில் உள்ளவர்களைப் பார்த்தது போல் இருந்தது. தரவை வெளியும் புளி வெட்டையும் கிளித்தட்டு மறிப்பும் ஒரு நிமிடம் நினைவில் மின்னி மறைந்தது. "முரசுமோட்டையில வசந்தனை பார்த்துக்கொண்டு வாறன் அண்ணை. ஒரு வருசத்துக்கு மேல பார்த்து. அதுதான் வந்தனான்."

"பார்த்துக் கதைச்சனியே."

''ஓமண்ணை அரை மணித்தியாலம் நிண்டு கதைச்சிட்டு வாறன். இங்கதான் ஆனையிறவை சுத்தின சென்றியளில நிற்கிறான் போல கிடக்கு. உங்களிட்ட அவன் வந்து போறது எனக்கும் ஒரு ஆறுதல். நான் நாளைக்கு ஊருக்கு போவம் எண்டு பார்க்கிறன்."

"அன்னம் பிள்ளையள் எப்பிடி இருக்குதுகள்."

"இருக்கினம். தெரியாதே கொஞ்சம் கஸ்ரம் தான். தோட்டம் துரவு செய்யிறது அங்கயும் குறைஞ்சிட்டுது. அன்னக்காவுக்கும் மாறி மாறி வருத்தம் வந்தபடி. செந்திருவை கட்டிக்குடுக்காமல் வைச்சிருக்கிறதுதான் அவவுக்கு பெரிய கவலை. கணேசனுக்கும் பெரியகுடும்பம். நாலைஞ்சு பிள்ளையள். திரவியமும் கலியாணம் கட்டியிட்டான். ஏதோ பார்க்குதுகள்தான். எண்டாலும் கஸ்ரம்தானே அண்ணை." அவருக்கு கவலையாக இருந்தது.

அன்னத்தைப் பார்த்து மூன்று வருசத்துக்கும் மேலாகிவிட்டது. பாதை அடைபட்டே இரண்டரை வருசத்துக்குமேல் ஆகிறது. அன்னத்தைப்பார்க்கவேண்டும் போல் இருந்தது.

"நாளைக்கு உன்னோட நானும் வாறன் நடராசு. அவன் நெல்லியடி மில்கார சிவசம்பு முந்தின நெல்லுக்காசு கொஞ்சம் கார்த்திகேசுவிட்ட குடுத்திருக்கிறானாம். அதையும் வாங்கிவரலாம்"

"உந்த கிளாலி பிரயாணம் சரியான கஸ்ரம். நீங்கள் போய் வரமாட்டீங்கள். காசை நான் போய் வாங்கிவாறன்." என்றான் முருகானந்தன்."

"இல்லைமோனை. நான் போறன்'' அவள் அன்னத்தை ஒருக்கா பார்த்திட்டு வாறன். நடராசுவோடதானே போறன்"

''நான் திரும்ப கூட்டிவந்து விட்டிட்டுப் போறன் தம்பி. வருகில் வரட்டும்."

"அப்ப நானும் வாறன். ரெண்டு பேருமாய்ப் போவம்" என்றாள் பராசத்தி.

"நீ வரவேண்டாம். முதல்ல நான் போயிட்டு வாறன்."

அரை மனதாய்த்தான் சம்மதித்து அனுப்பினார்கள்.

பராசத்தி புளுங்கல் அரிசி, பச்சை அரிசி, உளுந்து, பயறு, தேங்காய் என்று இரண்டு மூட்டை கட்டி கொடுத்து விட்டாள். அதை சாமான் படகில் நடராசு எற்றி கட்டி மத்தியானமே அனுப்பிவிட்டார். மறு கரைக்குப்போய் அவற்றை எடுத்து வானில் ஏற்றிக்கொண்டு போகலாம்.



தாமரைச்செல்வியின்

# பச்சைவயல் கனவு

அவர் தோளில் போர்த்தியிருந்த வெள்ளைத் துவாயை இறுக்கிப் பிடித்துக்கொண்டார். என்ன குளிர் இது. நெஞ்சின் ஆழம் வரை போய் ஊசியாய் குத்தியது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடற்பரப்பு கருமையாய் அசைந்துகொண்டிருந்தது. இருளுக்குள் தூரத்தூர படகுகளின் அசைவு தெரிந்தது. ஒவ்வொரு படகும் இரண்டு மூன்று படகுகளை நைலோன் கயிறுகள் கொண்டு கட்டி இழுத்துக்கொண்டு போனது.

"அங்க ஆனையிறவு காம்ப் தெரியுது பாருங்கோ அண்ணை."

வலது பக்கம் கை நீட்டி நடராசு சொல்ல அந்த திசையை உன்னிப்பாய்ப் பார்த்தார்.

மிகவும் தூரத்தில் நிறைய மின்விளக்குகளின் வெளிச்சப் பொட்டுக்கள். முதுகுத்தண்டில் குளிர் இன்னமும் ஏறியது. அந்த வெளிச்சப் பொட்டுக்களின் ஏதோ ஒரு எல்லையில் தான் வசந்தனும் நிற்கக்கூடும். அவர் திரும்பி நடராசுவைப்பார்த்தார். இருட்டுக்குள் முகம் தெரியவில்லை. ஆனால் நடராசுவுக்கும் வசந்தனைப் பற்றிய நினைவு இப்போது எழுந்திருக்கும்.

அணியத்துக்குள் மேல் இருந்தவனின் குரல் இருட்டுக்குள் கேட்டது. "ஆனையிறவு காம்பில யிருந்து அவங்கள் அடிக்கிற ஒரு ஷெல் எங்கட படகில விழுந்தால் நாங்கள் துலைஞ்சம். இங்கால பூநகரி பக்கமிருந்தும் ஆமி கண்போட்டில நிண்டு அடிக்கிறவங்கள். பயந்து பயந்து போய் வரவேண்டியிருக்கு."

அவர் அந்த வெளிச்சப் பொட்டுக்களையே பார்த்தார்.

அவர் காண இருந்த ஒருசின்ன தடைமுகாம் எந்த விதமாய் ஒருபயங்கர ராணுவமுகாமாக மாறிப்போயிருக்கிறது..... அந்த வெளிச்சப்பொட்டுக்கள் கண்ணிலிருந்து மறையுமட்டும் பதட்டம் தணியவில்லை.

காற்றின் வேகம் நேரத்துக்கு நேரம் அதிகமாகியது. படகில் ஏறிய நேரத்திலிருந்து அழுத குழந்தை இன்னமும் அழுகையை நிறுத்தவில்லை. "இந்த இருட்டுக்கயும் குளிர்காத்துக்கயும் குழந்தையளைக் கொண்டு வெளிக்கிடுதுகள்தானே" நடராசு அலுத்துக்கொண்டார்.

''அதுகளுக்கும் என்னென்ன அலுவல்களோ....."

உயிரைப் பணயம் வைத்து இப்படி ஒரு பயணம் செய்யவேண்டும் என்ற விதி எத்தனை பேரின் தலைகளில் எழுதப்பட்டிருக்கிறது. பிரயாணம் என்ன வீடு வாசல்களில் இருந்தும் சீவிக்க ஏலாத நிலை தானே தோன்றியிருக்கிறது.

அவருக்கு பாலச்சந்திரன் எல்லோரையும் அழைத்துக்கொண்டு கொழும்புக்கு போனது ஞாபகத்திற்கு வந்தது. போவதற்கு முதல்நாள் சொல்லிவிட்டுப்போக வந்த கனகம் மச்சாளின் வார்த்தைகள் இப்போதும் காதில் இரைகிறது. "வயது போன நேரத்தில நிம்மதியாய் ஒரு இடத்தில இருக்க ஏலாமல் அலையவேண்டிக்கிடக்கு. இருவது வயதில இங்க வந்தனான். வந்து நாப்பத்தி நாலு வருசத்துக்கு மேல ஆச்சு. இனி எங்க போய் இருந்தாலும் இங்க இருந்த நிம்மதி வராது. அவரோட எல்லாம் போச்சு. அவர் இருந்திருந்தால் ஒரு இடமும் அசையமாட்டார். என்ன கஸ்டம் வந்தாலும் இங்க தான்.... இந்த மண்ணிலதான்...." கண்ணில் நீர் தழும்ப சொன்ன வார்த்தைகள்.

அவர்கள் போன பிறகு அந்த பெரிய வீட்டையும் பண்டாகமத்து வீட்டையும் பார்க்கும்போதெல்லாம் நெஞ்சுக்குள் பாரம் ஏறியது போல் இருக்கும். கார்த்திகேசுவும் வயல் செய்வதை விட்டு விட்டு காணிகளை குத்தகைக்கு கொடுத்து விட்டு சாவகச்சேரியிலேயே போய் இருந்துவிட்டார். எப்போதாவது ஒரு தடவை வருவார். நாலைந்து நாட்கள் நின்று விட்டுப்போவார். அதுவும் ஒரு தடவை கொம்படி பாதையால் வரும்போது ஹெலிஹொப்டரிலிருந்து றொக்கற் அடித்ததில் கையில் காயப்பட்டு ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் படுத்து எழும்பி வந்தார். அன்றைக்கு ஓடுப்பட்டு விழுந்து எழும்பி கத்திக்குளறியதை நினைத்து பிரயாணமே வேண்டாம் என்று இருந்து விட்டார்.

கொம்படி ஊரியான் பாதை மூடப்பட்ட பின்னர் தான் இந்த கிளாலி கடற்பாதை திறக்கப்பட்டது. எல்லாவற்றையும் விட மோசமான பாதையாக இது அமைந்து விட்டது. ஆனாலும் எத்தனை பேர் ஒரு நாளில் பயணம் செய்கிறார்கள்.

"இனி என்ன அண்ணை. வந்து சேர்ந்திட்டம். அந்தா கரை தெரியுது"

அவர் நிமிர்ந்து பார்த்தார். தூரத்தூர மங்கலான வெளிச்சங்கள்.

"அப்பாடா வந்து சேர்ந்தாச்சு..."

ஒவ்வொருவரும் நிம்மதி மூச்சு விட்டார்கள்.

இதென்ன வாழ்க்கை உழைக்க முடியாமல்... வாழ முடியாமல்.... நிம்மதியாய் உறங்க முடியாமல்.....

வெளிநாட்டிலிருந்து மகேந்திரனும் சித்திராவும் மாறி மாறி கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

"ஆனையிறவிலயிருந்து ஷெல் அடிக்கிறாங்களாம். நீங்கள் ஊரில இருக்க வேண்டாம். தூரத்தில போய் இருங்கோ. ஒரே உங்களை நினைச்சு பயந்துகொண்டிருக்கிறம். வயல் செய்து நட்டப்படவேண்டாம். நாங்கள் காசு அனுப்பிறம். நீங்கள் யோசிக்கவேண்டாம்."

யார் என்ன சொன்னாலும் அவரால் வயல் செய்யாமல் இருக்க முடியாது. புரட்டாதி மழையைக்கண்டதும் கையும் காலும் விறுவிறுக்கத் தொடங்கிவிடும். அறுபத்திஐந்து வயதாகிறது. வயல் வேலை என்றால் எந்த அலுப்பும் தெரிவதில்லை.

அவர் நிமிர்ந்து வானத்தைப்பார்த்தார். இருந்த நட்சத்திரங்களையும் இப்போது காணவில்லை. அடர்த்தியான கருமையில் பரந்திருந்தது வானம். "வானம் இருட்டிக்கிடக்கு. மழை எங்கயோ பெய்யுது. எங்கட பக்கங்களிலதானோ தெரியேலை. பயிரெல்லாம் கதிர் வந்ததும் வராததுமாய் கிடக்கு. இந்த கால போகத்துக்கு பத்து ஏக்கர்தான் விதைச்சனான் நடராசு. இப்ப ரெண்டு வருசமாய் நட்டம்தான். மண்ணிலயிருந்து வந்ததெல்லாம் திரும்ப மண்ணுக்குள்ளயே போகுது. வரவர நிலமையும் மோசமாய்த்தான் வருகுது. அவங்கள் ஆனையிற விலயிருந்து ஷெல் அடிச்சால் நாங்கள் வீடு வாசல் விட்டு தூரப்போய் நிண்டிட்டு வாறது. இப்படி விட்டிட்டு போனதில வீடும் சேதம். வீட்டுப் பொருட்களும் சேதம் பாதிகளவு போயிடும். என்ன வாழ்க்கை இது."

அவரின் குரலில் ஆற்றாமை இருந்தது. தலைக்கு மேலாக சுப்பர் சொனிக்கும், அவ்ரோவும் சுற்றிக் குண்டு போடும். சில நிமிட பதட்டத்திற்குப் பிறகு எல்லாம் இயல்பாக நடக்கும். இதுதான் வாழ்க்கை என்றாகிவிட்டது.

படகு நின்றதும் கால் அளவு தண்ணீருக்குள் இறங்கி நடந்தார்கள். நடுச்சாம நேரத்தில் அந்த கடற்கரை சனங்களினால் நிறைந்து போயிருந்தது. படகுகளிலிருந்து இறங்குபவர்களும் படகுகளில் ஏறிப்போக காத்திருப்பவர்களுமாக எத்தனைபேர்....

அவரை ஒரு பக்கத்தில் நிற்கச்சொல்லிவிட்டு நடராசு போய் உரப்பை மூட்டைகளை எடுத்துவந்தான். ஒருமணிநேரத்துக்கும் மேலாக காத்திருந்து ஊருக்குப்போகும் பஸ்ஸில் ஏறினார்கள். விடியற்காலை நாலு மணிக்கு வீட்டுக்கு போய் சேர்ந்தார்கள். முன்விறாந்தையில் மெல்லிய வெளிச்சத்தோடு லாம்பு எரிந்துகொண்டிருந்தது. முற்றத்தில் நின்று கூப்பிட்டார்கள். அன்னம் எழுந்து லாம்பை தூக்கிப்பிடித்துக் கொண்டு பார்த்தாள்.

மெலிந்து ஒடுங்கிப்போய் நின்ற அன்னத்தை லாம்பு வெளிச்சத்தில் பார்த்து கவலையோடு "என்னடியாத்த உன்ர கோலம்" என்றார். அந்த நேரத்தில் அவரை அன்னம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. திகைப்புடன்,

"உந்த கடலுக்குள்ளால வந்தனியே. வா... வா.."என்றாள். நடராசு மூட்டைகளை வைத்துவிட்டு "போட்டுவாறன், திரும்பி போகேக்க சொல்லுங்கோ அண்ணை நானும் கூட வந்து விட்டிட்டு வாறன்." என்று சொல்லிவிட்டுப்போய்விட்டார்.

"உப்புக்காத்துக்க வந்தது கால் முகம் கழுவியிட்டு வந்து முதல்ல தேத்தண்ணி குடிச்சிட்டு இரு. ஏதும் சாப்பிட்டனியே"

''ஓம் கடற்கரையில கடையில சாப்பிட்டிட்டு வந்தனாங்கள்.

"சரி வா." அவரைப்பார்த்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சி அவள் முகத்தில் தெரிந்தது. தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள். முகம் கை கால் எல்லாம் கழுவிவிட்டு வந்தார்.

"எப்பிடி இருக்கிறீங்கள்"

"நானும் செந்திருவும்தான் இங்க இருக்கிறம். நக்ரரில உழைப்பு வாற நேரம் கணேசனும் தரும். தோட்டம் துரவு செய்யிற நேரம் திரவியமும் ஏதும் தரும். மற்றதுகளும் கிட்டக்கிட்டத்தான் இருக்குதுகள். ஏதோ எங்கட சீவியத்தை அதுகள் பார்க்குதுகள்"

செந்திரு அடுப்பை மூட்டி கேத்திலை தூக்கி வைப்பது தெரிந்தது. "இவளுக்கு இருபத்தெட்டு வயதாச்சுது, ஒரு வழியும் பிறக்குதில்லை கண்களில் நீர் தழும்ப சொன்னாள் அன்னம்.

அவர் அன்னத்தின் சுருக்கம் விழுந்த முகத்தைப் பரிவோடு பார்த்தார். இவளுக்கு பதினெட்டு வயதானபோதே கலியாணம் செய்து வைக்க முடியவில்லையே என்று ஆச்சி பட்ட கவலை நினைவுக்கு வந்தது நேற்றுப் போல் இருக்கிறது. எத்தனை காலம் இடையே ஓடிப்போய்விட்டது.


நீளமான பெருமூச்சு அவர் அடி நெஞ்சிலிருந்து எழுந்தது.

(தொடரும்)

## அத்தியாயம் - 08

தொல்லை வரும்போது, அதனைக் கையாளும் திறமையையும், அதுவே உருவாக்கும். - ஆலிவர் வெண்டேல் ஹோல்ம்ஸ்

# கட்டிளமைப்பருவ பதகளிப்பும் அமைதியின்மையும்



**பாலசிங்கம் செவ்வேள்**

ஏறக்குறைய பன்னிரண்டு வயதிற்கும் பதினெட்டு வயதிற்கும் இடைப்பட்ட வயதுப்பிரிவினர் கட்டிளமைப்பருவத்துள் அடங்குகின்றனர். உடலியல், உளவியல் ரீதியில் பெரும் பிரளயம் ஏற்படுவது இப்பருவத்திலாகும். இதில் பரம்பரைக் காரணிகள், சூழற் காரணிகள் என்பன அதிகளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பரம்பரைக் காரணிகள் எனும்போது தாய், தந்தை வழியாக கடத்தப்பட்டு வருகின்ற இயல்புகளின் பிரதிபலிப்புக்களைக் கருதுவது, சூழலில் காணப்படும் மனிதர்கள், பழக்க வழக்கங்கள் ஆகிய தாக்கங்களின் பிரதிபலிப்புகளே சூழற்காரணிகள் எனப்படும். கட்டிளமைப்பருவ இயல்புகள் இவற்றை உள்வாங்கியதாகக் காணப்படும்.

கட்டிளமைப் பருவத்திற்கு முந்திய பருவங்களின் சூழற் செல்வாக்கினையும் கருத்திலெடுத்தல் அவசியமானது. முன் பிள்ளைப்பருவத்திலான தாயின் நிலை. பிள்ளைப் பருவத்தில் பெற்றோரிடமிருந்தான அன்பு, அரவணைப்பு, கணிப்பு என்பன பங்கு வகிக்கின்றன. பெற்றோர்களின் கணிப்பை பெற்றுள்ள பிள்ளைகள் எதையும் இலகுவாக எதிர்கொள்ளும் ஆற்றலையும், சமாளிக்கக்கூடிய திறனையும் அதிகம் கொண்டிருப்பர். ஆனால் சிலவேளைகளில் இவர்களிடையே ஏற்படக் கூடிய பிரிவு, துயரை உண்டாக்கி பாதக விளைவுகளைத் தோற்றுவித்துவிடலாம். இதனால் தொடர்ச்சியாக ஒருவரிற்கு ஏற்படக் கூடிய பதகளிப்பு அமைதியின்மையை உருவாக்கி சிந்தனைப் பிறழ்வுகளை ஏற்படுத்தி விடுகின்றன. இழப்பைப் பற்றியே தொடர்ந்து யோசித்தல், இதனால் ஏற்படக் கூடிய உடல் தளர்ச்சி, கைகால் நடுக்கம், நெஞ்சு பட படப்பு, அதிகமாக வியர்த்தல் என்பவற்றையே பதகளிப்பு என்பது விளங்குகின்றது. இவ்வாறான நிலைமைகளின்போது ஆரம்பத்திலேயே ஆர்வமுள்ள இன்னொருவருடன் கலந்துரையாடுவதன் மூலம் நிவாரணம் காணலாம்.

இப்பருவத்திலேயே சிந்தனைத்திறன் பரவலாக்கமடைகிறது அல்லது விரிவடைகிறது. ஒவ்வோர் விடயங்கள் பற்றியும் தீவிரமாகச் சிந்திப்பர். பொதுவாக சிந்தனை ஆழமானதாகவன்றி மேலோட்டமானதாகவே காணப்படுகின்றது. இதனால் வாழ்நாளில் ஒவ்வொரு நிகழ்வுகளும் உடனடித் தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றன. உதாரணமாக சோகமான திரைப்படமொன்றைப் பார்க்கும் ஒருவர் அதற்குள் ஆழ்ந்து விடுகின்றார். அதாவது திரைப்படச் சூழ்நிலைக்குள் அவர் தள்ளப்பட்டுள்ளார். தனது உண்மை சூழலையும் பார்ப்பது திரைப்படமென்பதையும் அறவே மறந்து விடுகின்றார். கதாநாயகன் படும் வேதனை, அவஸ்தை தனக்கு நேர்ந்துள்ளதாகவே கருதுகின்றார். இதன் போதான மனவெழுச்சியானது தற்காலிக அமைதியின்மையை ஏற்படுத்தி சிந்தனை ஆற்றலைத் தூண்டவல்லது.

ஒருவரின் உடலிலுள்ள உணர்வுகள் முழுவதும் எழுச்சி பெறுகின்ற செயன்முறையே மனவெழுச்சி எனப்படுகின்றது. இவை மனித அனுபவத்தின் ஓர் அடிப்படைக்கூறாகும். (Components) ஆனால் அதன் சரியான தன்மை (Nature) யைக் குறிப்பிடுவது மிகவும் கடினமானது. ஏனெனில் உடலிலுள்ள பல்வேறு அமைப்புக்கள் (Boby system) மனவெழுச்சியில் பங்குகொள்கின்றன.

மனவெழுச்சி என்பது நெருக்கடிப் பிரதிவினை (Emergncy Reaction) என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். இதன்போது.

01. முகபாவனை வேற்றுமை.
02. குருதியமுத்த அதிகரிப்பு.
03. வேகமான இதயத்துடிப்பு.
04. தசை விறைப்பு, நடுக்கம் போன்றன ஏற்படலாம். மகிழ்ச்சி இவற்றின் போது அன்பு, களிப்பு போன்றன இனிமையான மனவெழுச்சியையும், அச்சம், கவலை, சினம் பொறாமை, சலிப்பு போன்ற இனிமையற்ற மனவெழுச்சிகளையும் அனுபவிக்கின்றனர்.

பெற்றோரிடமிருந்து விடுபடவும், நண்பர்கள் வட்டத்தை விரிவாக்கம் செய்வதிலும் ஆர்வம் காட்டுவர். குழுவாக இயங்கி மற்றையோரின் காணியில் திருட்டுத்தனமாக இளநீர் பறித்தல், மாங்காய் பிடுங்குதல் போன்றன இப்பருவ ஆண்களுக்குரிய விருப்பத்திற்குரிய செயற்பாடுகளாகும். இவற்றால் ஏனையவர்கள் அதிகம் பாதிக்கப்படக்கூடாது என்ற மனநிலையையும் கொண்டுள்ளனர். பெண்கள் இதிலிருந்து வேறுபட்டுள்ளனர். இவர்களின் ஓய்வுநேரம் ஆக்க வேலைகளைச் செய்தல், படம்பார்த்தல், அரட்டையடித்தல் என்பவற்றிலேயே கழிகின்றது. செயற்பாடுகளை வெற்றிகரமாகத் திட்டமிட்டு நிறைவேற்றும் திறன் இரு பாலாரிடமும் காணப்படும். திருமண வீடுகள், ஆலயங்கள், பொது இடங்கள் என்பவற்றில் இக்குழுவினர் பெருமளவு கருமங்களை நிறை வேற்றுவதனைக் காணலாம்.

போதியளவு உடல்/உள வளர்ச்சியை பெற்றிராதவர்கள் அதிகம் தனிமையையே நாடுகின்றனர். குழுவினருடன் சேர்ந்து கருமமாற்ற வேண்டிய கட்டாய சூழ்நிலைகளின்போது ஏனையவர்களின் செயற்பாடுகளில் உடன்பாடற்றவர்களாகவும், கோபம், பதகளிப்பு என்பவற்றை சம்பாதிப்பவர்களாகவும் உள்ளனர். இவர்களுள் ஒரு சாரார் எதையும் வெளிக்காட்டிக்கொள்ளார். சகிப்புத் தன்மை உள்ளவர்போல் காணப்படுவர். இன்னோர் பிரிவினர் வரைதல் , பாடுதல், நடித்தல் என்பவற்றில் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதன் மூலம் சமநிலை பெறுகின்றனர்.

குறித்தவோர் பிரிவினர் மட்டும் எதையும் விரோதமாக நோக்கும் மனப்பாங்கையும் தமக்குத்தான் பிரச்சினைகள் நிறைய உண்டு எனவும் கருதிக்கொள்வர். ஒருவரிற்கும் பயனற்று இவ்வுலகில் வாழ்கின்றேன். உலக வாழ்க்கையே அர்த்தமற்றது என்ற போக்கில் தொடர்ச்சியாக சிந்திப்பர். இவற்றின் போதான பதகளிப்பும் அமைதியின்மையும் மிக அபாயகரமானது. தற்கொலை மனநிலைக்கு இட்டுச் செல்லக்கூடியது. பெற்றோரைப் பிரிந்து கல்வி கற்பவர்கள் சிலரிடமும் மேற்கண்ட நிலை காணப்படலாம். உடற்பயிற்சி செய்தல், தரமிக்க திரைப்படங்களை தேர்வு செய்து பார்த்தல், தியானம் செய்தல் போன்ற பழக்கங்களை இவர்கள் நாடுவது அவசியமானது.

கட்டிளமைப் பருவத்தினரிடம் உளச்சோர்வு என்பதும் முக்கிய பிரச்சினையாகவுள்ளது. கோட்டஸ்பெல்டு (Gottestled) என்பவர் உளச்சோர்வு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். உளச்சோர் நிலை பணிக் குறைவு (Lowerde,Activity) தாழ்வு மனப்பான்மை (Feelings of Interiority) சோகம் (Sadness) சோர்வு மனப்பான்மை (Pessimism) ஆகிய நிலைகளைக் கொண்டு காணப்படும்.

01. உணவுப்பழக்கங்களில் கோளாறு **(Eating dis orders)**
02. உடல் எடை கூடுதல் அல்லது குறைதல் **(Weight Loss or Gaiu)**
03. தூக்க குறைபாடு **(Sleep dis orders)**
04. அடிக்கடி அழுதல் **(Frescent crying spells)**
05. குற்றவுணர்வு அல்லது குறைந்த மதிப்பு **(Feelings of guit or Inadequacy)**
06. தற்கொலை எண்ணங்கள் அல்லது நடத்தைகள் **(Suicidal Thoughts or Behavior)**
07. சோர்வு அல்லது ஊக்கமின்மை **(Fatighe or Listlessnes)**
08. கவனக்குறைவு **(Inabllity of conentrate)**
09. குறைவான ஆற்றல் **(Decreased mental productivity)**
10. குறைவான பாலுணர்வு **(Decreased sexual libido)** என்பன உளச்சோர்வின் பிரதான வெளிப்பாடுகள் ஆகும்.

இப்பருவ பிற்கூறிலே எதிர்பாற் காதலுணர்ச்சி எழுகின்றது. முற்று முழுதாக இது ஓர் உணர்வு சம்பந்தப்பட்ட விடயமாகும். இப்பருவத்தில் ஏற்படுகின்ற இவ்வாறான உணர்வு தளம்பற் தன்மை உடையதாகக் காணப்படலாம். பதகளிப்பு அமைதியின்மை என்பன இங்கு சர்வ சாதாரணமானது. ஆயினும் அவை நிகழ்வின் தன்மையைப் பொறுத்து நேர்த்தன்மையையோ, எதிர்த்தன்மையையோ பெறுகின்றன.

சந்திப்பதற்கு எதிர்பாலர் தாமதித்து வரல், வராதிருத்தல், தனது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாது இருத்தல் என்பவற்றின் போதான பதகளிப்பு அமைதி இன்மை என்பன காலகதியில் சீராகி விடுகின்றன. காதலரின் பிரிவுத்துயரினால் ஏற்படும் அமைதியின்மையும் இவ்வகைக்குள் அடங்குகின்றது.

ஒருதலைக்காதல், காதல் தோல்வி என்பவற்றினால் வார்த்தை விபரிப்பு எல்லைகளை எட்டாத மனவெழுச்சி ஏற்படுகின்றது. இதன் போதான பதகளிப்பு அமைதியின்மையை தொடராக ஏற்படுத்தி அசாதாரண நிலையைத் தோற்றுவித்து விடுகின்றது. இவ்வகையானோரை இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடியும். இவர்கள் பசியின்மை, நித்திரையின்மை, எவற்றிலும் ஈடுபாடற்றதன்மை என்பவற்றைக் கொண்டு காணப்படுவர்.

பருவ ஆரம்பத்தில் ஒத்த வயதுக்குழுவினராக சிகரெட், மதுபானம் என்பவற்றைப் பரீட்சித்துப் பார்த்த பலரும் இப்பொழுது நிரந்தரமாகவே அவற்றிற்கு அடிமையாகிவிடுகின்றனர். இதன் மூலம் ஒருவகை உளச்சமநிலையை இவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். சிலவேளைகளில் இனி செய்வதற்கு எதுவுமே இல்லையென்ற எண்ணம் ஏற்பட்டு தற்கொலை மனநிலை உருவாக்கப் பெறுகின்றது. இலங்கையில் பெரும்பாலான தற்கொலைகளும் தற்கொலை முயற்சிகளும் இவ்வகைப்பட்டனவாகவே காணப்படுகின்றன.

நம்பிக்கையான ஒருவருடன் பிரச்சினைகளை மனம்விட்டு கதைப்பதன் மூலமோ, உளவளத்துணையாளரை நாடுவதன் மூலமோ மேற்கண்டவர்கள் சுமுக முடிவை எட்டமுடியும். கலைத்துறை, சமூகமாற்றத் திற்கான புரட்சி என்பவற்றில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு பலர் உளச்சமநிலை பெறுபவர்களாயுள்ளனர். ஒட்டுமொத்தத்தில் இப்பருவமானது சில சாதனையாளர்களையும் பல வேதனையாளர்களையும் உருவாக்கி விடுகின்றது.

போர் மூலமான உள நெருக்கீடென்பது தற்காலத்தில் இலங்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதன் தாக்கம் எல்லோரிடையேயும் ஏதோவோர் விதத்தில் காணப்படுகின்றது. இழப்பு, பிரிவு, அச்சம் என்பனவற்றால் மனதிற்கு ஏற்படுகின்ற ஒரு சிக்கலான நிலைமையே உள நெருக்கடி எனலாம். இவை பொதுவாக எல்லோரிடையேயும் காணப்படும் ஒன்று என்பதுடன் இதிலிருந்து மீளுதலென்பது கடினமானதல்ல. கட்டிளமைப்பருவத்தினர் இதனால் அளப்பரிய மாற்றங்களைச் சந்திக்கின்றனர்.

வன்முறை வன்முறையால் வெல்லப்படவேண்டும் என்ற நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டு விடுகின்றனர். இவர்கள் சமூக வாழ்க்கைக்கு ஈடுகொடுக்கமுடியாத நெருக்கீட்டிற்கு ஆளாகின்றனர். விகாரமான காயங்களைக் காணுதல், தமது சகாக்களின் இறப்பு, என்பவற்றால் உடனடித்தாக்கம் பெறுகின்றனர். இந்நிகழ்வுகள் காலப்போக்கில் இவர்களிற்கு சர்வசாதாரணமாகி விடுவது என்பது கூட அதிக ஆபத்தானது. ஏனெனில் மேற்கண்ட நிலைமைக்குள் இரக்கமின்மை, குரூர மனப்பான்மை போன்றவற்றை ஏற்படுத்த வல்லன. இவர்கள் எந்தளவுக்கு சாதாரண வாழ்க்கைக்கு திரும்புவர் என்பது சந்தேகத்துக்கு உரியது. இவற்றின் நிவர்த்திக்கான தேடல்கள் எமது சமுதாயத்தின் உடனடித் தேவையாகும்.


அகதி முகாம் வாழ்க்கை என்பதும் போரின் இன்னோர் விளைவாகும். இங்குள்ள கட்டிளமைப்பருவத்தினரின் வாழ்க்கை சொல்லொணா இன்னல்களை நிரம்பியது. அடிப்படை வசதிகளின்மை, வேலைவாய்ப்பின்மை, கல்வி வசதியின்மை என்பவற்றால் சிந்தனாசக்தி முடக்கப்பட்டுள்ளது. இளமைக் கோலத்தின் விளைவுகளால் சமுதாய சீர்கேடுகளும் அதிகரித்துள்ளன. இவற்றினால் அதிக மன உளைச்சல்களிற்கு ஆளாகின்றனர். கல்வி கற்பதே இப்பருவத்தினரின் பிரதான இலக்கு ஆகும். சூழல் அனுபவங்கள் மூலமும், பாடசாலை வழிகாட்டலினாலும் தேர்ச்சி பெறுபவர்களாகவுள்ளனர். திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலம் புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை என்பவற்றை உரிய பிரயோகத்தின் மூலம் ஊட்டுவதன் மூலம் மேற்கண்ட நிலைமைகளிற்கு ஓரளவு தீர்வுகாண முடியும்.

இலங்கையில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள தேர்ச்சி மையக் கலைத்திட்டம் உரியமுறையில் பிரயோகிக்கப்படுமாயின் சிறந்த அறுவடையைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இவற்றைவிட உள நெருக்கீடு, உளச்சோர்வு என்பன பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் அவசியம்.

01. மேற்படி நிலைமைகள் மாற்றியமைக்ககூடிய ஒன்றென்பதையும், மனச் சூழ்நிலைகளிலேயே இவை தங்கியுள்ளது என்பதையும் வெளியீடுகள், பொதுக் கூட்டங்கள், கருத்தாடல்கள், நாடகங்கள் என்பவற்றின் மூலம் பொதுமக்களிற்கு போதிய விளக்கமளித்தல்.
02. உளச்சோர்வு,உளநெருக்கடி உடையோரைக் கண்டுணர்ந்து ஆலோசனை வழங்குதல்.
03. கல்லூரிகள், பொது நிறுவனங்கள் என்பவற்றில் உளவளத்துணை நிலையங்கள் அமைத்து சேவைகளை வழங்குதல்.
04. கடினமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் குற்ற உணர்வுகளைக் குறைத்து தற்கொலை மனநிலையினின்றும் தப்புவித்துவிடல்.

போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஓரளவு தீர்வுகாணுதல் இயலும், எனவே இது விடயத்தில் அனைவரும் போதிய கவனமெடுத்து உரிய நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் உள, உடல் ஆரோக் கியமுள்ள சமுதாயத்தினைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

நான் கறுப்பன் தான்; ஆயினும் என் ஆன்மா வெண்மையானது. - வில்லியம் பிளேக்



# யாழ் ஆயரின் நத்தார் புதுவருடச் செய்தி!

**கிறிஸ்து** பிறப்பு விழாவை கொண்டாடுகின்ற வேளையில் ஈழநாதம் பத்திரிகை வாசக அன்பர்கள் அனைவருக்கும் முதலில் விழாக்கால வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

2003ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா ஒரு புதிய சிக்கலான கால கட்டத்தில் நிகழ்வது மிகவும் துரதிஸ்டவசமானது. இலங்கை ஜனாதிபதி மாண்புமிகு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும் பிரதமர் மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இருந்து வந்த அரசியல் கருத்து வேறுபாட்டின் முறுகல் நிலையும் அதன் உச்சக்கட்டமான இன்றைய அரசியல் ஸ்திரமற்ற குழப்பநிலையும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாயினும் தமிழ் மக்களை பொறுத்தவரையில் மிகவும் வேதனைக்குரியதாகும்.

தமிழ் மக்கள் வாழ்வில் ஏதோ ஒரு சரித்திர திருப்பம் ஏற்படப்போகிறது நிரந்தர அமைதியும் சமாதானமும் சுதந்திரமும் நிறைந்த ஒரு வாழ்வு மிக நீண்ட கால போர் அனுபவங்களின் பின் மலரப்போகிறது என எண்ணியிருந்தவேளை தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் சிதறடிக்கப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் அரசியல்வாதிகள் நீண்டகாலமாக நடத்திவந்த கபட நாடகம் மீண்டும் ஒருமுறை அரங்கேறியுள்ளது.

இலங்கையில் மீண்டும் ஒரு தடவை யுத்தம் மூழுமானால் அதன் தாக்கங்களையும் கோர விளைவுகளையும் அனுபவிக்கப் போகிறவர்கள் தமிழ் மக்களே என்ற வகையில் போரைப் பற்றி கனவில்கூட அவர்கள் நினைக்கத் தயாராய் இல்லை. இலங்கை மண்ணில் இனப்பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வு ஏற்படுமானால் அது இலங்கையின் இரு முக்கிய அரசியல் கட்சிகளின் கூட்டு முயற்சியிலேயே ஏற்படமுடியும். இந்த இரு முக்கிய கட்சிகளின் தலைவர்களான ஜனாதிபதியும் பிரதமரும் பதவியிலிருக்கும் வேளையில் இவர்களின் மனதை இறைவன் பக்குவப்படுத்தவும் உரிய விதமாக திசைதிருப்பி இலங்கை மண்ணின் நீண்டகால இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண வழிவகுக்கவும் வேண்டி தமிழ் மக்கள் அனைவரும் இந்த இக்கட்டான வேளையில் இறைவனில் முழு நம்பிக்கை வைத்து செபத்தில் ஈடுபட வேண்டுமென மீண்டுமொரு தடவை அழைப்பு விடுக்கிறோம்.

இரண்டு தசாப்தங்களாக போரையும் அதன் அழிவுகளையும் அன்றாட அனுபவங்களாக கொண்டிருந்த தமிழ் மக்கள் எத்தனையோ அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் இழந்தவர்கள். பயத்தோடும் பதட்டத்தோடும் பாதுகாப்பில்லா நிலையில் தம் வாழ்வை மிக நீண்ட காலம் கழித்தவர்கள். எங்கு போனாலும் அடையாள அட்டையை கொண்டு திரியவும் ஓர் இரண்டாம் தர பிரஜையாக நடத்தப்படவும் நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்.

இனியும் இந்த நிலையை தொடரவிடாமல் இந்த இக்கட்டான வேளையில் யார் பெயரையும் பெருமையையும் பெற்றுக் கொள்வது என்ற அதிகார போட்டியில் தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்வை நாசம் செய்ய வேண்டாமென்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் பெயராலும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மனிதாபிமான ரீதியில் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

விடுதலைப்புலிகளின் தலைவர் தமது 2003ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் சமாதானத்துக்கான தனது உறுதிப்பாட்டை உலகம் முழுவதும் அறியத்தக்க விதமாக மிக ஆணித்தரமாக வெளிப்படுத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த இக்கட்டான நிலையிலும் இச்செய்தியானது மன மகிழ்வையும் ஆறுதலையும் தருகிறது.

கடந்த கால போர் அனுபவங்களின் பின்னர் ஏனோதானோ என்ற ஒரு கட்டுப்பாடற்ற வாழ்வை வாழ எத்தனிக்கின்ற இளைய சமுதாயத்தினர் தம் நிலையையும் போக்கையும் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வைக் கவனத்தில் கொண்டு தம் இளைய சக்திகளை



உரிய விதமாக வழிப்படுத்த வேண்டுமென வேண்டிக்கொள்ள விரும்புகிறோம். இளமைத் துடிப்பில் சுதந்திரமாக எதையும் செய்யலாம் என்ற நினைப்பில் இன்று இளைஞர்கள் செய்து வருகின்ற நடவடிக்கைகள் போர்க்கால குழந்தைகளின் உளவியல் தாக்கத்தையும் வெளிப்பாட்டையும் பிரதிபலிப்பதாய் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. எதிர்கால தலைவர்களான இவர்கள் கவனத்தோடும் கண்ணியத்தோடும் வாழ்வை அணுக வேண்டும், தம் பொதுநலனுக்காக தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

போரின் பன்முக தாக்கங்களினால் எமது சமூககட்டுமான அமைப்பில் குடும்பங்கள் மிக மோசமாக தாக்கப்பட்டுள்ளன. குடும்ப பாரம்பரிய ஒற்றுமை, திருமண பந்தம், பிள்ளை வளர்ப்பு, பெற்றோரை கனம் பண்ணுதல், கீழ்ப்படிதல் போன்ற பல விடயங்கள் இன்று குழப்பத்திற்கும் கேள்விக்கும் உள்ளாகியிருக்கின்றன. யாழ் மறைமாவட்டத்தில் மலர இருக்கின்ற புதிய ஆண்டில் குடும்பங்களில் அதிக கவனம் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. எல்லா தமிழ் குடும்பங்களிலும் விசேட கவனம் செலுத்த வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். குடும்ப அமைப்பையும் கட்டுக் கோப்பையும் நாம் மீள ஒரு தடவை கவனமுடன் பாதுகாத்து வளர்ப்போமானால் இன்று நாம் எதிர்நோக்குகிற இளைஞர்களுடைய பிரச்சனை போன்ற பல பிரச்சனைகள் தானாகவே இல்லாது ஒழிந்துவிடும்.

இருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியை கண்டனர் என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகளை திரும்ப திரும்ப படித்தும் செபித்தும் வேண்டிக்கொண்ட எமக்குக் கிடைத்த சிறு ஒளியாகிய இந்த சமாதான முன்முயற்சிகள் பெரு வெளிச்சமாக மாறி இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் மேலும் வீச வேண்டும் என்பதே எமது வேண்டுதலும் ஆசீரும் ஆகும்.

உலகின் ஒளியாகப் பிறந்த பாலகன் இயேசு எமது இல்லங்களுக்கும் உள்ளங்களுக்கும் நீடித்த ஒளியையும் நிரந்தர சமாதானத்தையும் கொண்டு வர நத்தார் வாழ்த்துக்களையும் 2004ஆம் ஆண்டு புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கிறோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்**
**யாழ் ஆயர்**


## ஈழநாதம் மக்கள் நாளேட்டின் ஆண்டு மலருக்கான ஆக்கங்கள்

**ஈழநாதம் மக்கள் நாளேடு எதிர்வரும் 19.02.2004 அன்று 15ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அதனை முன்னிட்டு வெளிவரவுள்ள ஆண்டுமலரில் பிரசுரிப்பதற்கு**

- சிறுகதைகள்
- கவிதைகள்
- கட்டுரைகள்

என்பன ஆக்ககர்த்தாக்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- ஆக்கங்கள் சமூக, அரசியல், பொருளாதார, விஞ்ஞானத் துறைகள் சார்ந்தவையாகப் பரந்துபட்ட தளத்தில் ஆக்கப்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.
- ஆக்கங்களை 20.01.2004 இற்கு முன் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் கிடைக்கக்கூடியவாறு நேரில் அல்லது தபால்மூலம் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றனர்.
- அனுப்புபவர்கள் தமது தெளிவான அஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்.

ஆசிரியர்,
ஈழநாதம்,
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.



நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!
அருள் கொமினிக்கேசன்
இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எந்தத்தொலைபேசியில் இருந்தும் கட்டுபடியாகும் கட்டணத்தில் (நிமிடத்திற்கு 5/=) வெளிநாட்டு அழைப்புக்கள்.
இணைப்புத்தொலைபேசி அழைப்புக்கள். (Connecting Calls)
இன்ரநெற், சர்வதேச மற்றும் உள்ளூர் அழைப்புக்கள்.
போட்டோப்பிரதி, லெமினேற்றிங், பக்ஸ், ஈமெயில் வசதிகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
யாழ்நகரில்
அருள் கொமினிக்கேசன்
T.P 021-2223536
Fax:021-2227097
Email:arulnet@hotmail.com
இல1, பிறவுண் வீதி,
நாவலர் வீதிச்சந்தி,
யாழ்ப்பாணம்.
(ச-8820)




இனிய நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
பட்டுச்சாறி வகைகள் ஸ்கேட் அன் பிளவுஸ்
கவுன் வகைகள்சல்வார் கமிஸ்வகைகள்
ஆகியவற்றை ஒரேஇடத்தில்
பெற்றுக்கொள்ள
DRESS POINT
றெஸ் பொயின்ட்
இல:-23, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்
(ச-8821)
T.P:- 0777- 745511




கணேசா நகையகம்
தனது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது.
நங்கையரின் மனம் விரும்பும் வடிவங்கள்
தரம் குன்றா தங்கநகைகள்
தங்கநகை உலகில் தமக்கென
தனியிடம் பதித்தவர்கள்.
கணேசா நகையகம்
123,பஜார் வீதி, வவுனியா. TP : 024-2222464
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP - 021 222 5987
யாழ் கணேசா நகையகம்
124,செட்டியார் தெரு,
கொழும்பு- 11.
TP - 011-2336252
(ச-8822)




EXPOAIR
your friend in the skies
எக்ஸ்போ எயார்
யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.
ஒதுக்கீடுகளுக்கு
அழையுங்கள் -
021-2223891, 021-2226297, 0114 512666,
011-2360291, 0712-348888, 0712-349999,
011-2300290,
e-mail- jaffna@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

# நெஞ்சில் நீங்கா நினைவில்...



தாய்
மடியில்
10
-
06
-
1957

தாயக
மண்ணில்
24
-
12
-
1984

# லெப்டினன்ட் - காண்டீபன்

**சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா**

**(குமுளமுனை, முள்ளியவளை, முல்லைத்தீவு)**


**(யாழ் பல்கலைக்கழக மாணவரவைத் தலைவரும், அனைத்திலங்கை பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர் பேரவைத்தலைவரும் (1982-1983))**

இளமையிலே துடிப்பாய் சிந்தையிலே தூய்மையாய் வாழ்ந்தவனே
பல்கலையில் விஞ்ஞானம் படித்து வித்தகனாய் மிளிர்ந்திடுவாய் என நினைத்தோம்
மெய்ஞானம் அறிந்த உன் உள்ளம் விஞ்ஞானத்தை இறுதியிலே நிறுத்தியது ஏன்?
ஆம்! எம் இனத்தின் துயர் கண்ட நீ விடுதலை என்று வீறென மீட்க சென்றாயே
பல்கலையில் மாணவரை அணிதிரட்டி அகிம்சை என்னும் ஆயுதத்தை கையில் எடுத்து போராடினாயே

இறுதியில் வன்னியில் தலைவன் சேனைக்கு அடித்தளம் இட்டாயே!
நீ இட்ட விதைகள் இன்றும் தான் பல்கலையில் வீறென முளைத்துக்கொண்டிருக்கிறது.
இன்றும் தான் உன் வழி நடக்கும் சேனைகள் அகிலம் எங்கும் புகழ் பரப்பி நிற்கின்றது.
நீ துயின்று ஈர்பத்தாண்டுகள் ஆனாலும் எம் நெஞ்சமதில் நீங்கா நினைவுடனே நித்தமும் வாழ்ந்திடுவாய்.

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
ஆசை மருமக்கள்,மக்கள்.

தகவல்:
இராஜேஸ்வரன் ஜெயநீதன்
(லண்டன்)



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்

லான்ட் மாஸ்ரர்,
ஜெனரேற்றர்,
மீன்பிடி இயந்திரம்- உதிரிப்பாகங்கள்

31-12-2003 வரை விசேட விலைக்கழிவு

இவையனைத்தையும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

10-12-2003 அன்று எமது நிறுவனத்தின் 20ஆம் ஆண்டு நிறைவாகும் இவ்வாண்டு நிறைவினையொட்டி இவ்விசேட விலைக்கழிவினை வழங்குகின்றோம்.

# கருமாரி மோட்டோஸ்

இல:281A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8835)

HAPPY NEW YEAR குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ் HAPPY NEW YEAR

உழவு இயந்திர,
வாகன
உதிரிப்பாகங்களைப்
பெற்றுக்கொள்ள

# குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

இல:52, 2ம் குறுக்குத்தெரு, வவுனியா
☎ 024-2221845 ☎ 024-2221842

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் சைக்கிள் லான்ட் மாஸ்ரர், ஜெனரேற்றர், உதிரிப்பாகங்கள் கிடைக்கும் இடம்

நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்



குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல:110, பஜார் வீதி, வவுனியா
☎024-2222475, ☎0242222474

(சி-8834)

குட்வில் பாவனையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்.

# புத்தம் புதிய 4 சில்லு குட்வில் டிரைக்டர் உற்பத்தியாளர்களின்

புதுவருட ஸ்பெஷல் → ஜனவரி 10ஆம் திகதி வரை

10% கழிவு

குட்வில்

ISO9001:94

- S195N ரக என்ஜின் குதிரை வலு 12
- 02 வருட உத்தரவாதம்
- இலவச சேவை - 6 மாதத்திற்கொரு முறை
- உதிரிப்பாகங்கள் தாராளமாகவும் மலிவாகவும் உள்ளது
- டீசல் லீற்றருக்கு 21 கிலோமீற்றர்
- வேகம் மணிக்கு 22 கிலோமீற்றர்

சுழற் கலப்பையுடன்
உழவு இயந்திரம்
190,000/=

1.GL 70 - 18 முனைகள்

ஹைட்ரோலிக்
இழுவைப்பெட்டியுடன்
உழவு இயந்திரம்

ரிப்பிங் ரெயிலர்
1.5 MTS - 7'X5'X15'
215,000/=




Show room& office
NO.5 வுட்லன்ட் வீதி, களுபோவில, தெஹிவளை.
(கொழும்பு புறக்கோட்டையிலிருந்து 120 பஸ்ஸிலேறி பாமன்கடை யப்பான் பாடசாலைக்கு முன்னால் இறங்கவும்)
T.P:(011) 2818415, 0777 351376, 0777 351695
Fax: (011) 2818416.

Spares:
55 துட்டுகெமுனு வீதி, தெஹிவளை.

(சி-8833)



## கோபிகா ஆடையகம்

தனது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
நத்தார் புதுவருட
வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றது.

நவ நாகரிகத்திற்கு ஏற்ப
கண்கவர் ஆடைத்தினிசுகள்,
சிறுவர்களுக்கான எழில்
கொஞ்சும் அழகான
ஆடைகள்
இவையனைத்தையும்
பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

**கோபிகா ஆடையகம்**

SA/2A நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்
T.P: 021-2222377

(சி-8827)

நத்தார் புதுவருட
வாழ்த்துக்களை அனைவருக்கும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

நத்தார் புதுவருட நன்நாளில்
நாவிற்கினிய ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழ நாடுங்கள்

## ரொப் கிறீம் ஹவுஸ் அன் ஹோட்டல்

பெரிய கடை,
மன்னார்.
தொ.பே:023-2232385

(சி-8829)

நத்தார் புதுவருட நன்நாள் வாழ்த்துக்கள்!



சங்குப்பற்களைக்கட்டுவதற்கு
நவீன முறையில் கிளிப் போடுவதற்கும்
இலவசமாக கண்களைப்பரிசோதித்து
தரமான கண்ணாடிகளைப்பெறவும்
விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ்
பெற்றுக்கொள்ளவும்.

## எரிக் கணேஷ்

பல் மூக்குக்கண்ணாடி அகம்

566,564,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222486

(சி-8826)

எம்மினிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் புதுவருட
வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்



டீ.வி, டெக், குளிர்சாதனப்பெட்டி, ரேடியோ,மின்விசிறிகள்,
கணனிகள் ஓடியோ வீடியோ CD பிளேயர் இவை அனைத்தையும்
ஒரு வருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள

## ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்

இல: 01C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P 021-2225349

(சி-8828)

இப்பொழுது
யாழ் நகரில்

அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!

## மூன்று நட்சத்திர உணவகம்

இல:162,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

சைவ, அசைவ
உணவு வகைகளின் சங்கமம்

| செல்வம் ஸ்ரோர்ஸ் | 3 ஸ்ரார் ஹோட்டல் | போன் சொப் |
|---|---|---|
| தொ.பேசி 2223817 | தொ.பேசி 2223590 | தொ.பேசி 2227125 |

(சி-8825)

Exclusive Photo and Digital Printing



அகிலத்தில் அமைதி நிலவிட அனைவருக்கும்
நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

1980 ஆம் ஆண்டில் இருந்து
இன்று வரை புகைப்படம் என்றால்
உங்கள் மனதில் இனிக்கும் பெயர்

## போட்டோ சண்கோ டியிற்றல் கலர் லாப்

சில மணித்துளிகளில் உங்கள்
கையில் உங்களின் புகைப்படம்

இல: 204,கண்டிவீதி, வவுனியா
T,P 024-21130
கிளை: இல:84, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
T.P.0777-110261

(சி-8824)

"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறையின்"

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!

## நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்

## NORTHERN TECHNOLOGY(PVT)LTD

NT NORTHERN TECHNOLOGY

- சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
- இலகு தவணைக்கட்டண முறை
- வவுனியா,கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச்சேர்ந்த சகல அரச,தனியார் நிறுவன ஊழியர்களும் இலகு தவணைக்கட்டண முறையில் கணனிகளைப்பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653

வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649

மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"

(சி-8539)

நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

ரீ.வி, டெக் ரேடியோ, மணிக்கூடு
அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்தையும் பெற்றுக் கொள்ள
அன்றும் இன்றும் என்றும்
நன்மதிப்பை பெற்று விளங்கும்
ஒரே ஸ்தாபனம்.

## ராஜீ ஸ்ரோர்ஸ்

இல:67,69 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P-0094-21-2225224

190 நாடுகளில் இருந்து விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்

WESTERN UNION | மணி டிரான்ஸ்ஃபர் SM

உலகெங்கும் பணத்தை பெற விரைவான வழி. SM

பணம் மாற்றும் வாடிக்கையாளர்களுக்கு
அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும்.

(சி-8823)




# பொருத்தம்



**சாரங்கன்**

"**கண்ணீரும்** சோறும் சாப்பிடுகிறாள்" என்பார்களே. அது கௌசல்யாவின் வாழ்க்கையில் மிகவும் பொருத்தமாகிவிட்டது. ஆறுவருடகாலமாக காதலித்து திருமணம் செய்துகொண்டவள். ஆறு மாதத்திற்குள் இப்படியான பேர்இடி விழும் என்றால் எவ்வாறு தான் தாங்கிக்கொள்வாள். தனது நாயகன் கௌதமன் காணாமல் போனோர் பட்டியலில் இணைந்து பதினொரு வருடங்கள் கடந்து விட்டன. அவன் காணாமல் போன போது வயிற்றில் இருந்த லக்ஷனிற்கு வயது பத்தாகிவிட்டது.

கௌதமன் - கௌசல்யா இருவருக்குமிடையில் காதல் எப்போது ஆரம்பித்தது என்று கூற முடியாத அளவிற்கு சிறிது சிறிதாக ஆரம்பித்து, வாழ்ந்தால் இருவரும் சேர்ந்துதான் வாழ்வது எனும் இறுக்கமான கட்டத்திற்கு வளர்ந்து விட்டது. "எனக்கு ஒரு நிரந்தர வேலை கிடைக்கும் மட்டும் திருமணத்தைப்பற்றி சிந்திக்கக் கூடாது" என்று கௌதமன் கூறிய போது கௌசல்யா எந்தவித சஞ்சலமின்றி சம்மதித்தாள். அந்த அளவிற்கு அவர்களுக்கிடையில் நம்பிக்கை வளர்ந்துவிட்டது. இவ்வாறு ஆறு வருடங்கள் எவ்வாறு கடந்தது என்று தெரியாமல் கடந்து விட்டது. எதிர்பார்த்தது போல் கௌதமனிற்கு. விரும்பிய வேலை கிடைத்துவிட்டது. கௌசல்யாவின் மனமும் துள்ளியது.

எப்படியோ இவ்வளவு காலமும் கௌதமன், கௌசல்யா உறவை சந்தேகக் கண்ணோடு பார்த்துக்கொண்டிருந்த பெற்றோர் இப்போது நெருப்பெடுத்தார்கள். ஏதோ நடக்கக்கூடாதது ஒன்று நடந்து விட்டது போல் அவர்கள் கொதித்தார்கள். கௌதமனின் தாயார் கௌசல்யாவின் வீட்டிற்குச் சென்று கௌசல்யாவின் பெற்றோரிடம் தனது உள்ளக் கிடக்கைகளை கொட்டித்தீர்த்தாள். "பிள்ளையிற்ற எடுத்துச் சொல்லுங்கோ... கடசிமட்டும் உது நடவாது என்று"

"நான் உயிரோடு இருக்கும் மட்டும் உது நடக்க விடமாட்டன்" இவ்வாறு தனது ஆசைகள், ஆதங்கங்கள், கவலைகள் எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தாள். கௌசல்யாவின் வீட்டார் மௌனவார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் பேசவில்லை. கௌதமனின் தாய் கோகுலவாணி சென்றவுடன் கௌசல்யாவைக் கலங்கி நீர்முட்டும் கண்களுடன் திரும்பிப்பார்த்தனர். "உண்மையாம்மா..." கேட்டு முடிய விம்மத் தொடங்கினாள் கௌசல்யாவின் தாய் இலட்சுமி. தாயும், மகளும் மாறி மாறி அழுகின்றார்கள் இவ்வாறு முடிவு எட்டப்படாமலேயே அமைதி ஆகின்றனர்.

கோகுலவாணி தனது மகனிடம் தந்திரமாக பேசுவதற்காக சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தாள். மதிய உணவு அருந்துவதற்காக வீட்டிற்கு வருகின்றான் கௌதமன். அன்பாக மேசையில் அமர்த்தி மகனிற்கு உணவு பரிமாறுகிறாள் கோகுலவாணி - இதைவிட சந்தர்ப்பம் கிடைக்குமென அவள் எண்ணவில்லை. பரிமாறியவாறே பேச்சைத் தொடங்குகிறாள். "எத்தினை பெரிய பெரிய இடங்களில் இருந்தெல்லாம் உன்னை சம்மந்தம் கேட்டு வந்தவை. நான் உன்னோட கதைக்கோணும் எண்டு நினைச்சுக் கொண்டிருக்க... அதுக்கிடையில நீ..." என்று இழுத்தவாறே மீண்டும் தொடர்ந்தாள். "அந்தக் குடும்பத்துக்க போய்ற்று வசதியாய் வாழ ஏலுமே?" கூறிக்கொண்டிருக்கும் போதே திடீர் என எழுந்து கௌதமன் கையை கழுவி விட்டு சென்றான். இன்னும் விடுவதாக இல்லை. "தம்பி அம்மா சொல்லுறதை கேக்கவேணும். நான் உதுக்கு சம்மதிக்கமாட்டன்'' கோகுலவாணி கூறிக்கொண்டு இருக்கும்போதே கௌதமன் மீண்டும் வேலைக்குப் புறப்பட்டு விட்டான். இவ்வாறு கௌதமனின் தந்தை பாலரும் முடிந்தவரை முயன்று பார்த்து விட்டார். கௌதமன் தன் பக்கம் சாய்வதாக இல்லை. அந்தக் கிராமத்திலே கார்த்திகேயன் மாஸ்ரர் என்று ஒருவர் இருக்கிறார். இவர்தான் இந்தக் கிராமத்தில் மூத்தவர்களில் படித்தவர் - இவரே இக் கிராமங்களில் ஏதேனும் பிரச்சினை என்றால் இலாவகமாகவும், சரியாகவும் தீர்த்து வைப்பவர். இவருடைய வார்த்தைக்கு ஒரு தனிமதிப்பு அக்கிராமத்தில் உள்ளது. இப்போது பாலர் குடும்பத்தின் பிரச்சினையும் இவருடைய காதுக்கு எட்டுகிறது. தானாகவே பாலருடைய வீட்டுக்கு. செல்கிறார் - வழமையான மரியாதையுடன் வரவேற்றனர். கார்த்திகேயன் மாஸ்ரர் வந்திருக்கும் நோக்கம் அவர்களுக்கு விளங்கியது. முதலில் கோகிலவாணி தனது பக்க நியாயங்களை விலாவாரியாக விளக்கினார். இடையிடையே பாலரும் தனது கருத்தை முன்வைப்பார். "சைகலோஜி" நன்கு அறிந்த கார்த்திகேயன் மாஸ்ரர் அவர்களுடைய கருத்தை எதிர்ப்பின்றிகேட்டார். அவர்கள் கூறுவது சரியென்பது போல தலையசைத்துக்கொண்டார். எல்லாம் கேட்டுக்கொண்டதன் பின் "சின்னனுகள் உப்பிடித்தான்" என்று ஒருவார்த்தை மட்டும் பேசி அவர்களுடைய சிந்தனையை கிளறி விட்டு "நான் ஒருக்கால் அவையின்ர வீட்டையும் போட்டு வாறன்" என கௌசல்யா வீட்டை நோக்கிப் புறப்பட்டார். கௌசல்யா வீட்டிற்கு சென்றும் அவர்களுடைய வாதத்தையும் கேட்டு இறுதியில் "இனி என்ன சிறுசுகள் விரும்பிற்றுதுகள் செய்துவைக்கிறதுதான் நல்லம்" தீர்ப்புக் கூறினார் காத்திகேயன் மாஸ்ரர். "அதுக்கு அவையளும் எல்லோரும் சம்மதிக்கோணும்..." என்றாள் இலட்சுமி. 'அது நான் கதைக்கிறன்..." என்று கூறியவாறே கார்த்திகேசன் மாஸ்ரர் புறப்பட்டார்". நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன.

இப்போது கௌதமனும் கௌசல்யாவும் சந்திக்கும் போதெலலாம் மௌன வார்த்தைகளே அதிகமாக பேசுவார்கள். அத்தோடு வீட்டில் பெற்றோருக்கிடையில் நடைபெறும் உரையாடலையும் பரிமாறிக்கொள்வார்கள். இறுதியில் கௌதமன் பிரியும்போது "நீர் ஒண்டுக்கும் யோசிக்காதேயும், எல்லாம் நல்லபடியாக நடக்கும்" நம்பிக்கை கூறி விடை பெறுவான்.

கார்த்திகேயன் மாஸ்ரரின் பணி தொடர்ந்து கொண்டே இருந்தது. "அதுகள் தான் வாழப் போறதுகள் அதுகளின்ர சந்தோசம் தான் எங்கட சந்தோசம்'' இவ்வாறு பாலருக்கும் கோகுலவாணிக்கும் மாறி மாறி எடுத்துக் கூறி ஒருவாறு விரும்பியோ விரும்பாமலோ சம்மதித்துவிட்டனர். இறுதியாக பாலர் ஒரு நிபந்தனை விதித்தார். "இரண்டு பேருடைய குறிப்பையும் பார்த்து குறிப்பு ரெண்டும் பொருந்தினாத்தான் செய்யலாம்" என்று கூறினார். அதற்கு கார்த்திகேயன் மாஸ்ரரும் சம்மதித்தார். செய்தி கௌதமனின் காதிற்கு எட்டியது. அவனிற்கு மிகவும் சந்தோசம். இச்செய்தியை உடனேயே கௌசல்யாவிற்கு சொல்லத் துடித்தான். இருவரும் சந்தித்தபோது கௌதமன் மகிழ்ச்சியோடு இச் செய்தியை சொன்னான். ஆனால் கௌசல்யாவின் முகம் இறுகியது. வாடியது. "குறிப்புப் பார்க்க நான் சம்மதிக்கமாட்டன்" என்றாள் "ஏன்" இது கௌதமன். "குறிப்புப் பார்த்து தற்சமயம் குறிப்புப் பொருந்தேல்லையெண்டா" தனது முற்போக்கு சிந்தனையை மீண்டும் நிரூபித்தாள் கௌசல்யா. "அதுவும் சரிதான்" சிந்தித்து முடிவெடுத்தான். இருமனம் இணைந்தால் திருமணம். இடையில் ஏன் குறிப்பு, யாதகம் பலவாறு சிந்தித்து குறிப்புப் பார்ப்பதில்லை என முடிவெடுத்துக்கொண்டனர். இவர்களது முடிவு சரியோ பிழையோ கார்த்திகேயன் மாஸ்ரருடைய பணியை சிக்கலாக்கியது. எப்படியோ கார்த்திகேயன் மாஸ்ரரும் தனது திறமையை மீண்டும் நிரூபித்துவிட்டார். ஊர் கூடி வாழ்த்த அம்மி மிதித்து அருந்ததி பார்த்து கோலாகலமாக திருமணம் நடைபெற்று முடிந்தது. அலை கடலைக் கடந்த பெருமையுடன் கௌதமன், கௌசல்யா ஆகியோரின் வாழ்க்கைப் படகு சென்றுகொண்டிருந்தது. அவர்களின் அன்புப் பரிசாக கௌசல்யாவின் வயிற்றில் அன்புச் சின்னமொன்று வளரத்தொடங்கியது.

ஆறுமாதந்தான் கடந்திருக்கும். தனது கடமையின் நிமிர்த்தம் தென்பகுதிக்கு சென்றான் கௌதமன் - சென்றவன்தான் இன்றும் வீடு திரும்பவில்லை. அவனுடன் வஸ்சில் பயணம் செய்தோர் வந்து கூறினர், குறிப்பிட்ட அந்த முகாமில் அவனை இராணுவத்தினர் கைது செய்தனர் என்று. பக்கத்து வீட்டு சிவம் அண்ணையும் அந்த வஸ்சில இருந்தவராம் "என்னை மறிக்கினம், நான் நிண்டு விசாரணை முடிந்தவுடன் வாறன்" என்று கௌதமன் அவரிடம் கூறியதாக சிவம் அண்ணை சொன்னார். "ஏன் பிடிச்சிருப்பாங்கள்" "காசுகீசு வேண்டுற நோக்கமாய் இருக்கும்" இவ்வாறு அயலவர்கள் ஆறுதல் கூறவந்து. தமக்குள்ளே கதைத்துக்கொண்டனர். கௌசல்யாவை பார்க்கமுடியாது. எப்படித்தான் ஆறுதல் கூறினாலும் தேற்ற முடியாது. தவித்தனர் உறவினரும், அயலவரும் கார்த்திகேயன் மாஸ்ரரும் பாலரும் தமது தேடுதல் படலத்தை ஆரம்பித்தனர். அவர்களும் தேடாத முகாமில்லை. எல்லா முகாமிலும் "நாங்கள் பிடிக்கேல்லை" என்ற பதிலே வரும். காலம் கரைந்துகொண்டே போனது. எல்லோருடைய மனங்களிலும் ஏக்கம் அதிகரித்தது.

கார்த்திகேயன் மாஸ்ரரும் எம் -பி மாரை பிடித்து இராணுவ அதிகாரிகளிற்கு காசாய் இறைத்து தெரிந்த தடுப்பு முகாம்கள் சிறைச்சாலைகள் எல்லாம் தேடினார்கள். எங்கும் இல்லை, காலங்கள் ஓடின. மாதங்கள், ஆண்டுகள் ஆகின. "கௌதமன்"என்ற பெயர் காணாமல் போனோர் பட்டியலில மட்டும் இருந்தது. எல்லோரிற்கும் நம்பிக்கை இழந்து கொண்டே போனது. இப்பொழுது "ஆள் இல்லை" என்ற முடிவே எல்லோர் மனங்களிலும்.

கௌசல்யாவிற்கு குழந்தை பிறந்து பாடசாலை செல்லத் தொடங்கிவிட்டான். கௌசல்யா தினம் தினம் செத்துப் பிழைப்பாள். நெற்றியில் பொட்டு வைப்பதா? விடுவதா? இப்படியே தான் புகுந்த வீட்டிலே அவளது வாழ்க்கை. உறவினர், அயலவர்களுக்கெல்லாம் அது பழங்கதையாகிவிட்டது. பத்து வருடங்கள் கழிந்தாலும் இப்போது சமாதானம், பேச்சு வார்த்தையென்றெல்லாம் பேசும் போது இதன் மூலம் தனது ஆசை நிறைவேறி விடுமோ என்று தவிப்பாள்.

கௌதமனின் தம்பிக்கு இப்போது திருமணப்பேச்சு நடக்கிறது. பொருத்தம் பார்ப்பதற்காக பாலர் புறப்படவுள்ளார். கோகுலவாணி தனது இரண்டாவது மகனின் "குறிப்பை" எடுத்து வந்து கொடுத்துவிட்டு குறிப்பை வடிவாய்பார்த்துச் செய்யுங்கோ'' "குறிப்புப் பார்க்காமல் பொருத்தம் பார்க்காமல் செய்துதானே அவன்ர வாழ்கையை துலைச்சனீங்க" இது கோகுலவாணிக்கு சாதாரண வசனம்தான். ஆனால் குசினிக்குள் நின்று கேட்டுக்கொண்டிருக்கும் கௌசல்யாவிற்கோ ஆன்மாவைப் பிழியும் வசனமாய் அமைந்துவிட்டது. தவித்தாள், விம்மினாள் ஏதோ குற்ற உணர்வு அவளை வேலால் குத்தியது. "நான்தானே குறிப்பு பார்க்க வேண்டாம் எண்டு தடுத்தனான்." அவளால் தாங்கமுடியவில்லை விம்மி விம்மி அழுதாள்.

மறுநாள் காலையில் எழுந்து குளித்துவிட்டு சேலையுடுத்துக்கொண்டு மிக அழகாக நெற்றியிலே குங்குமப் பொட்டும் வைத்துக்கொண்டு. புறப்பட்டாள். தனது கைப்பையினுள் தனது யாதகக் குறிப்பையும், கௌதமனின் யாதகக் குறிப்பையும் வைத்து தோளிலே தொங்கவிட்டபடி வலது கையில் தனது மகனையும் பிடித்தபடி நடந்தாள். நீண்ட தூரம் நடந்து அந்த சாத்திரியார் வீட்டை அடைந்தாள் சாத்திரியாருக்கு ஒரு பெண் வந்திருப்பது ஆச்சரியமாக இருந்தபோதும் அதை அவர் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. கௌசல்யா இரு குறிப்புகளையும் நீட்டினாள். சாத்திரியார் ஆறுதலாக கணிக்கத் தொடங்கினார். கிரகப் பொருத்தம், யோனிப் பொருத்தம் இப்படி ஒவ்வொன்றாக கணித்தார் கணித்து முடிவில் மலர்ச்சியான சிரிப்புடன் "தங்கச்சி எல்லாம் நல்ல பொருத்தம் எண்பது வீதத்துக்கு மேலே பொருந்துது. நீங்க யோசிக்காம இந்தச் சம்மந்தத்தை செய்யலாம்" கஸ்ரப்பட்டு சிரித்த வாறே கௌசல்யா குறிப்புப் புத்தகங்களை வாங்கியபின் சிறுதொகை பணத்தை கொடுத்தாள். ஏதாவது பகிடியாக சொல்லவேண்டும் என்று நினைத்த சாத்திரியார் காசை நீட்டி வாங்கிய படி "கலியாண வீட்டுக்கு எனக்கு சொல்லாம விட்டிராதேயுங்கோ" என்று கூறி சந்தோசமாக விடை கொடுத்தார்.

மனித ஆன்மாவின் சந்தேகம், நரகம். - மதாம் கெத்தரின் கஸ்பரின்

# நூல்நோக்கு




| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மௌனப் புதைகுழிக்குள் |
| நூலாசிரியர் | : | மணலாறு விஜயன் |
| பதிப்புரிமை | : | சுகி கணனிப்பிரிவு மட்டு - அம்பாறை. |
| பாகம் | : | 01 |
| நூலின் விலை | : | 100/= |

**இந் நூலின்** ஆசிரியர் திரு.மணலாறு விஜயன் அவர்கள். சமகாலத்தில் தமிழ் பேசும் நெஞ்சங்களால் அறியப்பட்ட பரிட்சயமான ஒருவர். இவர் ஓர் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் என்பதைவிட சிறந்த நாடக இயக்குநரும், எழுத்தாளரும் ஆவார். திரு. விஜயன் ஆசிரியர் அவர்கள் தாயக வரலாற்று ஆய்வில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி வருபவர். சிங்கள பேரினவாதிகளால் விழுங்கப்பட்டுக்கொண்டிருக்கும் எம் தாயக பிரதேசங்களை ஆசிரியர் அவர்கள் பட்டியலிட்டு உலகின் பார்வைக்கு காட்டியவர் என்பதை யாவரும் அறிந்ததே. இவருடைய கடும் உழைப்பின் பயனால் கிழக்கு மாகாண மக்களின் அவலங்களை சுமந்து மலர்ந்துள்ளது "மௌனப் புதைகுழிக்குள்- பாகம் - 01"எனும் வரலாற்று நூல்.

ஆயிரம் துயரங்களை சுமந்து மண்ணுள் எழுதப்படாத வரலாறுகளாகவும் பதியப்படாத மனிதங்களாகவும் புதையுண்டு கிடக்கும் எம் மட்டு நகர் உறவுகளின் சோக நிகழ்வுகளை கிளறி எடுத்து மிகச்சிரமத்தின் மத்தியில் ஆசிரியர் அவர்கள் ஒரு வரலாற்றுச் சான்றாக இந் நூலை வெளியிட்டு இனவாதத் தின் உச்சத்தை உலகிற்கு காட்டியுள்ளார். எம் தாய் மண்ணிலும் மட்டு நகர் மக்களின் மனங்களில் புதையுண்டு உலகின் கண்களுக்கு தெரியாமல் அவலங்களைச் சுமந்து தொலைந்து போன எம் இன மக்களின் துயர வரலாற்றை தேடும் பெரும் பணிக்கு தலைவர் மேதகு. பிரபாகரன் அவர்களும், தளபதி கேணல் கருணா அவர்களும் பெருந்துணை புரிந்து வழிகாட்டியுள்ளனர்.

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகள் தொடர் கதைகளாக தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளும் அதன் தலைமைகளும் தமிழர்மீதான இனப்படுகொலைகளை ஓர் அரசியல் சித்தாந்தமாகவே கருதி வந்துள்ளனர். இலங்கைத்தீவில் ஓர் காலத்தில் கற்றறிந்த கல்விமான் என புகழப்பட்ட S.W.R.D.பண்டாரநாயக்கா அவர்கள் தான் தமிழர்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கையை ஆரம்பித்து வைத்த ஓர் கதாநாயகன் ஆவார். 1953தொடக்கம் 1958என இவருடைய ஆட்சிக்காலத்திலே கோரப்படுகொலைகளுக்கு உருவம் கொடுக்கப்பட்டது. பச்சை பாலகர்களை சுடும் தார்ப்பீப்பாக்குள் போடுவதும் பெண்களை மானபங்கப்படுத்தி மார்பில் சிங்களசிறி எழுதியதும் ஏனையவர்களை வெட்டியும், சுட்டும், எரித்தும் நாசகார வேலைகளில் ஈடுபட்ட நாயகன் இவராவார். அன்று அவர் தொடக்கம் இன்று ஆட்சியில் இருக்கும் அம்மையார் வரை தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை அசாதாரணமாகவே அரங்கேற்றி வருகின்றனர். அவ்வாறான இனப்படுகொலைகளை அரங்கேற்றும் அரங்கமாக, களமாக அமைந்தது கிழக்கு மாகாண மாகும்.

"மீன்பாடும் தேனாடு'' எனப் புகழ்ந்து பாடப்பட்ட மட்டுநகர் மண் நீர் வளம், நிலவளம், கடல்வளம் என வளம் பெற்று வனப்புடன் நிமிர்ந்து நிற்கிறது. உறவுகளை தொலைத்த சோக வடுக்களை நெஞ்சில் சுமந்து கூடு கட்டி அடைகாத்த குஞ்சுகளுடன் சுற்றம் சூழ சுதந்திரமாக வாழ்கின்றனர் அம்மக்கள். எம் விடுதலை வரலாற்றில் மட்டு நகர்மண் கொடுத்த விலை அதிகம். காலா காலங்களாக இம் மக்கள் அனுபவித்த துன்பங்களும், துயரங்களும் வார்த்தைகளால் வர்ணிக்கவோ அன்றி எழுதிமுடிக்கவோ முடியாதவை.

சிங்கள கொலை வெறியர்களாலும், இனவாத குண்டர்களாலும் ஆண்டாண்டு காலங்களாக கொலைக் கொடூரத்தின் உச்சத்தை அரங்கேற்றி தாம் குந்தியிருந்து கூழ் குடித்த தாய் நிலத்திலேயே புதையுண்டுபோயும் இனவாத காமுகர்களின் காமப்பசிக்கு குதறப்பட்டு தீயுடன் சங்கமமாகியும் ஊன் உண்ணும் பட்சிகளுக்கு இரையாகியும் போனவர்களின் அவலக் கதைகளை சுமந்து நிற்கும் மண் மட்டக்களப்பு என்பதில் ஐயமில்லை.

இந் நூலின் ஆசிரியர் அவர்கள் கோர கொலை நிகழ்வுகளை சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கொலை வலைக்குள் சிக்கி தெய்வாதீனமாக தப்பித்து எஞ்சி நிற்பவர்களையும் சென்று சந்தித்து சம்பவங்களை அவர்களின் வாயிலாகவே கேட்டறிந்து உண்மையை உண்மையாக இனவாதத்தின் கோர பற்களை வெளியுலகிற்கு காட்டியுள்ளார். அத்துடன் வரலாற்று சிறு சான்றுகளாக கிடைத்த சம்பவங்களுடன் தொடர்புடைய புகைப்படங்களை நூலின் இடைக்கு இடை பிரசுரித்துள்ளமை அக்கொடூர நிகழ்வை நேரில் கண்டு அனுபவித்த ஓர் பிரம்மையை நூலைப் படிப்பவர் உள்ளங்களில் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கொக்கட்டிச்சோலை தொடக்கம் வீரமுனை படுகொலை வரை சிங்கள காடையர்களுடன் இணைந்து "முஸ்லிம்''குண்டர்களும் ஏனைய தேசவிரோத கும்பல்களும் எம்மக்கள் மீது நடாத்திய கொலை தாண்டவத்தை கேள்வியுறும் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருடைய குருதியும் உறைந்துவிடும். நாளங்களின் குருதி கொப்பளிக்கும். ஆவேசம் பொங்கியெழும். ஏனெனில் அத்துணைக்கு ஆசிரியர் அவர்கள் ஒவ்வொரு சம்பவத்தினையும் அத்துன்பங்களை அனுபவித்த மக்கள் முகத்தின் முன் கூறுவது போன்று மிக எளிமையானநடையில் கூறியுள்ளார். அவற்றுள் சிலவற்றை நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

மகிழடித்தீவில் 1991 ஆவணி முதலாம் நாள் படுகொலையில் உயிர்தப்பி இருக்கும் திருமதி விமலாதேவி கூறுகிறார்....

வெடிச்சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. நம்மட அக்கா சொன்னா கதவை பூட்டிக்கொண்டு உள்ள இருப்பம் எண்டு. இல்லக்கா குழந்தைய தூக்கிக்கொண்டு மில்லுக்க போவம். எல்லாரும் அங்க தான் போறாங்க என்று சொல்லிட்டு பிள்ளையை தூக்கிக்கிட்டுபோனம். மில்லுக்க நிறையப்பேர் இருந்தாங்க. பிள்ளையள் எல்லாம் அழுதாப்போல அதுகளின்ர அழுகையை நிப்பாட்ட எல்லாரும் பால் கொடுத்திட்டிருந்தாங்க. வெடிச்சத்தம் பக்கத்துல கேட்டுது. எல்லோரும் அரோகரா .... அரோகரா என கடவுளை கும்பிடத் தொடங்கினாங்க. உள்ளுக்க வந்தவன் படபடவெண்டு சுடத் துவங்கினான். வயித்தால, தலையால, கழுத்தாலயெல்லாம் வெடிபறியுது. நானும் வெடிபட்ட மாதிரி குப்பிற விழுந்து கிடந்தன். மில்லுக்க இருந்த எல்லோரையும் சுட்டிட்டான். என்னோட அக்காவோட சேர்த்து ஐஞ்சு பேர் தப்பினம். ரத்தமெல்லாம் அள்ளி மேல அப்பிட்டு கிடந்ததால தப்பீட்டம். குழந்தையை தூக்கிட்டு பக்கத்து வீட்டு குந்தில இருந்தம். அங்க பார்த்தா கையில்லாமலும், தலைவெட்டினாப்போலும், கண் தோண்டினாப்போலும் பிள்ளையளுக்கு பால் கொடுத்தாப்போல அப்பிடியே சவமாக கிடந்தாங்க. கைக்குழந்தை ஒன்று சிதறி சுவரில ஒட்டினாப்போல கிடந்தது. முன்பள்ளி ஆசிரியை திருமதி மோட்சமலர் நடந்த அவலங்களைக் கூறுகிறார்.

"வந்தவன் அங்க நின்ற பிள்ளைய பிடிச்சு, சட்டையெல்லாம் கிழிச்சு செய்யக்கூடாத வேலையெல்லாம் செஞ்சான். "மூர்த்தி" சேரின்ர ஒரு மகளை (விஜிதா, ரேணுகா) சட்டையெல்லாம் கிழிச்சு கெடுத்திட்டான். பிள்ளை தனியா அம்பிட்டுட்டுது. அத்தோட பேரின்ப நாயகி என்ற ஒரு பிள்ளைய பிடிச்சு மாறிமாறிக் கெடுத்தாங்க. பெத்த தாயிக்கு முன்னாடி வச்சு பாவிங்க செஞ்ச கொடுமைய கடவுள் என்னண்டு பொறுத்தானோ! தெரியாது. தாய்க்கு முன்னாடி பிள்ளையையும் பொஞ்சாதிக்கு முன்னாடி புருசனையும் எரியுற வீட்டுக்கு புகுத்தினான். கிடந்த டீசலை ஊற்றி போட்டு எரிச்சு கருக்கிப்போட்டு பொழுது படத்தான் போனான் என்று கூறி கதறி அழுகிறார்.

இச்சம்பவங்களில் இருந்து அம்மக்கள் அனுபவித்த அவலங்களை, துன்பங்களின் வெளிப்பாடுகளை நூலாசிரியர் அவர்கள் நன்கு புரிந்துகொள்ளக்கூடியவாறு படம் பிடித்து காட்டியுள்ளார்.

ஒவ்வொரு விதம் விதமான கொலை தாண்டவத்தின் உச்ச நிலை எம் மக்கள் மீது வெள்ளோட்டம் விடப்பட்டு, எம்மினத்தின் ஆணிவேரை பிடுங்கி எறிந்து எம்பாரம்பரிய நிலங்களை சூறையாட சிங்கள இனவெறி பிடித்த அரசும், அதன் கை கூலிகளும் கையாண்ட கொலை வெறி நாடகத்தில் பலியாகி குறிப்புகள் அற்று புதையுண்டவர்களின் வரலாறுகளை ஆசிரியர் அவர்கள் எளிய நடையில் விளக்கியுள்ளார். ஆசிரியரின் இப்பணி "இமயம்'' தொடும் பணிக்கு ஒப்பானது. இருந்தும் சலிப்படையாமலும், களைப்படையாமலும் "மௌனப் புதைகுழிக்குள்'' எனும் நூலை வெளியிட்ட ஆசிரியர் அவர்கட்கும், கோபுரத்தின் அணை கொடுத்த தூண்களாக நின்று துணைபுரிந்த ஏனையவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் இப்பணிக்கு,கற்றுத் தேர்ந்த கல்விமான்களும், உண்மை தெரிந்தும் ஊமைகளாக உள்ளவர்களுக்கும் ஊக்கமளித்து இவ்வாறான வரலாற்றுப்பணி தொடரவேண்டுமென்பதே எல்லோருடைய விருப்பமும்.

**இ.இந்திரன்**

## என் அம்மாவிற்கொரு விண்ணப்பம்

இது வரையில்.......
வலது கண்ணில் பார்வையில்லை.
வலது கையும்
முழங்கையுடன் மொட்டை.

இடுப்பெலும்பை
ஈயக்குண்டு ஊறுபடுத்தியதால்
நடையிலும் குறைபாடு.

கழுத்துவரையும்
ஒருபக்கமெரிந்த
அசிங்கமான முகம்
முழு உடம்பிலும் தழும்புகள்.

தற்போதைய எனது தோற்றத்தை
பார்ப்பவர் மனசில்
மெல்லச்சரி அச்சம் சிலிர்க்கும்.

எனைப் பார்க்கும் ஆவல்
உன்னில் நுரைத்தபடியிருக்கும்.
இந்தக் கோலத்தில்
நீ என்னைக் கண்ணுற
எந்தத் திரையும் தடையில்லை எனக்கு
உனைப் பார்க்க எனக்குமாசைதான்.

நிபந்தனைகள் சொல்கிறேன்.

அழக்கூடாது
துயரப்படக் கூடாது
"இவ்வளவு காலமும் இருந்தது காணும்தானே
விட்டிட்டுவாவன்''
என்று சொல்லக் கூடாது.

நான் வரித்துக்கொண்ட
இலக்கின் முடிவிடம் வரை
நடக்க வேண்டிய தொலைவு
மீதமிருக்கிறது
நிச்சயமாய்.

அவசியமேற்படுமிடத்து
இன்னமும் என்னிடம்
இழப்பதற்குள்ளவை!

எனதொரு கண்.
எனதொன்றரைக் கை.
எனதிரு கால்கள்
எனதுயிர்.

ஆவரங்கால் சுதன்

## ஈழ மகளே! மாறிவிடு!

தீக்குளிக்கும் சீதைகளல்ல
தீக்கிரையாக்கும் கண்ணகிகளாக
எம் மணிகள் மாறிடுக!

நிலா என வர்ணித்து
கறைபடுத்தி விட்டு
நிலாவின் கறை இருப்பது
வாடிக்கை தானே என
வேடிக்கை பார்க்கும்
வேடதாரி சமூகத்தினை
சுட்டெரித்துச் சாம்பலாக்கி
நிலா அல்ல சூரியன்களாக திரும்புவோம்.

அடிமைப்படுத்த எண்ணும் சமூகத்தில்
கைப்பறவைகள் அல்ல
கை எறிகணைகளாக

பபி வீரகத்தி




## கெட்டிக்காரச் சிறுவர்கள்



# தொண்டு

"என்ன வாழ்க்கையிது"

அந்த அம்மா சலித்துக் கொண்டார்.

கொஞ்சக் காலம் கிறவல் புழுதியிலை குளிப்பு மழை சிறிது தூறி விட்டால் போதும் சேற்றிலும் சகதியிலும் குளிப்பு. தார் றோட்டிலை போனால் சா அழைக்குது, மண் றோட்டிலை போனால் மாய வேண்டிக் கிடக்குது.

கொஞ்சம் மழைத்தண்ணீர் பாய்ஞ்சு தெண்டால் போதும் இறங்கிக் கொஞ்சத்தூரம் நடவுங்கோ என்று கட்டளை வரும் என்ன செய்யுறது வயது போன காலத்தில இப்பிடி ஒரு தண்டனை,

அதுக்குள்ள நடந்து களைச்சமெண்டு இருந்து போகலாமே? ஒரு கையிலை தூங்கி ஒரு காலில தவம் இருப்புத்தான். என்ன செய்யுறது கயிட்டப் பட்டெண்டாலும் போகத்தானே வேணும்.

வசுவுக்காக காத்திருந்த அந்த அம்மாவின் புறுபுறுப்பைக் கேட்டுக்கொண்டு வந்த தீபன் மனதுக்குள் வேதனைப்பட்டுக் கொண்டான்.

"எங்கடசனம் எவளவு துன்பப் படுகுதுகள்"

அவன் அந்த அம்மாவிடம் போனான்.

" என்னம்மா காலையிலை வெளிக்கிட்டியள் எங்கை போறியள்?'

அந்த அம்மா திரும்பித் தீபனைப் பார்த்தாள்.

"ஆ - தீபனே! என்னடா தம்பி மகள்வீட்ட போகவேணும் வஸ் வருமே? என்று அவன் முகத்தைத் தடவியபடி கேட்டார்.

தீபன் அந்தக் கிராமத்தில் அன்புக்குரிய பிள்ளை. எல்லாத் தாய்மாரும் அவன்மீது பிரியம் அதிகம். அவனது இனிய பேச்சும் மற்றவர்களுக்குக் கொடுக்கும் மரியாதையும் உதவி செய்யும் பழக்கமும் அவனது ஆற்றல்களும் அவன் மீது விருப்பத்தைக் கொடுத்தன.

"அம்மா இண்டைக்கு இதாலை வஸ் போகாதாம்"

"ஏனடா தம்பி பாலம் எதாலும் உடைஞ்சு போச்சுதே"

"ஓமனை பெரிய பாலம் உடைஞ்சு போச்சுது."

"அப்பிடியே சங்கதி இரவு பேய் மழை எல்லே பெய்து காற்றும் அடித்தது,"

"ஓமனை நீங்கள் பஸ் நிலையத்துக்குப் போனால் மற்றப் பாதையில் போற பஸ்சில ஏறிப் போகலாமெல்லே"

"ஆரடா தம்பி உவளவு தூரத்துக்கு நடக்கிறது?"

"சயிக்கிள்ளை இருப்பியேனை கொண்டு போய் விடுறன்"

அவன் வாங்சையுடன் கேட்டான்.

"என்ரை ராசா, என்ரை குஞ்சு நான் உங்கை போய் அலைய வேணும், வீட்டை போவம் அங்கை போய் என்ன செய்யப்போறன்"

"அதுவும் சரிதானணை எந்த றோட்டிலை எந்த மரம் முறிஞ்சு கிடக்குதோ எங்கை பாலம் இடிஞ்சு கிடக்குதோ தெரியாது."

"ஓம் மோனை, என்ன தனிய வெளிக் கிட்டுட்டாய்? சோடியைக் காணன். அவனும் அருமையான பிள்ளை. இப்பிடித்தான் பிள்ளையள் இருக்க வேணும்"

"அவனைத்தான் பார்த்துக்கொண்டு நிக்கிறன்!" என்றான் தீபன்

"உதென்னதம்பி கத்தி மண்வெட்டி கூடையோட" அம்மா தீபனைக் கேட்டாள்.

"இல்லையம்மா நாங்கள் கொஞ்சப் பொடியள் சேர்ந்து போய் உடைஞ்ச மதவுக்குஅருகில் ஒரு பாதை போடப் போறம். தண்ணீருக்கால வாறது கடினம். அதால சயிக்கில் மோட்டார் சயிக்கிள் வந்தால் அதையும் தூக்கி அக்கரையில விடுவம்."

"எவ்வளவு காசு வேண்டுவியள்?" நல்ல உழைப்பு" என்றாள் அம்மா.

தீபன் சிரித்தான்.

"ஏன் அதில நிக்கிறவங்கள் காசுக்குத்தானே தூக்கி விடுறாங்கள். நீ ஏன் வெக்கப்படுகிறாய்" என்றாள்

"இல்லையம்மா இது உதவி தானம்மா காசென்ன காசு"

"என்ரை ராசா உன்ரை நல்ல மனசுக்கு நீ நல்லாய் இருப்பாய், நான் சும்மா கேட்டனான்."

அவள் தன் கைப் பையைத் திறந்து எதையோ எடுத்து, தம்பி இதைப்பிடியடா. சாப்பிடு வெக்கப்படாதை, நானும் உன்ரை அம்மா தானே"

"அது கருப்பட்டியும், புழுக்கொடியலும் பேரப்பிள்ளையளுக்கு கொண்டு போக இருந்தது."

அவள் அன்பாகக் கொடுத்ததை அவன்மிக விருப்பத்துடன் வாங்கினான்.

"அப்பன் நான் போகப் போறன்"

"ஓமணை நீங்கள் போட்டுவாங்கோ"

அவள் மெல்ல மெல்ல நடந்து கொண்டிருந்தாள்.

தீபன் குமாரின் வரவுக்காய் காத்திருந்தான்.

**முருகு பாரிமகன்**

## வாரம் ஒரு குறள்



*எதன்மீதும் பற்று வைக்காதவர்கள் தான் சாமியார், துறவியார் என்று முன்னைய காலங்களில் கூறப்பட்டது. இன்று எல்லோரும் சாமியார் என்றும் துறவியார் என்றும் தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்திக் கொள்ள காவியையும், சடாமுடியையும் வளர்த்துக் கொள்கின்றார்கள். நாமும் ஆஹா..ஓகோ..என்று அவர்களை புகழத்தொடங்கிவிடுவோம்.*

*உண்மையில் முன்னைய காலங்களில் வாழ்ந்தவர்கள் எதன் மீதும் பற்று வைக்காது காடுகளில் தியானத்தில் ஆழ்ந்து விடுவார்களாம். அவர்களை மூடி புற்று எழும்பி விடுவதாகவும். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அவர்கள் புற்றிலிருந்து விடுபட்டு துறவு வாழ்க்கையை கைக்கொள்ளும்போது சாமியார் என்றும் துறவியார் என்றும் அழைக்கப்பட்டார்கள். இவர்களது இந்த துறவி நிலையோ, பெருமைகளையோ அளக்க முனைவது இவ்வுலகில் இறந்தவர்களை எண்ணுவதற்குச் சமன் என்று.*

*"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
*இறந்தாரை எண்ணிக்கொண்டற்று "*

*என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.*

## சொற்சிலம்பம் - 16

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொ | அ | ஒ | றி | ளி | தா | ள |
| ப் | ன் | க | வ | அ | யா | பு |
| ய | கு | ர் | ர | வ | க் | ம் |
| க் | சி | லெ | கி | ரை | த் | வ |
| டை | ர | மை | த | ட | ஆ | ட |
| கூ | ன | றி | றை | வ | கா | ந் |
| ஊ | ல் | ம் | ஆ | ம | பா | ன் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 14 இன் விடைகள்

01. சூடை.
02. திரளி.
03. விளை.

01. முதிரை
02. பாலை.

### சொற்சிலம்பம் - 14 இன் பரிசுக்குரியவர்

செல்வி. ஜெ. கீர்த்தனா,
மே/பா. அ.ஜெயானந்தராசா,
7ம் வட்டாரம்,சிவநகர்
புதுக்குடியிருப்பு.

### சொற்சிலம்பம் - 14 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. வி.பிரபகலா,
ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

02. பொ.சிந்துஜன்,
தரம் -04,கிளி/மயில்வாகனபுரம் அ.த.க பாடசாலை.

03. ஞா.கயன்,
712, சிவிச்சென்ரர்,
வட்டக்கச்சி.

04. இ.கம்சாயினி,
D -04, மருதநகர்,
கிளிநொச்சி.

05. பு. செய்மதி,
1ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,

06. மு.பாணுசா,
C.P.M. 2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.

01. வானவில்லின் நிறங்கள் இரண்டு?
01) ..................................
02) ..................................
02. காட்டு மிருகங்கள் மூன்று?
01) ..................................
02) ..................................
03) ..................................
பெயர் :- ..................................
முகவரி :- ..................................
..................................

*சொற்சிலம்பம் -16*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

## பொன் மொழிகள்

*01. நல்லவர்களோடு சேர்ந்தால் நாய்க்கும் பகுத்தறிவு வரும்.*
*02. தூங்குகிறவனை எழுப்புவதற்கு பொழுது இருமுறை விடிவதில்லை.*
*03. அறிஞர் கூட்டம் ஒரு உயிருள்ள வாசகசாலை. பேசுகிறவன் விதைக்கிறான். கேட்பவன் அறுவடை செய்கிறான்.*
*04. பேசிய வார்த்தையானது. கேட்பவருக்கு சொந்தமாகிவிடும்.*

ப.சோபிதன்,
கிளிநொச்சி

## நகைச்சுவை



"டாக்டர் எங்கே?"
"தியேட்டருக்குப் போயிருக்கார்."
"ரொம்ப சீரியஸ்சா?"
"இல்லை, தியேட்டரில இப்ப நல்ல படம் ஓடுதாம். அதுதான் போயிருக்காரு."

**சு.கௌரீசன்**

## விடுகதைகளும் விடைகளும்

01. தீக்குளித்தாலும் திகடாமல் இருப்பவன் அவன்யார்?
02. கல்வீட்டு தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவர் யார்?
03. மழைகாலம் வந்து விட்டால் மகராசம் பாட்டெடுப்பான்?
04. வெளிச்சத்தை சுமந்தபடி இருட்டை சிதறடிப்பான்?

**விடைகள்**

ஜெ.டின்சி டயானா, தரம் - 07
இறம்பைக்குளம் ம.வி.
வவுனியா,



# இலக்கியப்பகிர்வு

# போராளிப் படைப்பாளிகள்

**உமாவரதராஜன்** "அரசனின் வருகைக்கு" பின்னர் எழுதியதாக அல்லது எழுதி "அரசனின் வருகை" போல பிரபல்யம் பெற்றதாக எந்தப்படைப்பையும் இதுவரை அறிய முடியவில்லை.

அவ்வாறே ரஞ்சகுமாரும் படைப்பு முயற்சிகளில் ஈடுபடுவதாக இல்லை. "திரும்பம்" (ஏப்ரல் 1998ல்) சஞ்சிகையில் "மனக்கேடு" என்ற சிறுகதையினை எழுதினார்.

யூன்/ யூலை 1998 திருப்பம் இதழில் பேராசிரியர் சி.சிவசேகரம் எழுதிய விமர்சனத்தில் "இவர் கோசலை எழுதிய ரஞ்சகுமாரா? என்று (மனக்கேடு தொடர்பான விமர்சனத்தில்) கேள்வியெழுப்பியிருந்தார்.

அதன் பின்னர் ரஞ்சகுமார் எழுதிப் பெயர்பெற்ற படைப்புக்கள் எதுவும் வரவில்லை. ஏன் இவ்வாறு நடை பெறுகிறது?

இதே தொடர்பில் இன்னுமொருவரை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அவர் நந்தினி சேவியர்.

"தத்துவார்த்த உள்ளடக்கமும் கலைத்தரமும் இயங்கியல் ரீதியில் இணைந்திருப்பது இலக்கியத்துக்கும், கலைக்கும் தேவையானதாயிருக்கிறது. ஒரு சிறந்த படைப்பு மிகக் கூடுதலான முயற்சியினை கோருகிறது." என்று ஆ என்லாயும், "குறிப்பிடுவன வற்றில் 'கலையம்சத்தின் முக்கியத்துவம்' அழுத்தப்படுகிறது. தீவிரவாதிகளால் இலக்கிய உலகில் நின்றும் 1957ல் பின்னொதுக்கப்பட்டு, தற்போது மீண்டும் முன்னணிக்கு வந்துள்ள மக்கள் சீனக் கவிஞரான அப்சிங் "அழகியற் சிந்தனை கவித்துவமானது. எழுத்துக்கலையில் அது அடிப்படை முறையாகவுங்கூட இருக்கிறது"

''எண்ணத்தின் கலைத்துவமான வெளிப்பாட்டைப் பொறுத்து கவிதைகள் நித்திய வனப்பினைப் பெறுகின்றன'' என்று குறிப்பிடுகையிலும் கலைத்துவம் வற்புறுத்தப்படுவதனைக் காணலாம்.

சமகால அரசியல் நிகழ்வுகளும், மார்க்சீய நோக்கும் கலையம்சத்துடன் இணைந்த முற்போக்குப் படைப்புக்களாகச் சிலவற்றைக் குறிப்பிடுவதானால்,

"சிறு தீப்பொறி மூண்டு பெரு நெருப்பாக எரியும் (எம்.எல்.எம்.மன்சூர் மல்லிகை ஓகஸ்ற் -1974)

'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' (நந்தினி சேவியர் - மல்லிகை நவம்பர் - 1972)

போன்ற சிறுகதைகளையும் குறிப்பிடலாம்.

என்று அ.யேசுராசா அவர்களால் குறிப்பிடப்பட்ட நந்தினி சேவியர் கூட இப்போது எழுதி பெயர்சொன்ன படைப்பிலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

இங்கு மீண்டும் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டலாம் என்று நினைக்கிறேன். நான் முன்பு குறிப்பிட்டதைப்போல எங்கள் கல்விப்பாரம்பரிய நடவடிக்கைகளை இங்கு குறிப்பிடலாம்.

அதாவது எழுத்தாளர் போட்டிப் பரீட்சையில் தோற்றி கடும் போட்டிபோட்டு இவர்கள் வெற்றிபெற்று பதக்கங்கள பெற்றுவிட்டார்கள். அந்தப் பதக்கங்களே போதுமென்றாகிவிட்டது போலும் அவர்களுக்கு.

ஆறுதல் பரிசுகளும், வெண்கல, அலுமினியப் பதக்கங்களும் பெற்றவர்கள் தொடர்ந்து ஓடிக்கொண்டு உள்ளார்கள். அவ்வளவுதானா?



பாய்ச்சல் காட்டிவிட்டு பறந்துபோய் விடுவதைவிட இவ்வாறான தன்மை சிறப்பானதாகக் கருதலாம். ஏனெனில் எங்கள் மத்தியில் எழுத்தினை ஒருவிதமான தலைக் கவசமாகவே கணிக்கிறார்கள்.

எழுதும் எழுத்தினை ஒரு சமூக அங்கிகாரமாக அந்தஸ்து தேடும் ஒரு கருவியாக பலர் கருதுகிறார்கள். அதனாலேயே அவை கிடைத்தவுடன் வசதியான இடங்களில் அமர்ந்துகொண்டு விடுகின்றனர்.

படைப்பை ஒரு தவமாக்கி - அதன் மூலம் சமூக எழுச்சியை, மேம்பாட்டை ஊக்குவிக்க முனைவதும் இல்லை.

எங்கள் இனவரலாறோ அல்லது எமது விடுதலைப்போராட்ட வழித்தடமோ இத்தகைய படைப்பாளிகளின் படைப்புக்களுக்குத் துணைபுரியமாட்டாதா?

எவ்வளவோ விடயங்கள் எழுதப் படவேண்டிய விடயங்கள் எம் மத்தியில் உள்ளன. இத்தகைய விடயங்களில் பார்வையாளர்களாக இந்தப் படைப்பாளிகளும் உள்ளார்கள். ஆனால் ஆற்றல் உள்ள பலர் இவற்றினை படைப்பாக்க முனைவதில்லை.

இவர்களுடைய காலம் கனிவது எப்போது? என்று தெரியாது பிரச்சினைகள், போராட்டங்கள் நிறைவு பெற்ற பின்னர்தான் இவர்கள் மீண்டும் படைக்கப் புறப்படுவார்களா? தெரியவில்லை.

ஆனால் இப்போது மேற்குறித்த இவர்கள் படைப்புக்களை படைக்கிறார்களா? இல்லையா? என்பதைவிட வேறு ஒரு கட்டத்திற்கு நகர்ந்துவிட்டது.

விடுதலைப் போராட்டத்துடன் நேரடிப் பங்காளிகளாக உள்ள பல போராளிகள் படைப்பாளிகளாக மாறிவிட்டார்கள். இவர்களின் படைப்புக்களில் உள்ளடக்கப் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. போராட்ட விடயங்களாக இருந்தால் என்ன? சமூக மேம்பாட்டு ரீதியிலான விடயங்களாக இருந்தால் என்ன? இவர்கள் தனிக்கவனம் பெறுகின்றனர்.

அவ்வாறு கூறமுடியுமா? அவ்வாறு கூறமுடியாவிடின் மேற்குறித்த படைப்பாளிகள் மாத்திரமல்ல வேறு பல படைப்பாளிகள் மீதும் இக்கேள்வியை தொடுக்கலாம்.

எங்கள் சிறுகதை வரலாறு இவ்வாறுதான் அமைகின்றது. ஒருகாலத்தில் உருவ/உள்ளடக்க காரணங்களால் அவ்அவ் அணிகளால் தூக்கிப்பிடிக்கப்பட்டு அல்லது எதிர்க்கப்பட்டு படைப்பாளிகள் காணாமல் போனார்கள்.

பின்னர் உருவ உள்ளடக்க ரீதியான நல்ல படைப்புகளைப் படைத்து விமர்சகர்களாலும், நல்ல இலக்கிய ஆர்வலர்களாலும் பேர் சொல்லப்பட்ட பல "சிறுகதையாளர்களும்" இப்போது காணாமல் போய் விட்டார்கள்.

ஆக மொத்தம் உருவ உள்ளடக்க விடயத்தில் அதிகம் பேசப்படாத பல சிறுகதையாளர்கள் தான் தொடர்ந்தும் எழுதி வருகின்றனர்.

அவர்களின் எழுத்தில் குறிப்பாக சிறுகதைகளில் உருவத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. மிக மெல்லியதாக அமைந்த மாற்றம் வரும் காலத்தில் மேலும் மாற்றமடையலாம்.

இவர்களில் கணிசமானோர் உருவச் செழுமை மிக்க படைப்புக்களைப் படைத்தாலும் இன்னும் அதில் சிறப்பான தேர்ச்சி பெறவேண்டும். எனினும் அந்த உன்னதமான நிலையை அவர்கள் அடைவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

ஏனெனில் ஆரம்ப நாட்களில் எழுதிய போராளிகளின் படைப்புக்களைவிட இப்போது எழுதுபவர்கள் மேன்மை அடைந்துள்ளனர். ஒரு போராளிப் படைப்பாளியின் படைப்பு இன்னுமொரு போராளிப் படைப்பாளியின் படைப்புக்கு அடித்தளமாகின்றது.

மிக அண்மைய உதாரணம் வெள்ளிநாதம் பத்திரிகையில் வெளியான யோ.கர்ணன் எழுதிய வீடு சிறுகதையைக் கூறலாம்.

சிறுகதையின் உள்ளடக்கம் தொடர்பாக விபரிக்க முனைந்து இப்போது இங்கு வந்து நிற்கின்றோம். அடுத்ததாக சிறுகதையின் உருவம் தொடர்பாக பார்ப்போம்.

**சிதம்பரன்**

## நிமிர்வு

தேவை
பயில்வான்களல்ல
வீரர்கள்

உன் உடலின்
கூனல்
பற்றிய
கவலை
விடு.

வில்லில்
இல்லாத
நிமிர்வா?



## ஜோடு

தங்கவாளும்
வெள்ளி
வாளுமே

மேடைகளில்
தரப்படுவதால்

நாங்கள்
போராடுவதில்லை



## கொடை

தங்க வளையலைக்
கழற்றி
போராளியிடம்
தந்தாள்.

'செலவுக்கு
வைத்துக்கொள்'

உங்களில்
பலருக்கு கைகளே
இல்லை..

எனக்கு
எதுக்கு வளையல்






## ஒரு அறிவிப்பு

கிளிநொச்சியில் ஒரு வீட்டில் காணப்பட்ட அறிவிப்பு பலகையில் கீழ்வருமாறு எழுதப் பட்டிருந்தது.
'வீட்டைச் சுற்றியுள்ள வயற்புறத்தில் சிங்கள இராணுவத்தினர் மிகவும் கஸ்ரப்பட்டு கன்னி வெடி நாற்றுமேடை போட்டிருக்கிறார்கள் அன்ன நடை நடந்து உங்கள் பாதங்களை பாழாக்கி விடாதீர்கள்...'
-இது எப்படி இருக்கிறது...?

யசோ

## மனிதர்கள்

ஒருவன் தன் சாதிப் பெருமையைப் புகழ்ந்து மற்றையசாதிகளை இழிவாகப் பேசினான். மற்றவன் தன்மொழியைப் புகழ்ந்து ஏனையவற்றை இகழ்ந்தான்,

மூன்றாமவன் தன் மதப்பற்றை வெறியுடன் மற்றைய மதங்களை தாக்குவதன் மூலம் நிலைநாட்ட முயன்றான்.

இப்படி மூவரும் சண்டையிடுவதைப் பார்த்த நான்காமவன் ஒருவன்,

"அமைதி அமைதி... சாதி மதம் மொழியெல்லாம் மனித குல மேன்மைக்கு பங்கமாகக் கூடாது இந்தக் கூச்சல் சண்டையையெல்லாம் விட்டு ஒற்றுமையாக இருந்தால் எவ்வளவோ சாதிக்கலாம் என்றான்."

அந்த மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

பின் மூவரும் ஒற்றுமையாக அந்த நான்காமவனை அடித்து ஒரு மூலையில் போட்டு விட்டு சண்டையைத் தொடர்ந்தனர்.

## சில விளக்கங்கள்

**பக்தன்:**
கோபுர வாசலில் கழற்றி விட்ட பாதணிகளை நினைவில் நிறுத்தி கோவிலுக்குள் நின்று தியானிக்கும் பக்தன்.

**மணமகன்:**
சீதனப் பண முடிச்சிற்கு மூன்று முடிச்சு போடுபவன்.

**இருமல்:**
சிகரட் பிரியர்கள் இசைக்கும் அபஸ்வர கீதம்.

**கிளப்:**
வசதிபடைத்த ஆண்டிகளின் மடம்

சிரித்திரன்

## கருணை

கட்டைச் சங்கிலியில்
கண்ணீர் வடிக்கிறதாம் நாய்
நீளச் சங்கிலி
வாங்க
கடைத் தெரு போகிறாள்
சீமாட்டி.

காசி ஆனந்தன்

## ஒரு தேசபக்தனின் ஆத்மா

தேசத்தின்
விடுதலைக்காகப் போராடி
சிறையில் இருந்தவன் நான்
எனக்கேன்
கல்லறையெழுப்பி
கடுஞ்சிறை வைத்தீர்...
தகர்த்தெறியுங்கள் கல்லறையை
நான்
சுதந்திரமாகத் துயிலப் போகிறேன்.

ராதேயன்

## வீணா? கானம்!

இளைஞன் படியேறும்போது
வீணையைக் கவனித்தான்
வீட்டின் நடு மண்டபத்தில்
அழகாக வைக்கப்பட்டிருந்தது.
வளைவு நெளிவு வார்னிஷ் பூச்சு..
எழிலார்ந்த வேலைப்பாடு மனதைக் கவர்ந்தது
ஆனாலும் கண்ணாடிக் கூண்டுச்
சிறைக்குள் கைதியா வீணை?
அதிர்ந்து போய் நின்றான்.
அவனை வரவேற்ற வீட்டுப் பெரியவர்
அவனைப் பார்த்தார்
அவன் ஸ்தம்பித்து நின்றதில்
பெருமிதம் அவருக்கு கர்வம்
எப்படி இருக்கு? அவனைக் கேட்டார்.
மனதிற்கு சங்கடமாக இருக்கு
என்றான் அவன்
அவர் திகைத்தார் 'ஏன்?' என்றார்
"வீணை கண்ணுக்கு விருந்தளிக்க அல்ல
காதுக்கு விருந்தளிக்க என்றான்..." அவன்

சி.பொ.சிவனேஸ்

பொறுக்கி

# வாழ்க்கை உங்கள் வசம்

**திறமை,** முயற்சி, ஆர்வம் இவை இருந்தால் மனிதன் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்று கூறுவார்கள். இவை எவ்வாறு சாத்தியமானது. இவை மூன்றும் ஒருவனிடம் இயல்பாகவே இருக்கும் விடயங்களா - ஒரு தொழிலைச் செய்து முன்னேறியவன் இவை அனைத்தும் வாய்க்கப் பெற்றவனா? என்பது எழுகின்ற கேள்விகள் ஆகும். இவ்வாறான கேள்விகளுக்கு விடை காணும் வகையான சில விடயங் களைக் குறிப்பிடலாம்.


முதலில் 'திறமை' யை எடுத்துக்கொள்வோம். இந்த திறமை என்ற சொற்பதம் குறிக்கும் பொருள் என்ன என்பது விளங்கிக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். சிலர் ஒருவனைப் பார்த்துக்கூறுவார்கள் இயல்பாகவே 'திறமை' வாய்ந்தவன் என்று சுட்டிக் கூறுவார்கள்.

சிலர் கல்வி கற்றவனே திறமையுடையவன் என்கின்ற கருத்தினை உடையவர்களாக இருக்கின்றார்கள். இந்த கருத்து நிலையை நோக்குகின்றபோது சில விடயங் களை கூறவேண்டிய தேவையுள்ளது. கல்வி கற்றவன்தான் திறமை உடையவன் என்ற கூற்றை ஏற்றுக் கொள்வோம் ஆயின் அந்தக் கூற்றில் கல்வி என்ற சொல்லிற்கு வரைவிலக் கணம் கொடுக்கவேண்டிய தேவை ஒன்று உள்ளது.

'கல்வி' என்பது எல்லோரும் கூறுவது போல பாடப்புத்தகங் களைப் படித்தலும் பட்டங்களை ஒருவன் தன்பெயருக்குப் பின்னால் சேர்த்தலையும் குறிக்கின்றதாகவே கொள்கின்றார்கள். உண்மையில் கல்வி என்றால் என்ன ஒருவன் நடுநிலைமை என்ற பண்பில் இருந்து விலகாமை கல்வி என்று குறிப்பிடு கின்றார் நாலடியார். 'நெஞ்சத்து நடுநிலைமை' கல்வி என்ற வரையறைக்குள் தருகின்றார்.

சபை நடுவிலே ஒருவன் நிற்கின்றான். அந்தச்சபையின் குறிப்பை அவன் உணர்கின்றான் இல்லை. ஆனால் நல்லநூல்களைச் கற்றிருக்கின்றார். தேர்ந்த பண்டிதன் என்ற பட்டங்களை வேறு வைத் திருக்கின்றான் அந்த நபர் சபையின் இயல்பினை அறிந்துகொள்ள வில்லை. அப்படிப்பட்ட படிப்பு ஒரு பயனையும் விளைவிக்காது. இது ஒளவையாரின் வாக்கு ஒளவையார் பற்றி பிரசங்கம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு ஒளவையார் என்றால் யார் என்று கேட்கும் காலம் இது. அந்த விடயம் வேறுவிடயம். இங்கே ஒளவையார் இத்தகைய இயல்புடைய வர்களைப் பார்த்து எவ்வாறு குறிப்பிடு கின்றார் என்றால் 'மரம்' என்கின்றார்.

இங்கே 'மரம்' என்று சொல்லுவதில் என்ன பிரச்சினை. மரம் எத்தகைய பயன்களைத் தரு கின்றது என்று கேள்வி கேட்கலாம். மரம் என்று கூறுவதில் என்ன தவறு என்று கூட கூறலாம். மனிதன் ஆறறிவுகளை உடையவன். அந்த மரமே ஒரு அறிவினை உடையது என்ற கூறப்படுகின்றது. உணர்த்த உணர் பவன் மனிதன். அவ்வாறு உணர்த்தியும் உணராதவை மரங்கள். இந்த வகையில்தான் ஒளவையார் இத்தகையோரை மரங்கள் என்கிறார்.கல்வி கற்றவர்களைப் பார்த்து வள்ளுவர்



கூறுகின்ற போது கற்றவரே கண் ணுடையார் என்று குறிப் பிடுகின்றார். கல்வி அங்கு முதன்மையாகப் பேசப்படுகிறது. அதில் எந்த விதமான வேறுபாடுகளோ - கருத்து முரண்பாடுகளோ இருக்க முடியாது.

பட்டம் பெறுதல் என்பது கல்விபெறுதல் அல்ல என்று கூற வரவில்லை. பட்டம் பெறுதல் மட்டுமே கல்வி அல்ல என்பதே குறிப் பிடப்படுகின்ற விடயம்.



சுருக்கமாகக் குறிப்பிட்டால் 'அனுபவம்'தான் கல்வி என்று குறிப் பிடலாம். பாடப் புத்தகங்களில் அனுபவம் உடைய ஒருவன் பட்டங் களைப் பெறுகின்றான். பாடப்புத்தகம் அல்லாத விடயங்களில் அனுபவம் பெற்றவன் ஒவ்வொருவகையில் தான் பெற்ற அனுபவத்துறையில் கெட்டிக்காரனாக இருக்கிறான். இந்த வகையில் விளங் குகின்ற அனுபவத் தின் மூல மாகப் பெற்றுக்கொண்ட கெட்டித்தனங்களே திறமைகள் எனலாம்.

இதனால்தான் தேசியத் தலைவர் 'இயற்கை எனது நண்பன், வரலாறு எனது வழிகாட்டி, அனுவபம் எனது ஆசான்.' என்று குறிப்பிடு கின்றார்.

இந்த வகையில் இனி 'முயற்சி' என்றால் என்ன என்பது பற்றிய சில விடயங்களைப் பார்ப்போம்.

முயற்சி என்ற சொல்லை எடுத்ததுமே இந் தச் சொல்லினைப் பற்றியே விளக் கம் முதலாம் ஆண்டிலேயே எமக்குக் கிடைத்து விட்டதை உணரலாம். 'முயலாமையால் தோற்றது' என்ற சொற்றொடர் விளக்கத்தைப் பாருங்கள். முயற்சி செய்யாத காரணத்தால் தோல்வி அடைந்ததைக் குறிப்பதாகவும், முயல என்ற பிராணி ஆமையால் தோற்றுப் போன செய்தியையும் இரண்டு விடயங்களையும் ஒரு வாக்கியத்துள் அடக்கிக் கூறுவதைக் காணமுடிகின்றது.

முயலும், ஆமையும் ஓட்டப் பந்தயம் வைத்ததும் அதில் ஆமையின் முயற்சியும் முயலின் தோல்வியும் இந்த சொற்தொடர்களிலே பொதிந்திருப்பதும் இந்த விடயங் களை யாவரும் அறிந்ததும் ஆகிய காரணங்களால் இவை பற்றிய விரிவு இங்கே தேவையில்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்பதும் முயற்சி என்பது விதியையும் விட வலியது என்றும் வள்ளுவர் கூறியிருப்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

குழந்தை ஒன்று தன்னுடைய தாயிடம் உணவு பெற்றுக் கொள்ள நினைத்தால் என்ன செய்யும். அந்தக் குழந்தை வாய்பேச முடியாத நிலையில் வீறிட்டு அழும். அந்த அழுகையின் அர்த்தங்கள் அறியக் கூடியவள் தாய் ஒருவரேதான் இந்த உலகத்தில் இருக்கமுடியும். எல்லா இடத்திலும் இருக்கமுடியாத காரணத் தால்தான் தாய் என்ற உருவில் கடவுள் இருப்பதாக கூறு கின்றார்கள்.

இந்த வகையில் குழந்தையின் அழுகையால் முயற்சி யால் அது தனது தேவையைப் பெற்றுக் கொள்கின்றது. இதே நிலைதான் குழந்தை வளர, வளர அதன் தேவைகளும் அதிகரிக்கின்றது. அந்த தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் குழந்தையின் முயற்சிகளும் பல்வேறு வகைப்படு கின்றன.

பல்வகையான முயற்சிகளால் மனித வாழ்க்கை இயங்கு கின்ற தன்மையைக் காணலாம். இயற் கையை தன்னுடைய கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவர மனிதன் முயன்று கொண்டிருக்கிறான். அந்த முயற்சி தான் விஞ்ஞானமாகவும், தொழில் நுட்ப வசதிகளாகவும் பல்கிப் பெருகி யுள்ளன. இதில் ஒன்று குறிப்பிடப்பட வேண்டிய விடயம். என்னவென்றால் மனிதன் புதிய புதிய தொழில்நுட்ப வசதிகளையும் எதிர்காலத்தில் பெற்றுக்கொள்வான் என்பதாகும்.

திறமை, முயற்சி என்கின்ற இரு விடயங்களும் முன்னேற்றத்

**பூ.நகுலன்.**

துக்கு உரிய வழிகள் என்று ஓரளவு விளங்கிக்கொண்டோம். ஆர்வம் என்று கூறப்படுகின்ற அடுத்த விடயம் பற்றி நோக்குகின்றபோது. அந்த விடயம் 'ஆள்வினையுடைமை' என்ற சொற்பதத்தால் வள்ளுவர் குறிப்ப தனை காணமுடிகிறது.

தன்னுடைய குடியை - அதன் இயலாத தன்மையை - வறுமை நிலையை உயர்த்துவேன் என்ற ஆர்வமுடைய ஒருவனுக்கு இறைவன் என்ன செய்வான் என்று சொன்னால் - இறைவன் தன்னுடைய ஆடையை வலிந்து கட்டிக் கொண்டு அத்தகைய ஆர்வமுடையவனுக்கு உதவி புரிய முன்வருவான் என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது.

ஒரு நிகழ்ச்சியை தொடங் கிய ஒருவன் அதில் வெற்றி கிடைக் கும்வரை ஓயாமல் உழைக்கவேண் டும். அவ்வாறு உழைத்தாலே ஆர்வம் என்ற சொல்லால் குறிப்பிடப் படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட நாட்டை வெற்றிகொள்வதற்காக முயன்ற மன்னன் ஒருவனின் கதையில் இந்த ஆர்வத்தைக் காணலாம். ஒரு நாட்டின் மீது போர்தொடுக்கும் குறிப்பிட்ட மன்னன் போரில் பல தடவைகள் தோற்றுப்போன காரணத்தால் சோர் வாகி காணப்படுகின்றான். அப்போது அவன் இருந்த அறையில் சிலந்தி ஒன்று ஏழு தடவைகள் வலை பின்னுவதற்கு முயன்றுகொண்டிருக் கின்றது. அந்த சிலந்தி ஏழு முறையும் தோற்றுப்போய்விடுகின்றது. ஆனால் அது சோர்வடையவில்லை. சோர்வடையாமை ஆகிய ஆர்வ முடைமையால் அந்தச் சிலந்தி எட்டாவது முறை வெற்றிபெறுகின்றது.

இந்த நிகழ்ச்சிகளைக் கண்ட அந்த மன்னன் சிலந்தியின் மூலம் கற்றுக்கொண்ட பாடத்தால் மீண்டும் ஆர்வமுடையவனாகி மீண்டும் போர் தொடுக்கின்றான். போரில் வெற்றி பெறுகின்றான்.

இந்த ஆர்வமுடைமையை விளக்குகின்ற வகையில் பல்வேறு கதைகள், இலக்கியங்கள் காணப்படு கின்றன.

கடலை நோக்கி வருகின்ற அலைகள் கரையில் நிலைபெறுவதற் காக போராடிக்கொண்டு இருக்கின் றது. அலைகளின் போராட்டம் ஒருபோதும் ஓய்ந்து விடுவதில்லை. அதனால் அலை தன்னுடைய ஆர் வத்தை நிறுத்தப்போவதோ கரையை நோக்கி கரையில் நிலைபெற முயலும் தனது முயற்சியை விட்டு விடப்போவதோ கிடையாது. இதன் காரணத்தால்தான் ஆர்வமுடைமையை விளக்குவதற்கு 'ஓயாத அலைகள்' என்ற காரணப் பெயரும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக திறமை, முயற்சி, ஆர்வம் என்கின்ற மூன்று விடயங்களும் ஒருவரிடம் காணப்படு மானால் அந்த விடயம் மட்டுமே ஒருவனை எந்த தொழிலையும் செய்வதற்கு உதவும் காரணங்களாக விளங்குவதைக் காணலாம்

இந்த வகையில் பல்வேறு உதாரணங்களை இந்த வழிகளில் நடந்தவர்களை உதாரணம் காட்டலாம். திறமை, முயற்சி, ஆர்வம் என்கின்ற விடயங்களை உடைய ஒருவன் எந்த தொழிலையும் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்து விடுவோம். அதில் எந்த வித தீமையும் இல்லை. அதிகம் நன்மை இருக்கும் காரணத்தினால் ஆகும்.

# ஒலியிலும் இரு மடங்கு வேகம்; கொன்கோட் விமானம்

1960களில் ஒலியிலும் இரு மடங்கு வேகமான பயணிகள் விமானம் உருவாக்கும் திட்டங்களை பிரித்தானியா, பிரான்சு, சோவியத் ஒன்றியம் ஆகியவை நடை முறைப்படுத்தின. அமெரிக்கா இதில் ஆர்வம் காட்டவில்லை.




செலவையும், தொழில் நுட்பப் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு பிரித்தானியாவும், பிரான்சும் கூட்டுத் தயாரிப்பில் இறங்கின. சோவியத் ஒன்றியம் தனித்து இயங்கியது. பிரித்தானியா, பிரான்சு ஆகியன கொன்கோட் (CONCORDE) என்றபெயருடன் ஒலியிலும் இருமடங்கு வேகமான பயணிகள் விமானத்தை ஜனவரி 1975ல் சேவைக்கு விட்டன. ரியூ144 என்ற பெயருடன் சோவியத் ஒன்றியம் தனது தயாரிப்பை 1968ல் வெள்ளோட்டம்விட்டது. தொழில் நுட்பப் பிரச்சினைகள் காரணமாக ரியூ144 தோல்வியில் முடிந்தது.

கொன்கோட் விமானத்தின் அதிக பட்ச வேகம் ஒலியிலும் 2.2 மடங்காக இருப்பினும் அது வழமையாக ஒலியிலும் 2 மடங்கு வேகத்திலேயே செல்லும். மணிக்கு 1300மைல் அல்லது 2000 கி.மீ. என்பது அதன் வேகத்தரவாகும். அது இடைநிறுத்தாமல் 4000 மைல் அல்லது 6400கி.மீ. தூரத்தை செல்லவல்லது. அத்திலாந்திக் மாகடலை அது மூன்றரை மணி நேரத்தில் கடக்கும். 25 வருட சேவைக்குப்பின் கொன்கோட் விமானத்தின் பறப்பு நிரந்தரமாக 2003ல் நிறுத்தப்பட்டுள்ளது. சென்ற மாதம் பிரித்தானியா தனக்குச் சொந்தமான கொன்கோட் விமானத்தை அமெரிக்காவுக்கும், பிரான்சு தனக்குச் சொந்தமான அந்தரக விமானத்தை ஜேர்மனிக்கும் அன்பளிப்பாகக் கொடுத்துள்ளன. இவை அந்தந்த நாடுகளில்



காட்சிப்பொருள்களாக வைக்கப் படும். கொன்கோட் போன்ற பாரிய விமானங்களை இனிமேல் தயாரிப்ப தில்லை என்ற முடிவை சம்பந்தப் பட்ட நாடுகள் யாவும் எடுத்துள்ளன.

வெற்றிக்கு மணம் ஊட்டும் சுவைப்பொருள் தோல்வி. - ட்ருமன் கேப்போட்

# பொருண்மை வாசல்

## எங்கள் மண்ணின் மாண்பு

**சிதம்பரதிரு**

பூமியில் ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 7.3 மில்லியன் ஹெக்டர் பரப்பளவுடைய ஈரஉலர்வலயக்காடுகள் உலக மக்களின் தேவைக்காக அழிக்கப்படுவது வழக்கம் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் 1.1மில்லியன் ஹெக்டர் பரப்பளவுடைய காடுகளே மீள் நடுகைக்கு உட்படுத்தப் படுகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.



ஆசியாவின் உலர் வலயப்பிரதேசத்தில் 336.458 மில்லியன் ஹெக்டயர் காடுகள் இருக்கின்றன. (1995ன் தகவல்ப்படி) வருடாவருடம் 2.016 மில்லியன் ஹெக்டயர் காடுகள் இப்பகுதியில் அழிக்கப்படுகின்றன. ஆனால் வருடாந்தம் 0.438 மில்லியன் ஹெக்டேயர் பரப்பிலான காடுகளே மீள் நடுகைக்கு உட்படுத்தப் படுகின்றன.

மேற்குறித்த புள்ளிவிபரங்களில் இருந்து புரிந்து கொள்ளக்கூடிய உண்மை யாதென இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் எங்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒரு விடயம் உள்ளது. அது யாதெனில் எங்களுக்கு காடுகள் - மரங்கள் மிகமிக முக்கியமானவை.

காடுகளை அழிப்பது அல்லது மரங்கள் கண்டபடி வெட்டித் தள்ளுவது என்பது எமது தலையிலேயே நாங்கள் மண்ணை அள்ளிக் கொட்டுவதற்கு ஒப்பானது.

அனைத்து உயிரினங்களும் வாழும் சூழலை பாதுகாத்தல் மழைபெய்யக் காரணியாக இருப்பது, மண்ணைப் பாதுகாத்தல், எனப் பல்வேறு முதன்மைக் காரணங்களுக்கு அழஆதாரமாக உள்ள மரங்களைப் பாதுகாப்போம். மரங்களை நடுவோம். மரங்களை வளர்ப்போம்.

## அருகிவரும் காட்டு வளங்களால் ஏற்படும் சூழல் மாற்றங்கள்

இயற்கை வளங்களுள் காட்டு வளமானது முதன்மையானதும் முக்கியமானதுமாகும். வளங்கள் என்பதை வரைவிலக்கணப்படுத்தின் "பௌதீகச் சூழலுக்கேற்ப தாவரமானது இயற்கையாகவே அடர்த்தியாகவும் பரம்பியும் காணப்படும் தாவரம் செறிந்த பகுதி" எனலாம். இக்காடுகள் அண்மைக்காலத்தில் மிக வேகமாக அழிவடைந்து வருகின்றன. பல்வேறு தேவைகளின் நிமிர்த்தம் மனிதநடவடிக்கையால் அழிவடைந்து செல்லும் தாவரப்போர்வையால் சூழல் பாதிக்கப்படுகிறது. தாவரங்கள் குறைவடைந்து செல்வதால் ஏற்படும் சூழல் பாதிப்பை மக்களுக்கு எடுத்துக்கூறுதல் சிறப்பானது.

அந்தவகையில் காடுகளானது சூழலில் ஏற்படும் பல்வேறு இயற்கை மாற்றங்களுக்கு காரணமாக இருப்பதுடன் பொருளாதாரத் தேவைகளுக்கும் அவசியமானதொன்றாக உள்ளது. இது மனிதனுடன் நேரடித்தொடர்பு கொண்டுள்ளதுடன் உணவு. உறைவிடம். மருந்து. மரம். எரிபொருள் என்பவற்றுக்காக தனது ஒவ்வொரு பகுதியையும் மனிதனின் தேவைக்கென வழங்குகிறது.பொருளாதார வளர்ச்சியிலும். அபிவிருத்தித்திட்டங்களிலும் இதனுடைய பங்களிப்பைக் காண முடிகின்றது. மேலும் காடுகள் மண் அரிப்பைத் தடை செய்கின்றன. பயிர்ச்செய்கையை பாதுகாக்கின்றன. வெள்ளப் பெருக்கைக் குறைக்கின்றன. தூய நீர் பெறுதலை உறுதி செய்கின்றன. மனமகிழ்ச்சியையும். பொழுது போக்கையும் தருகின்றன. வன விலங்குகளுக்கு உறைவிடத்தைத் தருகின்றன. சூழல் மாசடைதலைக் குறைக்கின்றன. பொதுவாக சூழல் சீரழிவதற்கு எதிராக பாது காப்பாக அமைகின்றன. மனிதனுடைய தொழிற்பாட்டுக்கு உதவும் மரம் மரத்தினடிப் படையிலான கைத்தொழில் விளை பொருட்களையும். காட்டுப பொருட்களையும் தருகின்றன. வேலைவாய்ப்பையும் தருகின்றன. அத்துடன் எரிபொருளாகவும் பயன்படுவதோடு. மண்ணின் ஈரலிப்புத்தன்மையை பேணுகின்றது. சக்தி. ஆக்கம். உணவு. மண்ணின் பாதுகாப்பு. தாவரப் பாதுகாப்பு ஆகிய நோக்கில் காடு மிக முக்கிய இயற்கை வளமாகும்.

காலநிலையியல் வேறுபாட்டுக்கேற்ப பரந்துள்ள இயற்கைக்காடுகளானது இன்று பெருகிவரும் சனத்தொகையின் உணவு. உறைவிடம். தொழில் வாய்ப்பு போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் பெருமளவில் அழிக்கப்பட்டுவருகிறது. இச்செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட காட்டு வள அழிப்பினால் ஏற்பட்ட சூழலியல் மாற்றங்கள். இயற்கைச் சம நிலையின் தளம்பல். இவற்றால் ஏற்பட்ட பிரச்சினைகளை இன்று மனிதன் நேரடியாகப் பார்க்கின்றான்.

காட்டு வளத்திற்கு ஊறுவிளைவிப்பதால் அவ்வளம் மட்டும்தான் அற்றுப்போகிறது எனக் கூறமுடியாது. அது சூழலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பல. அவற்றை நோக்கின் இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்குப் பதிலாக தளம்பலை ஏற்படுத்துகின்றது. உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற ஓர் சூழலை அமைக்கத் தவறிவிடுகிறது. காலநிலையில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. வளமான மண் அரிக்கப்படுகிறது; கட்டுமானத் தேவைகளுக்கும் எரிபொருட்களுக்கும் பயன்படுகின்ற மரங்கள் ஒரேநேரத்தில் அழிவடைகின்றன. இதனால் வளி மண்டலத்தில் காபனீரொட்சைட்டின் வீதம் அதிகரிக்கிறது. இதனால்தான் ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டுள்ளது. மனித நடவடிக்கை காரணமாக காட்டுத் தாவரங்களுக்கு மட்டுமல்ல காட்டு விலங்குகளின் வாழ்விற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

மனிதன் சொந்த விருப்பத்திற்கு ஏற்ப காட்டுவளத்தை அழிக்கின்றமையால் சுமார் 3000 மில்லியன் ஆண்டு காலமாக நிலவிய சூழலில் இயற்கைச் சமநிலை தகர்ந்துள்ளது. காடுகளை அழிப்பதால் அரிய இனங்களுடைய தாவரங்களும். விலங்குகளும் அழிகின்றன. காடழிப்பினால் ஏற்படுகின்ற மழைவீழ்ச்சிக் குறைவினால் நீர்ச்சமநிலை பாதிக்கப்பட்டுள்ளது. காபனீரொட்சைட்டை உறிஞ்ச போதிய தாவரங்கள் இன்மையால் வளிமண்டலத்தில் வாயுக்களின் சமநிலை தளர்கிறது. சூரியனில் இருந்து வரும் கதிர்களை உறிஞ்ச காடுகளின்மையால் நேரடியாக வரும் கதிர்களால் பூமியில் வெப்பம் கூடும். ஆவியாக்கம் ஆவியுயிர்ப்புக்களில் ஏற்படும் மாற்றம் மழைவீழ்ச்சி. வெப்ப நிலை. காற்றுக்களின் அளவு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் சமநிலை பாதிக்கப்படும். இதன் விளைவாக சூழல் பாதிக்கப்படுகிறது.

காட்டுவளங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக உயிரியற் சூழலில் தாக்கம் ஏற்பட்டு நுண்ணங்கிகள் முதல் பெரிய விலங்குகள் வரை அழிகின்றன. இக்காடுகளுக்குரிய நுண்கால நிலையானது நேரடியாகவும். விரைவாகவும் பாதிப்பிற்குள்ளாகிறது. இச்செயற்பாடு பேரினக்கால நிலையில் மறைமுகமாக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சூரியனில் இருந்து வீசப்படும் கதிர்களின் நேரடித் தாக்குதலுக்கு பூமி உட்படுகிறது. இதனால் மனிதன் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறான். மழைவீழ்ச்சி குறைகிறது. வறட்சி ஏற்படுகிறது. காடுகள் பரந்தளவில் அழிக்கப்படுவதனால் மண் உலர்ந்து வெடிப்பு ஏற்பட்டு அதனூடாக மழை காலத்தில் நீரானது உட்சென்று அரிப்பை ஏற்படுத்துகிறது. மண்ணில் நீர் தேங்கி நிற்காது கழுவு நீராக வெளியேறுகிறது. அதனால் மண்ணிலுள்ள பசளை சேதனப்பொருட்கள் கனியுப்புக்கள் கழுவுப்பட்டு அசேதனப் பொருளாகி மண்ணின் வளம் குறைகிறது. நீரினால் அடித்துச்செல்லப்படும் மண் ஆறுகளிலும் குளங்களிலும் படிவதால் அவற்றின் ஆழம் குறைந்து விடுகிறது. மழைகாலங்களில் இவற்றில் நீர் பாய்ந்து வெள்ளப்பெருக்கை ஏற்படுத்துகிறது.

எமது பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கை. குடியிருப்புகள். பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றிற்காக பெருந்தொகையான காடுகள் அழிக்கப்பட்டுவருகின்றன.

எனவே எமது பிரதேசத்தின் காட்டுவளங்களை அழித்து இயற்கைச் சமநிலையை தளம்பலுக்கு உட்படுத்தாமல் முடியுமானவரையில் காடுகளைப் பாதுகாப்பது அவசியம். சூழலை மீள வளமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மனித நடவடிக்கையினால் சிக்கனமற்ற முறையில் மேற் கொள்ளப்பட்ட வனவளங்களின் அழிவினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் பல. இது வனங்களின் பாதுகாப்பு அவசியத்தை உணர்த்தியமையால் ஒவ்வொரு வருடமும் ஜூன் 5ம் திகதி சுற்றாடல் பாதுகாப்பு தினமாக பிரகடனப் படுத்தப்பட்டது. இது மக்களின் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஒரு சிறந்த திட்டமாக நின்று வழிகாட்டுகிறது. வனவளம் பேணுவதன் மூலம் சூழல் சமநிலையைப் பேணுவது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமையாகும். இதன் மூலம் வளமான ஒரு சமுதாயம் உருவாகும்.


## நிர்மாண உத்தரவாத நிதியம் (CONSTRUCTION GUARANTEE FUND)

வடகிழக்கு மாகான நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் வசதி கருதி நிர்மாண உத்தரவாத நிதியமானது தனது செயற்பாட்டு மையங்களை இம் மாகாணத்தில் நிறுவியுள்ளது.

பிணைமுறி மற்றும் உத்தரவாதமும் பெறுவதற்கான விண்ணப்பங்கள் கையேற்று ஒரு வாரத்திற்குள் பிணைமுறி மற்றும் உத்தரவாதங்கள் செயற்பாட்டு மையங்களில் அல்லது தலைமைக் காரியாலயத்தில் வழங்கப்படும்.

### செயற்பாட்டு மையங்கள்

**யாழ்ப்பாணம்-**

பிரதம நிறைவேற்று அலுவலர், யாழ் வர்த்தக தொழிற்துறைமன்றம்,
17,செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021-222-6609
ஈ-மெயில் - cciy@sltnet.lk

**கிளிநொச்சி-**

வடபிராந்திய நிர்மாணிகள் சங்கம்,
கண்டி வீதி, கிளிநொச்சி.

**திருகோணமலை-**

தேசிய நிர்மாணிகள் சங்க கிழக்கு மாகாண அலுவலகம்,
திருஞான சம்பந்தர் வீதி,
156 1/1, கிறீன் வீதி, திருகோணமலை.
தொலைபேசி - 026-222-1025

### தலைமை அலுவலகம்

பிரதம நிறைவேற்று அலுவலர்,
நிர்மாண உத்தரவாத நிதியம்,
தளம் 1, 'சவ்சிறிபாயா',
123, விஜயராம மாவத்தை,
கொழும்பு - 07.
தொலைபேசி - 011-2673087/8
தொலைநகல் - 011-2670966
ஈமெயில் - cgf@sltnet.lk அல்லது saarc cic@mail.cosist.net

(சி-8836)


படைப்பாளிகளிடமிருந்து
வெள்ளிநாதத்திற்கு
ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

- சிறுகதை
- கவிதை
- கட்டுரை
- பயண அனுபவங்கள்
- கள அனுபவங்கள்

என உங்களால் வெள்ளிநாதத்தை
அலங்கரிக்க கூடிய வகையில் எழுதப்படும்
ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

நீங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர்,
வெள்ளிநாதம்,
மாழ்சாலை, கிளிநொச்சி.


### இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன்
**தயாருபன் - லக்சிதன்**

முறிப்பு - முள்ளியவளையில் அப்பா, அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், உறவினர்களோடு தனது இரண்டாவது பிறந்த தினத்தை 26/12/2003 வெள்ளிக்கிழமை வெகு சிறப்புடன் கொண்டாடுகின்றார்.

இவரை ஜெயபுரம் அப்பப்பா, அப்பம்மா, தேவன் சித்தப்பா, லதன்மாமா, அத்தைமார், பூநகரி பெரியப்பாமார், பெரியம்மாமார். பெரிய அண்ணாமார், பெரிய அக்காமார், அனைவரும் இறைவன் துணை வேண்டி சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் :-
அப்பப்பா,
பொ. தங்கராசா, செயலாளர்,
முழங்காவில் தேசிய எழுச்சிப் பேரவை.

(சி - 8746)

வெள்ளிநாதத்தை
இலங்கை.
எங்கிலும் பெற
வெள்ளிநாதத்தின்
சந்தாதாரராகுங்கள்
ஆண்டுச்சந்தா - 750/=
அரையாண்டுச் சந்தா - 400/=
தபால் மூலம் எல்லா இடங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

### அழகன் பதிப்பகம்

கணனி முறையில்
சகல விதமான அச்சு
வேலைகளுக்கும்
குறித்த நேரத்தில் செய்து
கொள்ள நாடுங்கள்

யாழ்சாலை,
கிளிநொச்சி.




## சமாதானம்

வெள்ளை மனம் உள்ள சமாதானமே
உன் கொள்கை இன்பத்தை கொள்ளை
கொள்ள நிலையான நின்மதியான சமாதானம்
எப்போது வருவாய் மொட்டாய்
மலர்ந்த சமாதான மலராய் எப்போது
மலர்ந்திடுவாய் சமாதானமே

கனிமதி.



பேணியில் தேனீர்
குடித்தகாலம் போய்
பிள்ளை் இப்ப போத்தலில்
உள்ள சாராயம் - குடிக்குது
நாகரிகம் அதுதானாம்.......
அட நான் ஆம்பிள என்று
வீம்புடனே விழுகிறாய்
வீதி எங்கும்!
உருளுகிறாய்........
அண்ணாவும் அக்காவும்
அங்கு இங்கு என்று
ஆயிரத்து எட்டு
வெட்டுவைத்த உடுப்பு
வளைவுகளும் நெளிவுகளும்
ஏன் சுளிவுகளும் தான்.....

வ.சுதர்சன்.



சொல்வதெல்லாம் கேட்டு
மனதுக்குள்ளே போட்டு
போடுவதேனோ பூ ட்டு
வாதம் புரிந்தால் அச்சம்
மானம் தானே மிச்சம்
மனதுக்குள் இதையே எண்ணி
இருந்ததால் சூழவே எச்சம்
அடங்கிக் கிடத்தல் முறையோ?
ஆழப்பிறந்தவள் நீயன்றோ!
வீரப் புதுமைப் பெண்ணே!
இனியும் நெஞ்சுள் அழுது
இனிமை தொலைத்தே தொழுது
போவதினிதா பொழுது
புவனமே புகழ்ந்திட எழுது
பொருளற்ற யாவுமே பழுது.

யா. வாசுகி.

நாளையென்பது
நமக்கல்ல நண்பா
நாளைய புலர்வுகள் கூட
நமக்கிரவாகலாம்!
நலமாகும் புத்தாண்டில் - நம்
நாட்டுக்கொருவேலி
அமைத்திட வேண்டும் - அதை
அமைத்திட நாமேயின்று
அரும்பாடுபட்டுழைத்திட வேண்டும் - நீ
அதற்காய் விரைந்துவா..
காற்றுள்ளபோதே - 'நாம்'
தூற்றிக் கொள்வோம்.

சாந்தனூரப்பன்



## சொல்லவேண்டிவந்த பொய்கள்

**நான்** பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த காலப் பகுதியில் சில ஆசிரியர்களுக்கு பட்டப்பெயர்கள் வைத்திருந்தோம்.

அவர்களது பட்டப் பெயர் களை எம் வகுப்பு மாணவர்கள் மட்டுமே பயன்படுத்துவோம். இவ்வாறு எமது ஆசிரியர் ஒருவருக்கு "மின்னி மின்னி" என்ற பட்டம்.

ஒருநாள் அவர் வகுப்புக்கு வரும்போது குறும்புக்கார மாணவன் ஒருவன் கரும்பலகையில் ஒரு மின்னி மின்னி பூச்சியின் படத்தை கீறி அதன் தலையில் மின்னி மின்னி என எழுதி விட்டான்.

வகுப்புக்கு வந்த ஆசிரியருக்கு அதனை பார்த்ததும் கோபம் வந்துவிட்டது. நாம் அவருக்கு வைத்த பட்டப்பெயர் எப்படியோ வெளியே கசிந்து விட்டது.

கரும்பலகையை பார்த்து விட்டு உடனே போய் அதிபரிடம் விடயத்தைக் கூறி அதிபரையும் கூட்டிவந்துவிட்டார். எமது அதிபரோ மிகவும் பொல்லாதவர். எம் எல்லோருக்கும் ஒரே பயமாக இருந்தது.

அதிபர் எமது வகுப்பிற்கு வந்து அவ்வேலையை செய்தது யார் எனக்கேட்டார். உண்மையைக் கூறினால் தண்டனை இல்லை என்றார்.

ஆசிரியர் கோபத்துடன் வெளியேறியபோது என்ன பொய் சொல்லவேண்டும் என எல்லோரும் முன்னரே சேர்ந்து திட்டமிட்டு விட்டோம். எமது வகுப்பில் மிகவும் அமைதியான மாணவனான தீபன் அதிபருக்கு முன்னால் வந்து "அது சேர் எங்களுக்கு முதல் பாடம் விஞ்ஞானம் நடந்தது. அதில பூச்சிகள் (பறப்பன) பற்றி படித்தனாங்கள். அதில "மின்னி மின்னி" பூச்சியின் சிறப்பியல்பு பற்றி படித்த தால சிறப்பான பூச்சி என்றதால அதின்ர படத்தை கீறினாங்கள். அழிக்க மறந்துவிட்டோம்" என பணிவாகக் கூற அதிபரும் ஏற்று சென்றுவிட்டார்.

திட்டமிட்டு சொன்ன பொய்யால் அன்றைக்கு தப்பி விட்டோம். விஞ்ஞான பாடம் நடந்ததால் தப்பினோம்.

R.கீதன்

## ஊக்கமாத்திரை

# புதிய சிந்தனைகள் வேண்டும்

பழையன கழிதலும் புதியன புகுதலும் இன்று மிக வேகமாக நடைமுறைபடுத்தப்பட்டுக்கொண்டு செல்கிறது. இதில் புதியன பல நிகழ வேண்டுமாயின் புதிய புதிய சிந்தனைகள் உதிக்க வேண்டும். அப்போது பழையன தானாகவே தன்னை நியாயமான முறையில் விடுவித்துக்கொள்ளக்கூடும்.

ஆகவே புதிய சிந்தனைகளை உருவாக்குபவர்கள் யார்? என்ற கேள்வி இங்கே எழுந்து நிற்பது இயல்பானதே. இதற்கான பதில்தான் என்ன? அதைக்கண்டு கொள்வதற்காகவே முயற்சிக்க வேண்டியுள்ளது.

சாதாரணமாக இன்று எங்கு. எந்தச்சூழ்நிலைகளை எடுத்துப்பார்க்கினும் இளைய சமூகத்தினர் உளரீதியாகவும். ஏன் உடல்ரீதியாகவும் கூட அடக்கி வைக்கப்படுகின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. கூடுதலாகப் பெற்றோர்களே இதில் முக்கிய பங்கு வகிக்கின்றதாகத் தெரிகிறது.

பெற்றோர் பிள்ளைகளை எந்த நோக்கத்தோடு அடக்கிவைக் கின்றார்கள்? தங்களுடைய எண்ணத்தின் படியேதான் அவர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று ஏன் கருது கிறார்கள்? இதற்கான பதிலைக்கண்டு தெளிவோமாயின் புதிய சிந்தனைகள் உருவாகுவதில் உள்ள தடைகளை விலக்கிக் கொள்ள முடியும்.

எந்தப் பெற்றோரும் தமது பிள்ளைகள் தங்கள் சொல்லுக்குப் பணிந்து நடக்கவேண்டுமென்று நினைத்தால் அது நியாயமானதே. ஆனால் எந்தச்சொல்லுக்கு. எந்தச் செயலுக்குப் பணிந்து நடக்கவேண்டுமென் பதே சிந்திக்கவேண்டியது.

பிள்ளைகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்ற பெற்றோர். தாம் சிறு பராயத்தில் நடந்து கொண்டது போலத் தமதுபிள்ளைகளும் இருக்க வேண்டுமென்று விரும்பு கிறார்களா? அல்லது தாங்கள் செய்தது போலன்றி. தம்முடைய நடத்தைகள் போலன்றி வித்தியாசமாக வரவேண்டுமென்று விரும்புகின்றார்களா? அல்லது தங்களுக்குப் பிடித்தமான இன்னொருவரைப்போல அவர்களை ஆக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா? இதில் எது சரியானதாக இருக்கும்.



இப்படிப் பல வழிகளில் நாம் சிந்தித்துப்பார்க்கினும். பிள்ளைகளை அவர்களது இயல்பான உளவளர்ச்சி நிலையிலிருந்து மாற்றி விடுகின்றோம் என்பதே உண்மையானதாகும். நாளும் பொழுதும் அவர்களின் இயல்பான மன உணர்வுகளை. அவர்களுடைய மனதிலிருந்து பொங்கிவழிகின்ற புதுமையான சிந்தனைகளை மழுங்கடிக்க செய்கின்றோம் என்பதே இதற்கான முடிவானதும் உறுதியானதுமான பதிலாகும்.

இன்னொரு வகையில் பார்த்தால், ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளை வளர்க்கின்ற முறையை வகுத்துக்கொள்கிறார்களே தவிர. அவர்கள் உண்மையிலேயே தாங்கள் நினைக்கின்றமாதிரி. தாங்கள் விரும்புகின்ற மாதிரி நடந்து கொள்கின்றார்களா என்பது அவர்களால் அறிந்துகொள்ள முடியாததாகவே உள்ளது. மாறாக அவர்களுடைய செயல்களை. அது சரியானதோ இல்லைத் தவறானதோ அதைச் சமூகத்திலுள்ள வேறு எவராலோதான் கண்டு கொள்ளக்கூடியதாக இருக்க முடிகின்றது.

அநேகமான பெற்றோர் பிள்ளைகளைப் படியுங்கள் படியுங்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே தவிர. அவர்கள் படிப்பதற்கான புறநிலையை அழுத்தமற்ற மன நிலையை மகிழ்ச்சியும் செயலூக்கமும் கொண்ட மனநிலையை பேணுகிறார்களா என்றால் இல்லை என்பது தங்களது இளமைப் பராயத்தை நினைவுபடுத்தினாலே தெரியும். இந்த நிலையில் கூட பிள்ளைகள் தங்களுக்கு கட்டுப் பட்டிருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். பிள்ளைப் பருவத்தில் மட்டுமல்ல இளைஞர்கள் யுவதிகளாக ஆன பின்னரும் கூட அதையே விரும்புகிறார்கள். இதனால் பிள்ளைகள் தமது வாழ்நாளில் பெரும் பகுதியை அடக்குமுறைக்குள்ளே. சுதந்திரமான உளவளர்ச்சியின்றிக் கழிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

இந்த நிலை நீடித்து வளர்வதனால்தான். அதிகமானோர் தமது பொறுப்புக்களைச் சரிவரச் செய்யமுடியாதும். அடுத்தவரைத் தேர்ந்தெடுத்து தமது இலட்சியத்தை நிறைவேற்ற முடியாதும் உள்ளனர்.

ஆகவே எமது பிள்ளைகளின் சிந்தனைகளை மழுங்கடிக்காது. அவர்களை சுயசிந்தனையுடையவர்களாக. உன்னதமான செயல் ஆற்றல் உடையவர்களாக வளர்த்தெடுப்பதில் பெற்றோர் தடைக்கற்களாக இல்லாது தம்மை. தமது வேண்டாத்தனமான செயற்பாடுகளிலிருந்து விடுவித்துக் கொள்வது நன்மை பயப்பதாக இருக்கும் என்பது பெற்றவர் எல்லோரதும் தார்மீகப் பொறுப்பாக இருக்கட்டும்.

மாவன்னா

## குறுக்கெழுத்துப்போட்டி - 51

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 03 | | [படம்] | 05 | | |
| | 09 | | 11 | | | |
| | | | 18 | | | |
| [படம்] | | [படம்] | | 26 | | |
| 29 | | 31 | | | | |
| | | | | 40 | | |
| | | | 46 | | | |

பெயர்:-..............................
முகவரி:-..............................
..............................
..............................

### இடமிருந்து வலம்

01. மனைவி.
05. இரகசும்.
11. நெருப்பு.
18. அலங்காரம்.
26. அச்சம்.
31. குற்றத்திற்கு விதிக்கப்படுவது.
40. இரத்தம்.
46. பொறுமைக்கு இவரைக் குறிப்பிடுவர்

### மேலிருந்து கீழ்

01. நீர் வேட்கை.
03. கை(தலைகீழாகவுள்ளது)
09. செருக்கு.
18. உடன்படிக்கை (இறுதி எழுத்தை இழந்துள்ளது)
29. சாப்பாடு.
31. குழந்தைகளிடம் செலுத்த வேண்டியது.
40. வியாழன்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.49 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. காணிக்கை.
06. பதி.
08. மண்டலம்.
16. அகங்காரம்.
24. தியாகம்.
30. கிரகம்.
39. இரதம்.
46. கீரி.

**மேலிருந்து கீழ்**

01. காமதேனு.
02. அண்ணி.
07. திடம்.
17. கதிரவன்.
30. கிருபை.
35. இரவு.
36. கரி

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.51
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.49 இன் பரிசுக்குரியவர்

**நா. அச்சுதன்,**
**மு/யோகபுரம் ம.வி,**
**யோகபுரம்,**
**மல்லாவி.**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.49 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. வே. சுகிர்தா, கலவெட்டித்திடல், புளியம்பொக்கணை.
02. சு. சோபியா, 8ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
03. தி.சிவரூபன், ஆறுமுகம்வீதி, வட்டக்கச்சி.
04. கு. அரசேஸ்வரன், கலைமகள்வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
05. சு.சிவகாமி, கிளிநொச்சி.
06. த. மனோகரன், குருமன்காடு, வவுனியா.

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய நிலையில் ரணில் பல்வேறுஅரசியல் அழுத்தங்களுக்குள் சிக்கி திணறவேண்டிய நிலையில், இருக்கவேண்டியவரே... அவரை தனது அதிரடி நடவடிக்கைகளால் அவற்றிலிருந்து தப்பவைத்த சந்திரிகா, அவர் சுமக்கவேண்டிய அரசியல் துன்பங்கள் அனைத்தையும் தன் தலையில் தானே ஏற்றிக் கொண்டு தடுமாறும் ஒருவராகிவிட்டார்.

அதுமட்டுமல்லாது ஒரேதவறை திரும்பவும் செய்யவேண்டிய நிலைக்கு வந்துவிட்டார் என்றே கூறவேண்டும்.

முதல் தவறை, அதாவது அமைச்சுப் பறிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவரின் தற்போதைய, அரசியல் சகாக்களான - விரும்பத்தகாத அதேசமயம், நிராகரிக்கவும் முடியாத கூட்டாளிகளை - முன்னாள் இடதுசாரித் தோழர்களான ஜே.வி.பியினரும், ஏனைய பேரினவாதக் குழுக்கள், அல்லது கும்பல்களுமே (இவைகளை அரசியல் கட்சிகள் என்று கூறமுடியாது) கொடுத்த இடைவிடாத அழுத்தங்களும், சமாதானத்தை எதிர்த்துக் கொண்டே ஆதாிப்பதாக பாசாங்கு செய்யும் சில மேலாதிக்க - வல்லாதிக்க சக்திகள் கொடுத்த அபத்தமான மறைமுக ஆலோசனைகளுமே காரணமாகும்.

உள்சக்திகளின் நோக்கம் ரணிலின் ஆட்சிக்கு நெருக்கடிகளைக் கொடுத்து அதனை பதவியிலிருந்து அகற்றுவதுதான் என்றால் வெளிசக்தியின் நோக்கம் மேற்கு - மற்றும் ஐரோப்பிய சமூகத்தின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதேயாகும்.

ஆகவே ஒரே நடவடிக்கையின் மூலம், இரு சக்திகளையும் அவரவரின் ஆலோசனை மற்றும் விருப்பத்திற்கேற்ப திருப்தி செய்து சமாளிக்கமுயன்ற சந்திரிகாவின் யுக்திகள் அவரை பொறியொன்றிற்குள் தள்ளும் வியூகமாகவே மாறிவருகின்றன.

ஏற்கனவே மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறித்து ரணிலின் அரசில் நிச்சயமற்ற அதிகாரபூர்வமற்ற அதிகாரங்களைக் கூட பறித்த சந்திரிகா தற்போது உள்துறை அமைச்சின் கீழ்லுள்ள அதிகாரங்களையும் கைப்பற்றிக் கொண்டதன் மூலம், அதன் உள்ளக செயற்பாடுகள் அனைத்தையும் முற்றாக முடக்கிவிட்டார் என்பதில் ஐயமில்லை.

இப்போது சிறிலங்காவின் பிரதமர் ரணில் சந்திரிகாவின் கையில் ஒரு றப்பர் முத்திரையாகிவிட்டார் என்றே கூறவேண்டும்.

ஏற்கனவே சமாதான முன்னெடுப்புத் தொடர்பான விடயங்களை மேற்கொள்வதற்கான அதிகாரபலம் தன்னிடம் கிடையாது என்று ரணில் பகிரங்கமாகவே தெரிவித்துள்ள நிலையில் தொடர்ந்தும் பிரதமர் என்ன பெயருடன் ஒரு வெற்றுப் பதவியில் அவர் இருக்க விரும்புவதன் அர்த்தம் விளங்குவதாக இல்லை.

இன்றைய நிலையில் சனாதிபதியை எதிர்த்து அறிக்கைவிடும் ஒருவராக மட்டுமே ரணில் விளங்குகிறார். அவரால் எந்தத் தீர்மானத்தையும், சந்திரிகாவுக்குப் பிடிக்காத எந்தத் திட்டத்தையும் மேற்கொள்ள முடியாது. மக்கள் அவருக்குக் கொடுத்த ஆணையை அவரால் நிறைவேற்ற முடியாது. ஆலயங்களில் உள்ள உற்சவ மூர்த்தியாக, அலங்காரமாக பிரதமர் என்ற வெறும் பெயருடன் உலாவரமுடியும் அவ்வளவுதான்.

இந்த வகையில் சந்திரிகா ஒரு தற்காலிகமான வெற்றியொன்றை தன்னுடைய அதிகாரத்தின் மூலம் மட்டும் பெற்றுக் கொண்டுள்ளார் எனினும். அவரால் இதனை எத்தனை காலத்திற்கு தக்கவைக்க முடியும் என்பதே இப்போதுள்ள கேள்வி.

எல்லா அமைச்சையும் தன்வசம் எடுத்துக் கொண்டாலும், நிதி அமைச்சையும் வெளியுறவு அமைச்சையும் தற்போதைக்கு பொறுப்பேற்கும் தைரியம் அவருக்குக்.கிடையாது என்றே கூறவேண்டும்.

நிதி அமைச்சுப் பொறுப்பை ரணிலிடமிருந்து அபகரித்தால் சிறிலங்காவின் அரசைக்கொண்டு நடத்தத்தேவையான நிதியை வழங்கும் நாடுகள் - அதாவது கடன் வழங்கும் நாடுகள் சந்திரிகாவுக்கு சமாதானத்தைக் குழப்பிவருபவர் என்றவகையில் கையை விரித்துவிடும் என்பது உண்மை நிதி வறண்ட அரசையும் - ஏன் யுத்தத்தையும்கூட அவரால் தொடர்ந்து நடத்தமுடியாது போய் விடும்

அப்படி நிதியமைச்சை அபகரித்தால் மீண்டும் அவர் மேற்குலகினதும், ஐரோப்பிய சமூகத்தினதும் காலடியில் பிச்சா பாத்திரத்துடன்போய் விழவேண்டியது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அவர் அப்படி விழுந்தால் அவர்கள் மீண்டும் சமாதானத்தை விட்ட இடத்திலிருந்து தொடர வலியுறுத்தப்படுவார்.

அது சந்திரிகாவால் முடியாது, அவர் அப்படி சமாதானத்தை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தால் அது அவருக்குக் கிடைத்த தோல்வியாகிவிடும்.

அதேபோல்தான் வெளியுறவு அமைச்சும், சர்வதேசமும் சமாதானத்தை வலியுறுத்துகிறது. சமாதானத்தின் பெயரால் சிறிலங்காவை மீள் கட்டமைக்க உதவமுன்வர தயாராகவுள்ளது. இதனால் சமாதானத்தை முன்னெடுப்பதாகக் கூறும் ரணிலை அச்சமூகம் ஆதரித்து நிற்கிறது.

வெளியுறவு அமைச்சை அபகரித்தால் சர்வதேச சமூகம் முன்புபோல் சந்திரிகாவினதும் அவரது அருமை ஆலோசகர் கதிர்காமரதும் பேச்சுக்களை நம்பத்தயாராக இல்லாத நிலையில், சிறிலங்காவுக்கான தமது ஆதரவு உதவிகளை நிறுத்திவிடும் என்பதும் சாத்தியமான விடயமே.

ஆகவே சந்திரிகா இந்த அமைச்சுக்களில் இப்போதைக்குக் கைவைக்கும் சாத்தியமும் இல்லை.

இந்த நிலையில் சந்திரிகா அடுத்து என்ன செய்வார்?

ரணில் தொடர்ந்தும் ஒரு 'பொம்மை பிரதமாராகவே இருப்பாரா?

என்கின்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதவைகளாகும் ●


## தேடப்படுகிறார்

1973ம் ஆண்டு பிறந்தவரும், யாழ் முத்துத்தம்பி பாடசாலையில் கல்வி கற்று பின் முத்தையன்கட்டில் பெற்றோருடன் வசித்து வந்தவரான மணிமகேஸ்வரி/ மணிமகேஸ் என்பவரை ஆறுமுகம் அருணகிரிநாதன் என்பவர் தேடுகிறார்.

இவரைப்பற்றி அறிந்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்திற்கு அறியத்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**யாழில்**
**ஆறுமுகம், ஆண்கள் விடுதி,**
**முத்துத்தம்பி வித்தியாலயம்,**
**திருநெல்வேலி.**
T.P. - 0602 212500
0776147062

**சுவிஸ்**
A.ARUNASALAM
ANCIEN - STAND - 20
1018 LAUSANNE
SWISS.
CELL. 004179397926.
FAX. 00416473143.

(4001)


## படத்திற்கு மெருகூட்டுங்கள் –49



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –49

.................................................................

.................................................................

.................................................................

.................................................................

பெயர் : .................................................

முகவரி : .................................................

.................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –48



த.கலைஞன்,
திருவையாறு,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

வேரிழந்து போன தளிரிற்கு உயிர்
கொடுக்கும் உறவே! – இந்த
பாரினிலே உனக்கு நிகர் யாருண்டு.
காலையிலே உதிக்கும் ஒளியே நீதான்.

### பாராட்டுக்குரிய வரிகள்

*சிங்கப் படைகளின் தீண்டலினால் - உங்கள்*
*தங்கத் தாயை இழந்தீரோ*
*சிந்தை கலங்கி திரியாதீர் - "எங்கள்*
*தலைவன் இருக்கின்றான் கலங்காதீர்.*

கு.தமிழ்ப்பிரியா,
கிளிநொச்சி.

*பூத்துக்காயாகவேண்டிய இளம் மலர்கள் இவை.*
*மொட்டிலேயே கருகிக்கொண்டிருக்கின்றன.*
*ஊரிழந்து, உறவிழந்து, காலிழந்த உறவோடு*
*இடிந்தமதவில் காத்திருக்கும் சமாதானத்தின்அநாதைகள்.*

நிஷா இராமச்சந்திரன்,
இராமநாதபுரம்.

*வறுமை தந்த துயரல்ல இது எம் தேசத்திற்குள்*
*வந்த கொடியவன் இட்டவிலங்கிது*
*இன்று ஊர்இழந்து உறவிழந்து*
*தெருவின் ஓரமதில் அநாதையாய்.*

த.கோகுலன்,
புளியங்குளம்.

*அநாதைகள் இல்லை நாங்கள்*
*அநாதைகளாக ஆக்கப்பட்டோம். - நாம்*
*குடியிருந்த இடமெல்லாம் இப்போது*
*கொடிய இடமாகி அடையாளமே தெரியவில்லை.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*உடைந்த மதில் மீது*
*உட்கார்ந்து இருப்பவனே:*
*படையின் கோரத்துக்கு*
*விடைகொடுப்பான் புலிமைந்தன்.*


எஸ். சிவா,
பருத்தித்துறை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.










இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.